


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**
*திருவள்ளுவராண்டு 2049*
*மலர் - 10 இதழ் - 2 - மே - 2018*

கௌரவ ஆசிரியர்
முனைவர் **அ.அ.மணவாளன்**

ஆசிரியர்
**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்
**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு
*எஸ்.சண்முகநாதன்*
*தி.ரெத்தினசபாபதி*
*அ.கணேசன்*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி.சரவணன்*

இதழ் வடிவமைப்பு
*ஞா.சரிதா*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
**இணைய தள முகவரி: www.keetru.com**

**தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00**
**மாணவர்களுக்கு ₹ 300.00 அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00**

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
*என்ற பெயரில் அனுப்பலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600098.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## பொருளடக்கம்


படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன் - 3

பண்டைய நோய்த் தடுப்பு முறைகளும் விளையாட்டுகளும்
டாக்டர் சு.நரேந்திரன் - 11

பனுவல் தழுவிய படைப்பு
ஆ.கார்த்திகேயன் - 17

தன்னார்வ இலக்கிய விழிப்புணர்வு
சி.ஆர்.ரவீந்திரன் - 23

திரு.வி.க. பார்வையில் பௌத்தம்
அ.மார்க்ஸ் - 27

சூழல் அக்கறையுடன் பேசும் நூல்
பி. ஆர். நடராஜன் - 35

தமிழகத்தில் வரலாற்றுத் தொடக்ககால நெசவுத் தொழில்
ந.அதியமான் - த.ஆதித்தன் - 41

சொல் தானியங்கள் சுமந்தலையும் பயணி
ப.இராஜராஜேஸ்வரி - 51

பட்டுக்கோட்டையார் பாடல்களில் சமுதாயப் பார்வை
ப.இந்திரா - 53

முத்தன்பள்ளம் - நிகழ்காலத்தின் கீழடி!
இரா.மோகன்ராஜன் - 57

சாகித்ய அகடமியின் குழந்தை இலக்கியத் தொகுப்புகள் இரண்டு
சுகுமாரன் - 63

பாவேந்தர் படைப்புகளில் திராவிடத்தின் வெளிப்பாடு
முனைவர் ஜே.ஜெகத்ரட்சகன் - 67

தமிழ்த் தூதுவர் தனிநாயகம் அடிகள்
பி.தயாளன் - 70

# படித்துப் பாருங்களேன்...

ஆ. சிவசுப்பிரமணியன்



**பீகாரில் இருந்து தீகார் வரை** - கன்னையா குமார் (2016)

**From Bihar To Tihar** - Kanhaiya Kumar

Juggernaut Books, New Delhi - 110 049

இந்தியாவின் புகழ் வாய்ந்த மாணவர் தலைவரான இளம்தோழர் கன்னையா குமார் தம் நினைவுகளை இந்நூலில் சுயசரிதையாகப் பதிவு செய்துள்ளார். பீகார் மாநிலத்தில் உள்ள கிராமம் ஒன்றில் பிறந்து வளர்ந்து, பாட்னா நகரில் பள்ளிப் படிப்பை முடித்தவர் கன்னையா குமார். பின் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் மாணவராகச் சேர்ந்து மாணவர் தலைவராகவும் ஆனார். இதுவே அவரை தீகார் சிறைக்கு அனுப்பியது.

அவரது அனுபவங்களின் பிழிவாக இந்நூல் அமைந்துள்ளது.

## குழந்தைப் பருவம்

பீகார் மாநிலத்தின் பாட்னா நகரில் இருந்து பெகுசாரி என்னும் ஊருக்குச் செல்லும் இரயில் பாதையில் மொகாமா, புருனி இரயில் நிலையங்களுக்கு இடையில் உள்ளது, பிகத் என்னும் ஊர் 67,000 மக்கள் தொகையைக் கொண்ட ஒரு பெரிய கிராமம் ஆகும். அரசியல்வாதிகள், அமைச்சர்கள், நீதிபதிகள், ஆளுநர்கள், நிர்வாகிகள், காவல்துறை அதிகாரிகள், விளையாட்டு வீரர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், நடிகர்கள் ஆகிய ஆளுமைகளை உருவாக்கிய சிறப்புக்குரியது.

இக்கிராமத்தில் வாழ்ந்த ஜெய்சங்கர் சிங் - மீனாதேவி இணையரின் இரண்டாவது மகனாகப் பிறந்தவர் கன்னையா குமார். அண்ணன் ஒருவரும் தம்பி ஒருவரும் சகோதரி ஒருவரும் உண்டு. தந்தைக்கு நிரந்தர வேலை எதுவும் கிடையாது. கிராமத்தில் உள்ள அங்கன் வாடியில் தாய் பணியாற்றி வந்தார்.

ஏழ்மையான இக்குடும்பம் கம்யூனிஸ்ட் இயக்கத் துடன் தொடர்பு கொண்டது. தந்தைவழிப் பாட்டனார் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அனுதாபி. புருனி அனல் மின்நிலையத்தில் ஃபோர்மேனாகப் பணியாற்றிய போது ஏ.ஐ.டி.யூ.சி. தொழிற்சங்கத்தில் உறுப்பினராகவும் இருந்துள்ளார். மொத்தக் குடும்பமும் கம்யூனிஸ்ட் கட்சியின் அனுதாபிகளாகவும், தேர்தலில் அக்கட்சிக்கே வாக்களிப்பவராகவும் இருந்தது. ஆனால் கன்னையாவின் தந்தை, துப்பாக்கி முனையில் இருந்தே புரட்சியைக் கொண்டு வரமுடியும் என்று நம்பும் சி.பி.ஐ. (எம்.எல்.) கட்சியின் அனுதாபியாக இருந்தார்.

இக்குடும்பச்சூழலில், உள்ளூர்ப் பள்ளியிலேயே இவரது கல்வி தொடங்கியது. உயர்நிலைப் பள்ளிக் கல்வியை அருகில் உள்ள ஊருக்குச் சென்று பயின்று, பள்ளியிறுதித் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். இத்துடன் இவரது கிராம வாழ்க்கை முடிவுற்றது. கல்லூரிப் படிப்புக்காக பாட்னா நகரை நோக்கி இவரது பயணம் தொடங்கியது.

## பாட்னா வாழ்க்கை

தன் வாழ்க்கையிலேயே முதல்முறையாக நீண்ட தொலைவு இரயில் பயணத்தை கதரா இரயில் நிலையத்தில் இருந்து பாட்னா நோக்கி கன்னையா தொடங்கினார். பாட்னா சென்றதும் தங்குவதற்காக ஏற்பாடு செய்திருந்த 'மித்து விடுதி' என்ற விடுதியைச் சென்றடைந்தார். அதில் மாதம் ரூ.250 வாடகையில் தங்க முடிவு செய்திருந்தார். அவர் தங்கவேண்டிய அறையில் அவருக்கு முன்னதாகவே வேறு ஒருவரும் தங்கியிருந்தார். ஒருவகையில் அவர் தூரத்து உறவினர் தான் என்றாலும் ஏற்கனவே தங்கியிருந்ததன் அடிப் படையில் அகந்தை உணர்வுடனேயே நடந்து கொண்டார். செலவைக் குறைக்கும் நோக்கில் உணவு விடுதிக்குச் செல்லாது, இருவரும் இணைந்தே சமையல் செய்து சாப்பிடலாயினர். பாட்னா நகரின் வாழ்க்கை அச்சுறுத்தும் தன்மையில் இருந்தது.

மாடுகளும், பறவைகளும்தான் குப்பைக் குவியலில் இருந்து உணவு தேடுவதை அவர் இதுவரை கண்டிருந்தார். ஆனால் முதல்முறையாகக் குழந்தைகளும், பெரியவர் களும் குப்பையில் உணவு தேடுவதைப் பாட்னாவில் தான் கண்டார்.

பாட்னா நகரில் தனிப்பயிற்சி நிறுவனங்கள் காளான்களைப் போல் வளர்ந்திருந்தன. இவற்றின் கட்டமைப்பும் கற்றுக்கொடுக்கும் ஆற்றலும் குறைந்த தரத்தில் இருந்தாலும் கட்டணம் மட்டும் அதிகம்தான். பயிற்சி நிறுவனம் ஒன்றிற்குச் சென்று அபிமன்யூ என்ற ஆசிரியரைச் சந்தித்த போது இவரது சொந்த ஊரை அவர் கேட்டறிந்தார். பின்னர்தான் இவரது தந்தை தனக்கு மிகவும் நெருக்கமானவர் என்பதை அவர் அறிந்து கொண்டார். எனவே பயிற்சிக் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டாம் என்று கூறிவிட்டார்.

கணிதப் பயிற்சி ஒருபுறம் இருக்க, ராம் ரத்தன் மகாவித்தியாலயா என்ற உயர்நிலைப்பள்ளியில் இண்டர்மீடியட் வகுப்பில் மாணவரானார். இது வெறும் நுழைவுப் பதிவுதான். வகுப்புகளுக்குச் செல்ல வேண்டியதில்லை. தேர்வு எழுதிவிட்டு, சான்றிதழை வாங்கிச் செல்ல வேண்டியதுதான். ஆனால் பயிற்சி வகுப்பு அப்படியல்ல. நாள்தோறும் சென்று பயில வேண்டும். ஆயினும் பொறியியல் படிப்புக்கான பாடத் திட்ட வகுப்புகளுக்கு இவர் செல்வதில்லை. பொறியியல் படிப்பை மேற்கொள்வதில்லை என்று முடிவு செய் திருந்தார். பொருளாதார நெருக்கடியே இதற்குக் காரணம்.

தன் அறையில் இருந்து படிப்பதிலேயே இவர் அதிக நேரத்தைச் செலவிட்டார். குளிர்சாதனப் பெட்டி களையும், குளிரூட்டும் கருவிகளையும் பழுதுபார்க்கும் தொழில்நுட்பம் பயின்று, பணம் ஈட்டி குடும்பத்திற்கு உதவலாம் என்ற எண்ணம் உருவானது. இதன் பொருட்டு தந்தையின் நண்பர் ஒருவரைக் காணச் சென்றார். அருகிலுள்ள நவாட நகருக்குச் சென்றார். ஆனால் இவ்வெண்ணம் நிறைவேறவில்லை.

•••

பாட்னா நகர வாழ்வில் அரசியல் விவாதங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. தேநீர்விடுதி, பீடாக் கடை, ரயில் பெட்டி, பயணிக்கும் ரிக்ஷா எனப் பல்வேறு இடங்களும் அரசியல் விவாதங்கள் நிகழும் இடமாக விளங்கின. இதன் தாக்கத்தால் இவரும் அரசியல் ஆர்வம் கொண்டவரானார்.

இவர் தங்கியிருந்த வாடகை விடுதியில் மணி பூஷன் என்ற இளைஞர் தங்கியிருந்தார். உருது மொழியில் இளங்கலைப் பட்டப்படிப்பை முடித்திருந்த இவர் ஓர் இந்து. 2002 குஜராத் கலவரத்தின் போது அங்கு சென்ற உண்மையறியும் குழுவில் உறுப்பினராக இருந்தவர். அவர் வாயிலாகக் கேட்டறிந்த கலவரம் தொடர்பான செய்திகள் வலதுசாரி வகுப்புவாதக் கட்சியின் மீதான வெறுப்புணர்வை மேலும் வளர்த்தது. பாட்னா என்ற பெரிய நகரத்தைச் சுற்றித்திரிந்த வழக்கத்தை விட்டொழிக்க இவை தூண்டுதலாய் அமைந்தன.


செய்தித்தாள்கள் வாங்கப் பணமில்லாமையால் மணிபூஷனத்திடம் இருந்து செய்தித்தாள்களைப் பெற்று படிக்கலானார். ஆனால் அது இந்தி மொழியில் வருவது. வாழ்க்கையில் வெற்றிபெற ஆங்கிலச் செய்தித்தாள் படிக்க வேண்டும் என்று அவர் அடிக்கடி கூறுவார். ஆங்கிலச் செய்தித்தாள் வாங்க இவரிடம் காசில்லை. மணிபூஷனம் இவரை, கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று செய்தித்தாள் களையும், புத்தகங்களையும் அங்கு படிக்கச் செய்தார்.

இதன் பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகம் செல்வதை இவர் வழக்கமாகக் கொண்டார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமை அன்றும் வாசகர் வட்டம் அங்குக் கூடியது. இவரும் அதில் பங்கெடுக்கத் தொடங்கினார். இவருக்கு ஏற்கனவே அறிமுகமாயிருந்த மக்கள் நாடகக் குழு (இப்டா) உறுப்பினர்கள், வழக்கறிஞர்கள் மாணவர்கள் ஆகியோருடன் முதியவர் ஒருவரும் அக்கூட்டத்தில் இருந்தார். அம்முதியவரின் பெயர் சிவசங்கர் சர்மா என்பதாகும். இவருடைய கிராமத்திற்கு அம்முதியவர் அடிக்கடி வந்து, "தன் அரசியல் விருப்பங் களை நிறைவேற்றிக்கொள்ள, பி.ஜே.பி. மதத்தைப் பயன்படுத்திக் கொள்கிறது" என்று கூறுவார்.

தொடக்கத்தில் பெரும்பாலும் அமைதியாகவே வாசகர் வட்டக் கூட்டத்தில் இவர் இருந்துள்ளார். 'ஏகாதிபத்தியம்: முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம்' என்ற நூல் குறித்து விவாதித்தபோது இவருக்கு ஒன்றுமே புரியவில்லை. வெட்க உணர்வுடன் அமைதியாக உரையாடல்களைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

வாசகர் வட்டத்தில் இருந்த இவரது நண்பர் ஒருவர், இவரது நிலையை உணர்ந்து இவரைப் புத்தகக் கடை ஒன்றுக்கு அழைத்துச் சென்றார். அங்கு எளிமையான நடையில், படங்களுடன் கூடிய சோவியத் கதைப்புத்தகங்கள், வரலாறு என்பனவற்றைப் படிக்கத் தொடங்கி தன் அறிவை விரிவுபடுத்திக் கொண்டார்.

ஆயினும் குடும்பத்தின் வறுமைச் சூழல் வேலைக்குச் சென்று, குடும்பத்திற்கு உதவத் தூண்டியது. மற்றொரு




பக்கம் அறிவுத் தேட்டம். இவை இரண்டுக்கும் இடையில் மனப்போராட்டம் நிகழ்ந்தது.

இதற்கிடையில் இண்டர்மீடியட் தேர்வில் இரண்டாம் வகுப்பில் இவர் தேர்ச்சிபெற்றார். பின்னர், முறையாக வகுப்புகள் நடக்கும் கல்லூரி ஒன்றில், புவியியல், வரலாறு, சமூகவியல், இந்தி, ஆங்கிலம் ஆகிய பாடங்கள் கொண்ட இளங்கலைப் பட்டப் படிப்பிற்காகச் சேர்ந்தார்.

அக்கல்லூரியில் 'அனைத்திந்திய மாணவர் பெருமன்றம்' என்ற மாணவர் அமைப்புடன் தொடர்பு ஏற்பட்டது. தொடக்கத்தில் தயக்கம் காட்டிய இவர் அதில் ஆர்வத்துடன் பங்கேற்றார். நல்ல பேச்சாளராகவும் விளங்கலானார். பேச்சாற்றல் நுட்பம் குறித்து இவர் குறிப்பிடும் செய்திகள் (பக்கம்.92-93) நினைவில் கொள்ள வேண்டியவை.

படிப்பில் கவனம் செலுத்தும்படி கல்லூரி முதல்வர் இவருக்கு அறிவுரை கூறியதுடன், 'ஜோலோ வாலாக் களிடம்' (ஜோல்னா பை போடுபவர்கள்) இருந்து விலகி இருக்கும்படிக் கூறியதுடன் 'அரசியல் என்பது நேரத்தை வீணடிப்பது' என்றார்.

•••

இளங்கலைப் பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றபின் முதுகலைப்பட்டப் படிப்பில் சேர முடிவு செய்து நாளந்தா திறந்தவெளிப் பல்கலைக்

கழகத்தை, தேர்வு செய்தார். மற்றொரு பக்கம் மத்திய அரசின் தேர்வாணையத் தேர்வு (யூ.பி.எஸ்.சி) எழுத வேண்டும் என்ற அவாவும் இருந்தது.

டில்லி சென்றால் தனிப்பயிற்சி வகுப்பு நடத்தி வருவாய் ஈட்டி, அத்தொகையின் உதவியால் மத்திய அரசின் தேர்வாணையத் தேர்வுக்குப் பயிற்சி தரும் நிறுவனத்திற்குரிய கட்டணத்தைச் செலுத்தலாம் என்பது இவரது திட்டமாக இருந்தது.

**டெல்லி வாழ்க்கை**

பாட்னா நகரில் இருந்து, தன் புத்தகங்கள், கணினி ஆகியவற்றுடன் இரயில் ஏறி 2009-ஆம் ஆண்டில் டெல்லி வந்தடைந்தார் கன்னையா. தன் பொருளாதார நிலைக்கேற்ற அறையைக் கண்டுபிடித்து அங்கு தங்குவதே கடினமான பணியாய் இருந்தது. ஒரு வழியாக குடியிருப்புப் பகுதி ஒன்றில் பீகாரைச் சேர்ந்த தலித் மாணவர் ஒருவருடன் தங்கிக் கொண்டார்.

படிப்பில் கவனம் செலுத்தவும், யூ.பி.எஸ்.சி. தேர்வு எழுதவும் விரும்பியமையால், அரசியல் ஈடுபாட்டைத் தவிர்த்து ஆறுமாதக் காலம் வரை வாழ்ந்து வந்தார். ஆனால் அதன் பின் நிகழ்ந்த இருநிகழ்வுகள் அவரை அரசியலுக்கு இழுத்தன.

'ஜன்சேத்ன பிரகாஷன்' என்ற இடதுசாரி நூல் வெளியீட்டு நிறுவனம் தன் நூல்களை ஊர்தி ஒன்றின் வாயிலாக டெல்லி நகரில் விற்பனை செய்து வந்தது. 2010 ஜனவரி 10-ஆம் நாளன்று டில்லி பல்கலைக்கழக வளாகத்தில் அவ்ஊர்தி புத்தக விற்பனைக்காக நிறுத்தப்பட்டிருந்தது. பாரதிய ஜனதா கட்சியின் மாணவர் அமைப்பான ஏ.பி.வி.பி. (அகில பாரதீய வித்தியார்த்தி பரிஷத்)யின் மாணவ உறுப்பினர்கள், வன்முறையில் ஈடுபட்டு விற்பனையில் ஈடுபட்டிருந்தவர்களைத் தாக்கினர். இதைக் கண்டித்து டில்லி பல்கலைக் கழகத்தின் கலைப்பாடப் பிரிவினர் கண்டனப் பேரணி நடத்தினர். இதில் கன்னையா குமார் கலந்து கொண்டார். புத்தகங்களை விற்பனை செய்த ஊர்தியை மாணவர்கள் தாக்கியது அவருக்கு வியப்பையளித்தது. பல மாணவர்கள் அமைப்புகளும், சமூகச் செயற் பாட்டாளர்களும் இக்கண்டனப் பேரணியில் கலந்து கொண்டார்கள்.

ஏ.பி.வி.பியினர் இவர்களையும் தாக்கினர். இப் பேரணியில் எழுப்பப்பட்ட முழக்கங்கள், பாட்னாவில் எழுப்பப்படும் முழக்கங்களை விட வேறுபட்டு இருப்பதை இவர் உணர்ந்தார். எளிமையும், கலையுணர்வையும் கொண்டு, கோபத்தை வெளிப்படுத்தும் தன்மையில் பாட்னாவில் முழக்கங்கள் எழுப்பப்படும். ஆனால் டில்லியில் கவிதைகளைப் போன்று கவர்வதாக இவை அமைந்தன. இதில் கோப உணர்வு இருந்தாலும் கேட்போரை ஈர்க்கும் முறையிலும், செய்தியை அறிவிக்கும் முறையிலும் இருந்தன.

இதில் கலந்து கொண்டவர்கள் நல்ல ஆடை அணிந்தவர்களாகவும், வளமான குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும் காட்சியளித்தனர். வலதுசாரி ஆபத்தையும் இதற்கு எதிராக மக்களைத் திரட்ட வேண்டிய அவசியத்தையும் இவை உணர்த்தின.

இரண்டாவது நிகழ்வு குடியிருப்புப் பகுதியில் வாழ்ந்த வளம் படைத்தோருக்கும், இவரைப் போல் பீகாரில் இருந்து இடம் பெயர்ந்து வந்து வாழ்வோருக்கும் இடையிலான முரண்பாடு. இதில் உருவான சிறு மோதலையும் அது தீர்க்கப்பட்டதையும் கூறிச் செல்கிறார்.

பாட்னா வாழ்வின்போது, ஏ.ஐ.எஸ்.எஃப் தலைவர் விஸ்வஜீட் கூறும் 'படிப்பதற்காகப் போராடு, மாற்றத்திற்காகப் படி' என்ற தொடர்களை இவர் நினைவு கூர்கிறார்.

•••

இங்கும் வாசகர் வட்டம் ஒன்று மாதம் தோறும் ஒரு சனிக்கிழமையன்று கூடியது. இதில் உறுப்பினர் ஒருவர் கட்டுரை படிக்க அதன் மீது விவாதம் நடைபெறுவது வழக்கமாயிருந்தது.

ஒரு கூட்டத்தில் பிரித்திம்சிங் என்ற பொருளியல் அறிஞர் இந்தியப் பொருளாதாரம் குறித்துக் கட்டுரை படித்தார். இதன் மீதான விவாதத்தில் இவர் பல வினாக்களை எழுப்பினார். அடுத்து, 'வேலையின்மை' என்ற தலைப்பில் கட்டுரை படிக்கும்படி இவரிடம் கூறினர்.

இதன்படி இவர் படித்த கட்டுரை நல்ல வரவேற்பைப் பெற்றது. இக்கட்டுரையில், 'மக்கள் தொகைப் பெருக்கம் குறித்து மார்க்ஸ் கண்டு கொள்ளவில்லை, அவரைப் பொறுத்தளவில் வறுமைக்கான காரணம் செல்வம் ஓர் இடத்தில் குவிவதுதான்' என்ற கருத்தை வெளிப்படுத்தியிருந்தார். அத்துடன், இதே விகிதத்தில் மக்கள் தொகைப் பெருக்கம் நிகழ்ந்தால் நாம் பேரழிவை எதிர்கொள்ள நேரிடும் என்றும் எச்சரித்திருந்தார்.

இக்கூட்டத்திற்கு வந்திருந்த ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகப் பேராசிரியர், சமத்துவமின்மையும், முதலாளித்துவத்தின் பேராசையும்தான் வறுமைக்குக் காரணம், மக்கள் தொகையல்ல என்று குறிப்பிட்டார். இவ்வாசகர் வட்டமானது, பேராசிரியர்கள் மலாக்கர், பிரித்திம்சிங் போன்றவர்களுடன் உரையாடும் வாய்ப்பைத் தந்தது. தம்முடன் கருத்து மாறுபாடு கொண்டாலும் சமமாக நடத்தினார்கள் என்ற உணர்வு இவருக்கு ஏற்பட்டது.

அதே ஆண்டில் டில்லி பல்கலைக்கழகத்தின் மாணவர் பேரவைத் தேர்தலில் ஏ.அய்.எஸ்.எஃப் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்காகத் தேர்தல் பணியில் ஈடுபட்டார். எதிர் அணியில் ஏ.பி.வி.வியும் காங்கிரஸ் கட்சியின் என்.எஸ்.யூ.ஐயும் (நேஷனல் ஸ்டூடண்ட்ஸ் யூனியன் ஆஃப் இந்தியா) இருந்தன. இவை இரண்டும் வெளிப்படையாகவே வாக்குகளுக்காக, மது, பணம் என்ற இரண்டையும் வழங்கின. பீகார் மாணவர்களை ஈர்ப்பதற்காக மனோஜி திவாரி என்ற புகழ்பெற்ற போஜ்புரி பாடகர் வரவழைக்கப்பட்டிருந் தார். திரைப்பட நட்சத்திரங்களின் நிகழ்ச்சியும் ஒருங்கு செய்யப்பட்டிருந்தது.

இத்தகைய சூழலில் ஏ.ஐ.எஸ்.எஃப்பின் வேட் பாளர் ஒருவர் தேர்வு செய்யப்பட்டார். மற்றொரு பக்கம் மார்க்சிய அரசியல் சிந்தனையாளர்களான அனில் ராஜம்வாலே, கிருஷ்ணா ஜா என்பவர்களுடன், சோவியத் வீழ்ச்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தோல்வி குறித்து விவாதிக்கும் வாய்ப்புக்கிட்டியது. இவ்வாறு நேரடி அரசியலில் இவர் இணைய ஆரம்பித்தார்.

இதற்கிடையில் யூ.பி.எஸ்.சி. தேர்வுக்கான பாடத்திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டன. இதன் பொருட்டு புதிய பயிற்சி வகுப்பில் சேரவேண்டிய நிலை. இதற்கான பொருளாதார நிலை இல்லாமையால் தேர்வு எழுதுவதைக் கைவிட நேர்ந்தது.

நாளந்தா திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டப்படிப்பில் இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றார் என்றாலும் அதில் இவருக்கு மனநிறைவில்லை. தொலைதூரக் கல்வியானது கற்றலில் இருந்து தொலைதூரத்தில் வைப்பதாகவே கருதினார். கல்வியாளராக வேண்டும் என்பதே இவரது விருப்பமாக இருந்தது. இதற்கான பொருத்தமான இடமாக ஜே.என்.யூவை அவர் தேர்வு செய்தார்.

•••

### ஜே.என்.யூ வாழ்க்கை

வாசகர் வட்டத்தின் வாயிலாக ஜே.என்.யூவில் ஆப்பிரிக்க இயல் துறையில் பேராசிரியராக இருந்த மலாக்கரின் அறிமுகம் கிடைத்தது. அவரது அறிவுரைப் படி எம்ஃபில் படிப்புக்கான விண்ணப்பத்தில் அத் துறையை, முதலாவதாகத் தேர்வு செய்திருந்தார். இதற்கான நுழைவுத்தேர்வில் வெற்றி பெற்ற பின் ஜவஹர்லால் பல்கலைக்கழகத்தின் மாணவராக நுழைந்தார்.

பல்கலைக்கழகத்தின் மைய நுழைவாயில் வழியாக நுழைந்து இரண்டு கி.மீ. தொலைவில் உள்ள ‘பிரம்ம புத்திரா’ விடுதியை நோக்கி நடந்து சென்ற அனுபவத்தை இவர் அழகுற வருணித்துள்ளார்.

தான் இருக்கும் இடம் டெல்லி என்பதையே இவரால் நம்பமுடியவில்லை. இவர் அங்கு நுழைந்த காலம் மழைக்காலம் என்பதால், சுற்றியுள்ள குன்றுகள் செழிப்பாகவும், பசுமையாகவும் காட்சியளித்தன. சுற்றுப்பாதையில் சிறு கொம்புகளையுடைய மான்களும் மயில்களும் உலாவி மனதை மயக்கும் இடமாகக் காட்சியளித்தது.

இவர் காணச் சென்ற நண்பர் தங்கியிருந்த பிரம்ம புத்திரா விடுதியில் இடமின்மையால் ஜீலம் விடுதிக்கு இவரை அனுப்பிவைத்தார். அன்று இரவை அங்கு கழித்தார். அங்கு தங்கியிருந்த மாணவர்கள் ஏராளமான நூல்களைச் சேகரித்து வைத்திருந்தனர்.

மகளிர்க்கென்று தனியாகவோ ஆண்கள் விடுதியில் ஒரு பகுதியாகவோ தனி விடுதிகள் இருந்தன. ஆண்கள் விடுதிக்குப் பெண்கள் தடையின்றி வந்து சென்றனர். இரவு இரண்டு மணிக்குக்கூட அவர்கள் பயமின்றி நடமாடினர். எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர் களுக்கான நேர்முகத் தேர்வு நடந்து கொண்டிருந்ததால், மாணவர் கூட்டம் மிகுதியாக இருந்தது. இந்நேர்முகத் தேர்வுக்கு வந்த மாணவர்கள் இரு பிரிவுகளாகக் காட்சி யளித்தனர். ஒரு பிரிவினர் கன்னையா போல், இரவல் வாங்கிய இடைவார்கள் காலணிகள் அணிந்தவர்கள். மற்றொரு பிரிவினர் தோளில் ஜோல்னாப் பையுடன் முகம் மழித்தோ, மழியாமலோ எதைப் பற்றியும் அலட்டிக்கொள்ளாதவர்கள்.

நேர்முகத் தேர்வறைக்குள் பதட்டத்துடன் நுழைந்த வுடன், அவர் சேர விரும்பிய துறையினரின் அணுகு முறை அவரது பதட்டத்தைப் போக்குவதாக இருந்தது. இந்தி ஆங்கிலம் என்ற இரண்டில் எந்த மொழியில் பேச விரும்புகிறாய்? என்பதுதான் முதல் வினாவாக அமைந்தது. இவரது தாய்மொழியான இந்தியிலேயே இவர் விரும்பியபடி வினாக்கள் கேட்கப்பட்டன. நேர்முகத் தேர்வில் இளம் அறிஞர் (எம்ஃபில்) படிப்பிற்கு இவர் தேர்வு செய்யப்பட்டார். சட்லஜ் விடுதியில் தங்க இவருக்கு இடம் ஒதுக்கப்பட்டது. மூத்த மாணவர்கள் புதிய மாணவர்கள் என்ற பாகுபாடு அங்கில்லை. இதனால் எவ்விதக் கூச்ச உணர்வோ அச்ச உணர்வோ ஏற்படவில்லை.

ஒருநாள் விடுதி மாணவர்களுடன் நடந்த விவாதத்தில் சற்றுக்கடுமையான சொற்களைப் பயன்படுத்திவிட்டார். அளவு கடந்து பேசிவிட்டதாக நினைத்து வருந்தி மூத்த மாணவரிடம் இவர் மன்னிப்புக் கேட்டார். அதற்கு அம்மாணவரின் எதிர்வினை இவ்வாறு இருந்தது. ‘மன்னிப்புக் கேட்டு என்னைச் சங்கடத்தில் ஆழ்த்தாதே.’

வகுப்பறைகள் வழக்கமான வகுப்பறைகளாகக் காட்சியளிக்கவில்லை. வட்டவடிவான மேசையுடன்

கூடிய வகுப்பறைகள் மாநாட்டு அறைகளை நினை வூட்டின. முதல் நாளன்று ஆசிரியர் நுழைந்தவுடன் மரபுப்படி இவர் எழுந்து நின்றார். 'ஏன் எழுந்து நிற்கிறாய். இது பள்ளிக்கூடமா' என்று ஆசிரியர் கேட்டார். இவரும் வேடிக்கையாக 'ஒருவகையில் இது பள்ளிக்கூடம் தானே!' என்று விடையளித்தார்.

'சர்வதேச ஆய்வுப்பள்ளி' (School of International Studies) என்ற துறையின் பெயரையே இவ்வாறு குறிப் பிட்டார். இவருடைய பதிலைக்கேட்டு நகைத்து விட்டு அமரும்படி ஆசிரியர் கூறினார்.

பெரும்பாலான ஆசிரியர்கள் நட்புணர்வுடனேயே மாணவர்களிடம் நடந்து கொண்டார்கள். தங்களுக்குச் சமமானவர்களாக நினைத்தே உரையாடினார்கள். பல்கலைக்கழக வளாகத்தில் அரசியல் முக்கியத்துவம் பெற்றிருந்தது. வகுப்பறைகளில், கூட்டங்களில், உணவுக் கூடங்களில் என ஒவ்வொரு இடங்களிலும் அரசியல் இடம் பெற்றிருந்தது. 'சாயா'வுக்கும் (தேநீர்) சர்ச்சைகளுக்கும் (விவாதங்களுக்கும்) உரிய இடங்களாக, 'தபாக்கள்' எனப்படும் உணவுக் கூடங்கள் திகழ்ந்தன. இவற்றுள் 'கங்கா தபா' குறிப்பிடத்தக்கதாய் விளங்கியது. தேநீரைவிட விவாதங்களும் உணவைவிடத் தோழமையும் இங்கு முக்கியத்துவம் பெற்றிருந்தன. தோழமையும் தேநீரும் கங்கா தபாவைப் போல் வேறு எங்கும் காண முடியாது.

பெரும்பாலான மாலை நேரத்தை கங்கா தபாவிலேயே இவர் செலவழித்தார். 2014-இல் பிரதமராக மோடி பொறுப்பேற்ற பின்பு ஜே.என்.யூ. நிர்வாகம், விவாதங்களையும் கருத்துப் பரிமாற்றங் களையும் தடுத்து நிறுத்த விரும்பியது. இதன் அடிப் படையில் ஜே.என்.யூவின் தபாக்களை மூடிவிட முடிவெடுத்தது. கருத்துக்களை முன்வைத்து, விவாதிக்கும் பண்பாடு வளரும் இடமாக, தபாக்களை அது கருதியது.

•••

மத்திய அரசின் பொதுத் தேர்வு எழுதும் எண்ணத்தைக் கைவிட்டபின் அரசியல் செயல் பாட்டாளராகும் எண்ணம் உருப்பெற்றது. படித்துக் கொண்டே அரசியலில் ஈடுபடுவதற்கான இடமாக ஜே.என்.யூ விளங்கியது. பல்வேறு அரசியல் கட்சிகளின் சார்புடைய இயக்கங்கள் அங்கு செயல்பட்டு வந்தன. ஏ.பி.வி.பி. (அகில பாரத வித்தியார்த்தி பரிஷத்) என்ற பெயரிலான மாணவர் அமைப்பு பா.ஜ.க. சார்புடைய தாகவும், என்.எஸ்.யூ.ஐ. (நேஷனல் ஸ்டூடன்ஸ் யூனியன்) காங்கிரஸ் சார்புடையதாகவும் செயல்பட்டன. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்புடையதாக ஏ.ஐ.எஸ். எஃப் என்ற அமைப்பும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எஸ்.எஃப்அய் என்ற அமைப்பும் இருந்தன.

இவற்றுள் எந்த அமைப்பைச் சேர்ந்தவன் என்பதே மாணவன் ஒருவனின் அடையாளமாக விளங்கியது. அவன் சார்ந்த மாணவர் அமைப்பு எடுக்கும் முடிவு சரியானதோ தவறானதோ அதை அவன் ஆதரிக்க வேண்டும்.

•••

ஏ.பி.வி.பி. கூட்டம் ஒன்றில் 'சாது' போன்ற தோற்றத்துடன் ஒருவர் உரையாற்றினார். நாம் இந்தப் பிறவியில் செய்யும் கர்மங்களின் பலனையே அடுத்த பிறவியில் அனுபவிக்க நேரிடும் என்று அவர் குறிப் பிட்டார். 'முதல்முறையாக பிரம்மன் உலகத்தைப் படைத்தபோது(!) கர்மம் எதுவும் செய்யாதிருந்த மனிதர்கள் என்ன பயனை அனுபவித்தார்கள்' என்ற கேள்வியை இவர் எழுப்பியபோது இவரது இந்தி உரையைப் பாராட்டிய சாது விடை எதுவும் அளிக்க வில்லை.

இடதுசாரி சார்புடைய மாணவர் அமைப்புகளில் கேள்விகள் கேட்க அனுமதிப்பார்கள் என்றாலும் அதற்கு அளிக்கப்படும் விடைகள் பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்படுவதாகயிராது.

கன்னையா, ஏ.அய்.எஸ்.எஃப்பில் இணைந்து கொண்டார். மேடைப் பேச்சில் ஆர்வம் கொண்ட இவர் இந்த அமைப்பில் இணைந்து தன் பேச்சாற்றலை வளர்த்துக் கொண்டார். ஆனால் ஒரு வேறுபாடு. பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்று, பரிசு வாங்குவதே ஜே.என்.யூவில் சேர்வதற்கு முன் நோக்கமாக இருந்தது. தாம் சார்ந்திருந்த அமைப்பை நோக்கி மாணவர்களை ஈர்ப்பதே இங்கு நோக்கமாக அமைந்தது. கதைகளும் கவிதைகளும் இவரது உரையில் இடம் பெற்றன. ஜே.என்.யூவில் இவரது முதல் உரை மார்ச் 2012இல் நிகழ்ந்தது.

தேர்தல் முறையில் ஜே.என்.யூ. நிர்வாகம் ஏற்படுத்திய மாறுதல்கள், இதற்கு மாணவர்களின் எதிர்ப்பு, தேர்தல்கள் நடத்த உச்சநீதிமன்றம் விதித்த தடை என்பனவற்றால் மாணவர் பேரவைத் தேர்தல் நடைபெறாதிருந்த நிலையில், சில ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் மார்ச் 2012ல் தேர்தல் நடைபெற்றது.

சி.பி.அய்யின் ஏ.அய்.எஸ்.எஃப் அமைப்பும் சி.பி.எம்.மின் எஸ்.எஃப்அய்யும் இணைந்து ஓரணியாகப் போட்டியிட்டன. எதிரணியில் ஏ.பி.வி.பி.யும், அகில இந்திய மாணவர் அமைப்பும் (ஏ.அய்.எஸ்.ஏ) இருந்தன.

இத்தேர்தலில் ஏ.அய்.எஸ்.எஃப் அமைப்பின் சார்பில் கன்னையா குமார் போட்டியிட்டார்.

- தொடரும்

## தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்
## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்

இணைந்து நடத்தும்

# இலக்கியப் போட்டி 2018

## அறிவிப்பு

*30-வது ஆண்டாக படைப்பாளிகளுக்குக் கீழ்க்கண்ட வகைகளுக்குப் போட்டி அறிவிக்கப்படுகிறது:*

1. சிறந்த ஆய்வு நூல்கள்

பேராசிரியர் நா. வானமாமலை நினைவு விருது ● முதுமுனைவர் வ.ஐ. சுப்பிரமணியன் நினைவு விருது

2. சிறந்த மொழிபெயர்ப்பு நூல்கள்

தொ.மு.சி. ரகுநாதன் நினைவு விருது ● அறந்தை நாராயணன் நினைவு விருது

3. சிறந்த நாவல்கள்

அழகியநாயகி அம்மாள் நினைவு விருது ● தென்னமநாடு இராமசாமி–மாரியம்மாள் நினைவு விருது

4. சிறந்த சிறுகதை நூல்கள்

எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி நினைவு விருது ● திருமதி சுந்தரி சாந்திலால் நினைவு விருது

5. சிறந்த சிறுவர் நூல்கள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவு விருது ● எம். கௌதம் நினைவு விருது

6. சிறந்த கவிதை நூல்கள்

கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம் நினைவு விருது ● பின்னையூர் மா. சண்முகம் நினைவு விருது

7. சிறந்த கட்டுரை நூல்கள்

என்.சி.பி.எச். இராதாகிருஷ்ணமூர்த்தி நினைவு விருது ● மேலவாசல் கோ. இராமசாமி நினைவு விருது

8. சிறந்த குறும்படம்

தோழர் பா. முத்துசாமி நினைவு விருது

9. சிறந்த ஆவணப்படம்

பி.என்.பாலு–பாக்கியலட்சுமி நினைவு விருது


- ♦ *பரிசுக்கான (1 - 5) நூல்கள் 2014-க்கு முன் வெளிவந்தவையாக இருக்கலாகாது.*
- ♦ *பிற பரிசுகளுக்கான (6 - 7) நூல்கள் 2017, 2018-களில் வெளிவந்தவையாக இருக்க வேண்டும்.*
- ♦ *பரிசுக்கான 8, 9-வது பிரிவுக்கு 2017, 2018-களில் தயாரிக்கப்பட்ட படங்கள் அனுப்பப்பட வேண்டும்.*
- ♦ *நூல்கள் அச்சுப் படிகளாகவோ கையெழுத்துப் படிகளாகவோ இருக்கலாம். கையெழுத்துப் படிகள் அச்சில் 90 பக்கங்கள் வருமாறு இருக்க வேண்டும்.*
- ♦ *படைப்பாளிகள் இப்போட்டிகளில் 2013-க்குப் பிறகு பரிசு பெற்றவர்களாக இருக்கலாகாது.*
- ♦ *போட்டிக்கென தனி நுழைவுப் படிவம் இல்லை. படைப்பாளிகளின் முகவரி, தன்குறிப்பு, நூல் / குறுந்தகடு பற்றிய சிறுகுறிப்பு ஆகியவற்றுடன் நூலின் / குறுந்தகட்டின் இரு படிகள் அனுப்புக. தொலைத் தொடர்பு எண், மின்னஞ்சல் முகவரி தெரிவிக்க.*
- ♦ *படைப்புகளை **31-07-2018**-க்கு முன் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புக:*

**முனைவர் நா. இராமச்சந்திரன்,**
**55/3, பீட்டர் தெரு, எஸ்.டி.சி. சாலை,**
**பெருமாள்புரம், திருநெல்வேலி – 627007**
*பேச: 9443554805 மின்னஞ்சல்:* nrfolk@gmail.com

**இரா. காமராசு**
மாநிலப் பொதுச் செயலாளர்

**சி. சொக்கலிங்கம்**
மாநிலத் தலைவர்

**நா. இராமச்சந்திரன்**
செயலாளர் – இலக்கியக் குழு



# பண்டைய நோய்த் தடுப்பு முறைகளும் விளையாட்டுகளும்

டாக்டர் சு. நரேந்திரன்

**நோ**ய் நாடி நோய் முதல் நாடுதல் மருத்துவர்களின் பண்பு. இவர்கள் நோயைப் போக்குவதுடன் மீண்டும் அந்நோய் வராதபடி எச்சரிக்கையாய் இருக்கும்படி கூறுபவர்கள்.

> "தாய் முத லிருந்து தன் நோய்முதல் உரைப்ப."
>
> (பெருங்கதை: 1-36:294)

> "இன்றென் வண்ணம் இடை தெரிந்து எண்ணி
> நுண்ணிதின் நோக்கி நோய் முதல் நாடிற்
> பின்னிது காக்கும் பெற்றியரிதென."
>
> (பெருங்கதை : 1-35:57)

> "நோயுற அறியும் மருந்தோ ரன்ன
> வாய்மொழிச் சூழ்ச்சித் தோழற்கு உணர்த்தலின்"
>
> (பெருங்கதை : 4-7 : 152)

பெருங்கதை என்னும் நூலில் அதன் ஆசிரியர் கொங்குவேளிர் என்பவர் நோயை வேருடன் நீக்கும் மருந்தைப் போலத் துன்பங்களை முற்றிலும் நீக்குதற்குரிய வழிகளைக் கூறும் நண்பர்களுக்கு மருந்தை உவமையாகக் கூறியுள்ளார்.

**நல்வாழ்வுக் கொள்கை**

சங்க காலச் சான்றோர் பிறரை வாழ்த்தும் போது நோயற்ற வாழ்வு பெற வேண்டி வாழ்த்தியதை சங்கப் பாடல்களில் காணலாம்.

"நோன்சிலை வேட்டுவ நோயிலை ஆகுக"

(புறம் : 205)

"நோயிலை ஆகுமதி பெரும"

(புறம் : 209)

"நோயிலர் ஆகநின் புதல்வர்"

(புறம் : 196)

"பசி இலவாகுக பிணிசேண் நீங்குக"

(ஐங்கு : 5)

என்று வாழ்த்துவதை மரபாகக் கடைப்பிடித்தவர் என்பதை, புலவர்களின் கூற்றால் அக்கால மக்கள் நோயற்று வாழ விரும்பியதில் கொண்டிருந்த வேட்கையும் பிணி பற்றிய விழிப்புணர்ச்சியும் நன்கு புலனாகிறது.

மக்களின் நலவாழ்வுக் கொள்கையாக, "வரும் முன் காப்போம்," என்பது முக்கியமாகும், இதன் படி,"எய்ட்சு" என்று சொல்லப்படுகின்ற ஆட்கொல்லி நோயின் கொடுமையை எண்ணித் தடுப்பு முறையே முதல் மருத்துவமாகக் கூறப்படுகின்றது. வள்ளுவரின் ஓர் ஆழமான சிந்தனையில் எதையும் வருமுன் காப்பதுதான் மாமருந்தாகும் எனக்கூறி, அவ்வாறு காக்காவிட்டால் நெருப்பு முகத்து நின்ற வைக்கோல் போர் போல், அவன் வாழ்க்கை அழிந்துவிடும் என்பதை

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்" (435)

என்ற குறளில் "வருமுன்னர்க் காப்பது" சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறது.

**உடல் தூய்மை**

மாதவிலக்கில் புணரக்கூடாது : உடல் தூய்மை யானது. தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே தமிழகத்தில் நிலவியதைத் தொல்காப்பியக் கற்பியலில் காணப்படும் "பூப்பு" பற்றிய நூற்பாவால் அறியலாம்.

மாதவிலக்கின் போது மகளிர் வீட்டிற்குப் புறத்தே விலகி இருப்பர். இதன் நோக்கம் கண வருடன் உடன் உறைதல், புணர்தல் ஆகியவற்றைத் தவிர்த்தலே ஆகும்.

"பூப்பின் புறப்பா டீராறு நாளும்
நீத்த கன்றுரையார் என்மனார் புலவர்"

(தொல். கற். : 46)

பூப்பின் நீத்து என்னும் சொற்றொடர் பூப்பு நிகழ்ந்த மூன்று நாளும் தலைவியைத் தொடுதலும், அவளுடன் உறைதலும் நீங்க வேண்டும் என்பதை உணர்த்தும். அப்படிப் புணர்ந்தால், "சூதக சன்னி" என்னும் நரம்புக் கோளாறு (சித்த மருத்துவ நோய் நாடல்: ப.27) ஏற்படும் என்று சித்த மருத்துவத்தில் கூறப்பட்டாலும், இக்கால அறிவியலின்படி உடல் தூய்மை, துப்புரவு சார்ந்ததாகவே இத்தடுப்பு முறை எண்ணப்படுகிறது. பூப்புற்ற நிலையிலிருப் போரைக் "கலந் தொடா மகளிர்" (புறம்: 299) எனப் புறநானூறு குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது.

இதுபோலவே சங்கமருவிய காலத்தில் பல நல்வாழ்வுக் கோட்பாடுகள் கூறப்பட்டுள்ளன. கூந்தலில், கஸ்தூரி போன்ற மணப்பொருட் களைத் தேய்த்துக் கொண்டு நீராடுதல் உண்டு என்பதை

"நானம் கமழும் கதுப்பினாய்" (நாலடியார் : 294)

என்று நாலடியார் சுட்டியுள்ளது.

**சுற்றுப்புறச் சூழல் தூய்மை**

**நீர்த்தூய்மை**

புதிய நீரிலேயே நீராடுதல் வேண்டும் என்ற உணர்வு மிக்கிருந்ததைக் காணமுடிகிறது.

"அணங் குடைப் பனித்துறை தொண்டி அன்ன
மணம் கமழ் பொழில்"

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடலின் (174 : 2-3) வரிகள் இதனை எடுத்துரைக்கின்றன.

புது வெள்ளத்தில் நீராடுதல் உடலுக்கும், மனதுக்கும் மகிழ்வைத் தரும் என்ற குறிப்பும் காணப்படுகிறது. இச்செய்தியினை:

"முளி இலை கழித்தன முகிழ் இணரொடு வரும்
விருந்தின் தீம் நீர் மருந்து மாகும்."

என்னும் நற்றிணை (53)யின் வரிகள் குறிப்பிடு கின்றன. மேலும் அக்கால மக்கள் பெரும்பாலும் ஓடும் நீர் நிலைகளிலேயே நீராடினர் என்பதையும் உணர முடிகிறது. நீராடல் இளமையைத் தரக் கூடியது எனும் செய்தியினை;

"சேய் உற்ற கார் நீர் வரவு
நீ தக்கதாய் தைந்நீர் நிறம் தெளிந்தாய் என்மாரும்
..........................................
கிழவர் கிழவியர் என்னாது ஏழ்காறும்
மழ ஈன்று மல்லற் கேள் மன்னுக என்மாரும்."

என்னும் பரிபாடல் வரிகள் (பரி. 11 : 114-121) எடுத்துரைக்கின்றன.

சங்ககால மக்கள் குடிப்பதற்கும், நீராடுவதற்கும் சுத்தமான நீரினையே பயன்படுத்தியுள்ளனர் என்பது தெரிய வருகிறது. இச் செய்தியினை;

"முன்றில் இருந்த முதுவாய்ச்சாடி
யாம் கஃடு உண்டென வறிது மாசின்று." (புறம் : 319)

என்னும் புறப்பாடல் வரிகள் குறிப்பிடுகின்றது. மேலும் தங்கள் தேவைக்கான குடிநீரைத் தேங்கி

யிருக்கும் நிலைகளிலன்றி ஓடும் நீர் நிலைகளி லிருந்தும் எடுத்துப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை,

"நல் மரன் நளி நறுந்தண் சாரல்
கல்மிசை அருவி தண்ணெனப்பருகி."

எனும் புறப்பாடல் (150 : 15-16) ஓடும் அருவி நீரைப் பருகியமையைப் புலப்படுத்துகிறது.

தனிமனிதத் தூய்மை என்பது பெரும்பாலும் நீரினாலேயே காக்கப்படுகிறது. இக்கருத்தை வலியுறுத்தும் விதமாக,

"புறந்தூய்மை நீரால் அமையும்"

என்ற குறள் கருத்தும் அமைந்துள்ளது. இதனால் உடலைச் சுத்தம் செய்வதுடன், சுத்தத்துடன் இருக்க வேண்டும் என்ற உணர்வு பெறப்படுகிறது. சுத்தம் சோறு போடும் என்ற பழமொழி நினைக்கத் தக்கது.

### தூய்மையான வீடு

வீட்டைத் தூய்மை செய்து வைத்துக் கொள்வது மட்டுமின்றி வீட்டின் முன்பகுதியைச் சாணமிட்டுப் பெருக்கிச் சுத்தமாக வைத்திருந்த செய்தியினை,

"பைஞ் சேறு மெழுகிய படிவநல் நகர்"

(பெரும்பாண். : 298)

என்னும் அடிகள் எடுத்துரைக்கின்றது. மாட்டுச் சாணம் மிகச் சிறந்த கிருமி நாசினியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

"இடுமுள்வேலி எருப்படுவரைப்பின்" (பெரும்பாண். : நா. - 154)

இப்பாடல் வரி மூலம் சுற்றுப்புறம் மாசு படாது விலங்குகட்குத் தனி இடம் இருந்துள்ள தையும் அறிய முடிகிறது.

மேலும்,

"பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்."

என்னும் குறுந்தொகைப் பாடல் (196 : 3-4) வரியும்,

"சுனை நீர்ச்சேற்று உலைக்கூட்டும்"

என்னும் அகநானூற்றின் (169) வரியும் சுனை நீரைக் குடிக்கவும், சமைக்கவும் பயன்படுத்தியமையைக் காட்டுகின்றன.

### சுடுநீர்ச் சேமக்கலன்

நலனைக் காக்க சுடு நீரும் சேமக்கலனும், பனிக்காலத்தில் சூடாக்கிய நீரைக் குடிப்பதற்குப் பயன்படுத்திய செய்தியினையும், அதனைச் சேமக் கலத்தில் (பிளாஸ்க்) வைத்திருந்து தேவைப்படும் போது பருகியதையும்,

"அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்
சேமச் செப்பில் பெறீ இயரோ நீயே"

என்னும் குறுந்தொகைப் பாடலின் (277 : 4-5) வரிகள் புலப்படுத்துகின்றன.

அழுக்கற்ற ஆடைகளை அணிவதில் மிகுந்த நாட்டம் செலுத்தியமையை,

"புகைமுகந்தன்ன மாசில் தூவுடை" (திருமுருகு - 138)

"மாசில் காம்பு சொலித்தன்ன அறுவை"

(சிறு பாண். : 235)

இந்தப் பாடல் வரிகளினால் அக்காலத்தில் நோய் நொடியின்றி உடல் தூய்மையுடன் வாழ வழி வகுத்ததை அறிய முடிகிறது.

### மனைகளில் வேம்பு

மனையில் உள்ளவர்கள், நோய்வாய்ப் பட்டாலோ, ஊரில் நோய்க் குறி காணப் பட்டாலோ, நோய்த்தடுப்பு முறையாக மனையையும், சுற்றியுள்ள பகுதியையும் தூய்மைப்படுத்துவர். அதைப் போல மனைகளுக்குள் வெளிப்புறமிருந்து நோய்க் கிருமிகள் மனைக்குள் புகாமல் மனையைப் பாதுகாக்கும் பொருட்டு, மனையின் முகப்பில் வேம்பின் இலைகளைக் கொத்தாகச் செருகி வைக்கும் பழக்கம் இருந்திருக்கிறது என்பதை,

தீங்கனி இரவமோடு வேம்பு மனைச் செரீஇ

(புறம் : 281)

இப்பழக்கம் இன்றும் கிராமப்புறங்களில் அம்மை நோய் கண்ட வீடுகளில் காணலாம்.

### ஒலி மாசுபாடு

சங்க காலத்திலேயே ஒலி மாசுபடுவதைத் தடுத்து உடல் நலம் பேணுவது குறித்த குறிப்புகள் காணக்கிடக்கின்றன. (எ.கா.) கரும்பு ஆலைகளும் அங்குப் பயன்படுத்தப்பட்ட இயந்திரங்களும் இரைச்சலை ஏற்படுத்திய செய்தியை இலக்கி யங்கள் பதிவு செய்துள்ளன. கரும்பு பிழியும் இயந்திரங்களின் ஓசையானது யானை பிளிறு வதைப் போன்று இருப்பதாக ஐங்குறுநூற்றுப் பாடல் (55) தெரிவிக்கின்றது.

வினை முடித்து மீளும் தலைவன் தலைவியைக் காண வேண்டும் என்ற ஆவலில் தேரில் விரை கிறான். அத்தேரின் மணி ஒலி வண்டுகளுக்கும் பறவைகளுக்கும் துன்பம் செய்யும் எனக் கருதி, அம்மணி நாக்கை நூலால் கட்டித் தேரை ஓட்டி வருகிறார் என்பதை,

"பூத்த பொங்கர்த் துணையோடு வதிந்த
தாது உண் பறவை பேதுறல் அஞ்சி

மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்.''

(அகம் - 4 : 10 - 12)

என்ற பாடலடிகள் சுட்டியுள்ளது.

எல்லோரும் உறங்கும் இரவுப் பொழுதில் தம் வீடு திரும்பும் தலைவன், ஒலியெழுப்புகின்ற தனது தேரை முன்னரே நிறுத்தி நடந்தே வீடு வருகிறான் என்பதை,

''பாணி பிழையா மாண்வினைக் கலிமா
துஞ்சு ஊர் யாமத்துத் தெவிட்டல் ஓம்பி
நெடும்தேர் அகல நீக்கி பை யெனக்
குன்று இழி களிற்றின் குவவுமணல் நீந்தி
இரவில் வம்மோ.''

(அகம் - 360 : 11 - 14)

என்ற பாடலடிகள் சுட்டியுள்ளது.

### நல்வாழ்விற்கு உடற்பயிற்சி

உடம்பைச் செம்மையாய் வளர்ப்பதற்கு நல்லுணவும், நற்பயிற்சியும் இன்றியமையாதது. இத்தகைய உடற்பயிற்சிக்கேற்ற உயரிய பல விளையாட்டுக்கள் அக்காலத்தில் தமிழ் மக்கள் வாழ்க்கையில் அமைந்திருந்தன.

### ஆடவனின் விளையாட்டுக்கள்

கொல்லேறு தழுவுதல், மற்போர் புரிதல், நீரில் மூழ்கி மண் எடுத்து விளையாடுதல் ஆகியவை ஆடவர்க்குரிய விளையாட்டுக்கள். விழாக்காலங் களில் போர்ப்பயிற்சி செய்து காட்டுவதும் இதில் அடங்கும்.

இது தவிர மரங்களில் ஏறி, மடுக்களில் குதித்து விளையாடுவதும் வீர விளையாட்டுக் களில் ஒன்றாகக் கருதப்பட்டது. (தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும் முனைவர் ந. அறிவுராஜ், முனைவர் ஆ. குமார், 2014 - பக். 90)

### பந்தாட்டம்

இக்காலத்தில் இளைஞர் விரும்பி விளை யாடும் பந்தாட்டம், பழந்தமிழ் நாட்டிலேயே வழங்கியதாக அறியப்படுகின்றது. மன்னர் வாழும் தலைநகரத்தில் பந்தாடும் இடமும், ஒன்றாக விளங்கிற்று. இவ்வாறு அமைந்த அரங்குகள் பல பத்திகளால் வகுக்கப்பட்டு, பத்தி தோறும் பசும்பொன்னும் பன்மணியும் இழைக்கப்பட்டு, விளிம்பில் முத்து அழுத்தப்பட்டுக் கண்களைக் கவரும் வகையில் அமைந்திருந்தன.

அவ்வரங்கின் அழகை,

''முத்தம் வாய் புரிந்தன
மொய் கதிர்ப் பசும் பொனால்
சித்தி ரத்தியற்றிய
செல்வம் மல்கு பன் மணி
பத்தியிற் குயிற்றிவான்
பதித்து வைத்த போல்வன
இத்திறந்த பந்தெறிந்து
இளையராடு பூமியே'' (சீவக சிந். : 150)

என்று சிந்தாமணி எடுத்துரைக்கின்றது. இவ்வாறு வகுத்தமைந்த அழகிய அரங்கத்தில் மங்கையரும் பந்தாடி மகிழ்ந்தனர்.

இவ்விரு வகை விளையாட்டோடு காலாலே பந்தடித்து விளையாடும் வழக்கமும், அக்காலத்து இளைஞரிடம் அமைந்திருந்தது. பந்தைக் காலால் எடுத்தலும், கையினால் அடித்தலும், நெற்றியால் தட்டுதலும், பத்தியாய்ப் புடைத்தலும், பரந்துலாவும் படி அடித்தலும் ஆகிய பலவகை விளையாட்டுக் களை இளைஞர்கள் விரும்பி ஆடி எல்லையற்ற இன்பமுற்றார்கள். (தமிழின்பம் : 148-152) என் பதை, சீவகசிந்தாமணி சிறப்புற இப்பொழுது ஆங்கில மக்களால் மேலை நாடுகளில் வெகுவாக வழங்கக் காணலாம்.

### பெண்கள் பந்தாடுதல்

மயில் போன்ற சாயலமைந்த ஒரு மெல்லியல் மாது வளையணிந்த கையால் வலப்புறமும், இடப் புறமும், பந்தைப் போக்கி ஊக்கமாய் விளையாடக் கண்ட தோழியர் தம் தலைமகளின் மெல்லிய மேனி வருந்துமே என்று கிரங்கி நின்றார் என்பதை,

''துணையில் தோகை மஞ்ஞை
ஈயற்கிவரும் வகை போல்
மணியார் வளைசேர் முன் கை
வலனும் இடனும் போக்கி
இணையில் தோழி மார்கள்
இறுமால் இடை யென் றிரங்க
அணியார் கோதை பூம்பந்
தாடு மவளைக் காண்மின்'' (சீவக சிந். : 925)

என்னும் கவியால் இனிது அறியமுடிகின்றது. மென்மையும், அழகும் அமைந்த போது, அரங்கத்தில் அங்குமிங்கும், செங்கை நீட்டிப் பந்தடிக்கும் ஆர்வம் மெல்லிய தோகை மயில் பறந்து வரும் ஈயலைப் பற்றுதற்கு அவற்றின் மேல் விரைந்து செல்லும் பான்மையில் அமைந்திருப்பது சால அழகியதாகும்.

இது தவிர மங்கையர் சிறு பந்துகளை மேலே வீசிப் பிடித்து விளையாடும் வழக்கமும், அக் காலத்தில் இருந்ததென்று தெரிகின்றது. இப் பந்துகள் தூய வெண்மையாய்ப் பளிங்கு போல் இலங்கிய பான்மையையும் சார்ந்த தன் வண்ண மாய் விளங்கிய தன்மையையும்,

"மையரி நெடுங்கண் நோக்கம்
படுதலும் கருகிவந்து
கைபுகில் சிவந்து காட்டும்
கந்துகம் பலவும் கண்டார்"

(பாலகாண்டம் மிதிலை : 16)

என்று கம்பர் வியந்துரைக்கின்றார்.

### உடல் உறுதி பெற விளையாட்டு

விளையாட்டாகவே கடல் நீராடும் பரதவ மகளிர், பனை நுங்கின் நீரையும் கருப்பஞ்சாற்றையும் கலந்து பருகிக் கடலில் பாய்ந்து நீராடுவர். (புறம் : 34). இவ்விளையாட்டு உடலை வலிமையுடன் இருக்க உதவுகிறது. மேலும் அந்நேரத்தில் உடல் சோர்வடையாது இருக்க உடன் ஊட்டமளிக்கும் பானம் குடித்தது, இன்றைய நிலையில் உடல் சோர்வடையாமல் இருக்க பானங்களை (Health Drinks) அருந்துவதை ஒத்ததாக உள்ளது.

### ஊஞ்சல் ஆட்டம்

இது தவிர மகளிர் கடல் அலையின்கண் நீராடி மகிழ்ந்தனர் (குறுந்தொகை : 144) பனை நாரினாலே திரித்த கயிற்றை மரக்கிளையில் பிணித்துத் தொங்கவிட்ட ஊஞ்சலில் ஆடினர். (நற். : 92)

### வரிப்பந்தாட்டம்

பந்தாடுதல் நூலினால் வரிந்து கட்டப்பட்ட ஒரு வகைப் பந்தினைக் கொண்டு ஆடுதல் அன்றைய வழக்கமாக இருந்தது. மாடி வீடுகளில் மேல் மாடத்தில் மெல்லிய பெண்கள் வரிப்பந்தாடியது பற்றிப் பெரும்பாணாற்றுப்படை.

"பீலி மஞ்ஞையின் இயலிக் கால
தமனியப் பொற்சிலம் பொலிப்ப உயர் நிலை
வான் தோய் மாடத்து வரிப்பந் தசை இ."

(பெரும்பாண் : 331 - 333)

என்று குறிப்பிட்டுள்ளது.

கைப்பந்தும், கால்பந்தும் ஆடினர் (நற். 104-374)

வரிப்பந்து ஆடினர் (கலித்தொகை : 51)

இதே போல் திண்ணைகளில் கழங்கினை வைத்து விளையாடியதாக,

"செறியரிச் சிலம்பின் குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடும்" (புறம். : 36)

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் சுட்டியுள்ளது.

### கழங்காடு மகளிர்

இயற்கையில் கிடைக்கும் காய்களைக் கொண்டு எறிந்தும் எடுத்தும், உயரத் தூக்கிப் போட்டுப் பிடித்தும், கீழே கொட்டியுள்ளதைப் பொறுக்கியும் ஆடுவது கழங்காகும். பெண்கள் மட்டுமே பகலில் தங்களது இல்லங்களிலும் பின்புறங்களிலும், மர நிழலிலும், மேல் மாடங்களிலும் அமர்ந்து கழங்கு ஆடுவர். இருவர் பாடிக் கொண்டே கழங்கு ஆடுவர்.

"கழங்காடு மகளிரோதை யாயத்து" (சிலம்பு : 27 - 245)

என்ற வரிகள் மூலம் நீர்ப்படைக் காதையில் மகளிர் ஆரவாரம் பொருந்திய கூட்டத்துடன் கழங்காடுகின்ற நிகழ்ச்சி குறிப்பிடப்படுகிறது. பெரும்பாணாற்றுப்படையில் பந்தாடிக் களைத்த பெண்கள் கைவளையல்கள் அசைந்தாடும்படி முத்து போல் மணல் பரப்பிய கழங்காடு இடத்தில்



பொன்னால் செய்த கழற்காய்களைக் கொண்டு விளையாடுவர் என்பதை,

"கைபுனை குறுந் தொடி தத்தப் பைபய
முத்த வார்மணற் பொற் கழங்காடும்"

(பெரும்பாண். : 334-335)

என்ற வரிகளில் குறிப்பிடப்படுகிறது. இவ்வாட்டத்திற்கு ஒத்ததாகத் தற்காலத்தில் கற்களால், "ஏழுகல் ஆட்டம்" என்றும் அரளிக்காய்களைக் கொண்டு ஆடுவதைக் கழற்சிக்காய் ஆட்டம் என்றும் கூறுவர்.

### உடற்பயிற்சி

உடற்பயிற்சி உரம் அளிக்கும். உரம் உள்ளவர்கள் நோயின்றி வாழலாம். இக்கருத்தைக் கொண்ட உடற்பயிற்சியைப் பற்றிய செய்யுள் ஒன்றை ஏலாதி என்ற நூல்,

"எடுத்தல், முடக்கல், நிமிர்த்தல், நிலையே
படுத்தலோடு, ஆடல் பகரின் - அடுத்து உயிர்
ஆறு தொழில் என்று அறைந்தார் உயர்ந்தவர்
வேறு தொழிலாய் விரித்து" (பா. 69)

என்று குறிப்பிட்டுள்ளது.

கையை ஊன்றி உடம்பை மேலே தூக்குவதாகிய தண்டால், கை கால்களை முடக்கியிருத்தலாகிய ஆசனம், நிமிர்ந்து நிற்றல், தலை கீழாக நிற்றல், படுத்துச் செய்யும் பயிற்சி, குதித்தல் இவை உடற்பயிற்சிகளாகும். இவைகளின் சிறப்பைக் கூற வேண்டுமானால், பெரியோர்கள் உடம்பில் உயிர் அமைதியோடு வாழ்வதற்கான தொழில்கள் என்று இவைகளையே வேறு வேறு தொழில்களாகக் கூறினார்கள். இச்செய்யுளைக் கொண்டு தமிழர்கள் நெடுங்காலம் நலமுடன் வாழ உடற்பயிற்சி செய்து வந்ததைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

### பொதுவான நோய்த்தடுப்பு முறை

வைகறைத் துயில் எழுதல், மலம், சிறுநீர், புணர்ச்சி, அதரபானம் போன்ற எச்சில்கள் உண்டான போது படித்தலையும், பேசுதலையும் தவிர்த்தல், தூய்மை குன்றிய காலத்தும், வாந்தி எடுத்த போதும், மயிர் களைந்த பின்னும், புணர்ச்சி நிகழ்ந்த பின்னும், மலஜலம் கழித்த காலத்தும் நீராடுதல் (ஆசாரக் கோவை : 4, 8, 10). பிறர் உடுத்திய அழுக்காடை, செருப்பு ஆகியவற்றைத் தீண்டாமை, இரவில் மரத்தின் கண் சேராமை, வாயிற்படிக்கு நேராகக் கட்டிலிட்டுப் படுக்காமை, மாலையில் உறங்காமை (ஆசாரக்கோவை : 12, 13, 22, 29, 30). வடக்குப் புறமும், வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு ஆகிய பக்கங்களில் தலை வைக்காமலும், போர்த்திக் கொண்டு உறங்குதல், மலஜலத்தைப் பகலில் தெற்கு நோக்கியும், இரவில் வடக்கு நோக்கியும் கழித்தல் ஆகாது (ஆசாரக்கோவை : 33) அடுக்களையை எச்சிற் படுத்தக்கூடாது. தன் கண்ணிற்கு மருந்து எழுதிய கோலால் அவ்வெச்சில் கழியாது, பிறர் கண்ணுக்கு மருந்து ஊட்டக் கூடாது (ஆசாரக்கோவை : 39, 4). மாதவிடாய் நிகழ்ந்தால் மூன்று நாள் மெய்யுறலாகாது. நீராடிய பின்பு பன்னிரண்டு நாளும் இணைந்து உறைதல் வேண்டும். உச்சிப்பொழுது, நடு இரவு, காலை, மாலை ஆகிய நேரங்களில் திருவாதிரை, திருவோணம், அமாவாசை, பௌர்ணமி, அட்டமி, பிறந்த நாள் ஆகிய நாட்களில் மனைவியுடன் தொடர்பு கொள்ளக் கூடாது. பாழ்வீடு, சுடுகாடு, பாழ்மரம் ஆகிய இடங்களில் சேராமலும் பகலில் தூங்காமலும் இருப்பது நோயின்மைக்கு வழியாகும். பிறரைப் பார்த்து உடம்பு நன்றாக இருக்கிறது என்று சொல்வது தீயொழுக்கமாகும். (ஆசாரக் கோவை : 42, 43, 57, 59).

மேற்சொன்ன செய்திகள் நல்லொழுக்க விதிகளாகவும், நல்வாழ்விற்கான தடுப்புமுறைகளாகவும் வலியுறுத்தப்படுகின்றன.

இதுபோலவே தேரையாரின் வெண்பாவில் நோய்த்தடுப்பு முறை நன்கு விளக்கப்பட்டுள்ளது.

"திண்ணம் இரண்டுள்ளே சிக்கல் அடக்காமல்
பெண்ணின் பாலொன்றைப் பெருக்காமல் - உண்ணுங்கால்
நீர் கருக்கி மோர் பெருக்கி நெய்யுருக்கி உண்பவர்தம்
பேர் உரைக்கின் போமே பிணி."

மலஜலச் சிக்கலின்றி, பெண் மீது அதிக மோகம் கொள்ளாமல், உண்ணும் வேளையில் அதிக நீரைக்கொதிக்கவைத்து மோரை நீர்விட்டுப் பெருக்கி, நெய்யை நன்கு உருக்கி உண்பவர்க்கும் பிணி இல்லை என்பது பாடலின் நோய்த் தடுப்பு முறை கருத்தாகும்.


கந்த மூலம் உண்டு கடுந்தவம் புரிந்த முனிவரும் உடலின் பெருமையை உணர்ந்து, அதனைப் பேண வேண்டும் என்று அருளிய பொன்னுரைகள் தமிழ் நூல்களில் ஆங்காங்கே காணக் கிடைக்கின்றன.

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

என்பது திருமூலர் அருளிய திருமந்திரமாகும். ஆகவே பழந்தமிழ் மக்கள் உயிரைப் பேணியவாறே உடலையும் பேணினார்கள் என்பதும், உடலை இகழத்தலைப்பட்ட பேதைமை இடைக் காலத்தில் இந்நாட்டில் புகுந்தது என்பதும் அறிஞரது கருத்தாகும். ●

# பனுவல் தழுவிய படைப்பு

ஆ. கார்த்திகேயன்



ஒரு பண்பாட்டில் புகழ்பெற்ற பாடல்கள், சொல வடைகள், கதைகள், புராணச் செய்திகள் ஏராளமாக வுள்ளன. அவை மக்களிடையே மிகவும் பிரபலமடைந் துள்ளன. திரும்பத் திரும்ப அவை அம்மக்களால் பயன்படுத்தப்படுகின்றன, அவற்றைக் கேட்கும் போதெல்லாம் அவை மக்களுக்கு இன்பம் பயக்கின்றன. இத்தகைய பாங்கினால் படைப்பாளிகளும் இப் பண்பாட்டுச் செல்வங்களை (Cultural resources) தம் படைப்புகளில் இணைத்துப் புதிய புதிய படைப்புக் களைக் காலந்தோறும் படைத்து வருகின்றனர். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் சமகாலத்தில் அல்லது முற்காலத்தில் வழக்கிலிருந்த புகழ்பெற்ற வாசகங்களைத் தம் கதைக்குப் பொருத்தமான இடங்களில் சேர்த்துள்ளார். பிறருக்கு முற்பகலில் துன்பம் செய்தால் அவருக்குப் பிற்பகலிலேயே துன்பங்கள் தாமாக வந்து சேரும் (குறள் - 319). இந்தத் திருக்குறள் கருத்தை நினைவுபடுத்தி அவர் தம் காப்பியத்தில் சேர்த்துள்ளார்.

வஞ்சின மாலையில்...

“கோவேந்தன் தேவி-! கொடுவினை யாட்டியேன்;<br>
யாவும் தெரியா இயல்பினேன்; ஆயினும்<br>
முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு<br>
பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய - காண்!”

மன்னர் மன்னனின் மனைவியே, யான் பாவங்கள் செய்தவள். நிங்களுடைய இயல்பினை அறிந்தவள் அல்லள். ஆயினும் முற்பகல் வேளையிலே பிறனுக்குக் கேடு செய்தவன் அதன் பயனாகப் பிற்பகலிலே தானும் கெடுவான் என்பதை நேரிற் கண்டனை. தீவினையின் தகைமையும் இத்தகையதே என்று கண்ணகி கூறுவாள். இவ்விடத்தில் இளங்கோவடிகள் திருக்குறளைச் சுட்டிக் காட்டி (allude) தமது கருத்துக்கு வலுசேர்த்துள்ளார். இன்னொரு இடத்தில்

**தெய்வம் தொழாள் கொழுநன் தொழுவாளைத்**
**தெய்வம் தொழுந்தகைமை திண்ணியதால் – தெய்வமாய்**
**மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி**
**விண்ணக மாதர்க்கு விருந்து (கட்டுரை காதை)**

மண்ணக மாதர்க்கெல்லாம் அணி போல்பவளான கண்ணகியானவள் தெய்வமாகி விண்ணக மாதர்க்கு விருந்தினளாயினள். 'தெய்வந் தொழாள் கொழுநன் தொழுவாளைத் தெய்வம் தொழும் தகைமையும் இவ்வுலகில் இதனால் உறுதியாயிற்று. இவ்விடத்திலும் தெய்வம் தொழாஅள்' (குறள் - 55) என்ற குறள் எடுத்தாளப்பட்டிருப்பதைக் காணலாம். இளங்கோ வடிகள் தம் காப்பியம் முழுவதிலும் தமக்கு முன்பிருந்த சான்றோர்களின் மேற்கோள்களை நினைவுபடுத்தித் தம் காப்பியத்தில் சேர்த்துள்ளார். அவற்றையெல்லாம் 'பண்டையோர் உரைத்த தண்தமிழ் நல்லுரை'என்ற பொருள் ஆழமிக்கத் தொடரால் குறிப்பிடுகிறார். 'பண்டையோர் உரைத்த நல்லுரை'என்ற தொடர் ஒரு பனுவலுக்கும் இன்னொரு பனுவலுக்கும் (text) உள்ள உறவைக் குறிக்கிறது.

ஒரு பனுவலைத் தழுவி இன்னொரு பனுவல் படைப்பது தற்காலத்திலும் இலக்கிய உலகில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது. இதனைப் 'பனுவல் தழுவிய உறவு' (intertexuality) என்று கூறுவர். ஒரு பனுவலை நினைவுபடுத்தி அதே நேரத்தில் அது இல்லை என்பதையும் உணருமாறு உத்தியைக் கையாள்வது. ஒரு சில எடுத்துக்காட்டுக் கவிதைகளால் பனுவல் தழுவிய உறவை விளக்கலாம்.

### செம்புலப் பெயல்நீர்

'செம்புலப் பெயல்நீர் போல'என்ற குறுந்தொகைப் பாடல் மிகவும் புகழ்பெற்ற பாடலாகும். முன்பின் தெரியாத தூய்மையான அன்புடைய நெஞ்சங்கள் செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர் அந்நிலத்தின் வண்ணத்தை, நிறத்தைப் பெறுவதனைப் போல கலந்து விடுகின்ற காதலை விவரிக்கின்றது அப்பாடல். இந்தப் பனுவலை கவிஞர் மீரா ஒரு கவிதையில் நினைவுபடுத்தி வேறொரு கவிதை புனைந்துள்ளார். கவிதையின் தலைப்பு 'நவயுகக் காதல்' என்பதாகும்.

**"உனக்கும் எனக்கும்**
**ஒரே ஊர்**
**வாசுதேவ நல்லூர்**

**நீயும் நானும்**
**ஒரே மதம்**
**திருநெல்வேலிச்**
**சைவப் பிள்ளைமார்**
**வகுப்புங் கூட**

**உன்றன் தந்தையும்**
**என்றன் தந்தையும்**
**சொந்தக்காரர்கள்**
**மைத்துனன்மார்கள்**

**எனவே**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே"**

பாடல் அமைப்பு கூட குறுந்தொகைப் பாடலை எதிரொலிப்பதாகவே உள்ளது. 'யாயும் ஞாயும் / எந்தையும் நுந்தையும்' என்பது போலவே எனக்கும் உனக்கும், நீயும் நானும், உன்றன் தந்தையும் என்றன் தந்தையும் போன்ற தொடர்கள் குறுந்தொகைப் பாடலின் அமைப்பை ஒத்துள்ளன. இருந்தாலும் கவிஞர் வலியுறுத்தும் கருத்து முற்றிலும் வேறானது. நேர் எதிர்மறையானது. ஊர் பார்த்து, சாதி மதம் பார்த்து வசதி பார்த்து காதல் செய்கிற தற்காலப் போக்கினை கவிஞர் சாடுகிறார். அதற்குப் பழைய பாடலை, பனுவலைக் கையாள்கிறார்.

இதே பாடலை இன்னொரு கவிஞர் வேறு பிரச்சினையை வலியுறுத்தக் கையாண்டுள்ளார். அந்தக் கவிதையையும் காண்போம். கவிதையின் தலைப்பு 'யாயும் ஞாயும்' என்பதாகும். அதே குறுந்தொகைப் பாடல் வேறு விதமாக :

**"செம்புலமெல்லாம்**
**செங்கற் சூளையாயிற்று**
**பெயல் நீரையெல்லாம்**
**புட்டியிலடைத்து**
**விற்றாயிற்று,**
**இதில் இனி**
**அன்புடை நெஞ்சமாவது**
**உறவு கலப்பதாவது"**

பாடலாசிரியர் சௌந்திர மகாதேவன். **3.9.2017** தினமணி ஞாயிறு தமிழ்மணியில் பாடல் இடம் பெற்றுள்ளது. இயற்கை வளங்கள் அநீதியாகச் சூறையாடுவதைக் கண்டித்து இப்பாடலைப் படைத் துள்ளார். செம்புல நிலமுமில்லை. பெயல் நீருமில்லை. மனிதனின் உயிர் வாழ்க்கையே கேள்விக் குறியாகும் போது 'அன்புடை நெஞ்சமாவது உறவு கலப்பதாவது' என்று தம் கவலையை வெளிப்படுத்துகிறார். குறுந் தொகைப் பாடலை எதிரொலிப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது. ஒரே பழைய பனுவலை இரண்டு

படைப்பாளிகள் இரண்டு விதமாகக் கையாள்வதைக் காணமுடிகிறது.

### புராணச் செய்திகளை எதிரொலிப்பவை

சாதாரணமாக 'அனுமார் வால்போல வரிசை நீண்டு சென்றது' என்று கூறும்போது ஒரு புராணக் கூறை இணைத்துப் பேசுகின்ற வழக்கைக் காணமுடியும். புராணச் செய்திகள் மக்களிடையே பிரசித்தி பெற்றவை. படிக்காத பாமரன்கூட புராணக் கதைகளை அறிந்து வைத்திருப்பான். அவையும் மக்களின் பண்பாட்டுக் கருவூலங்களாகும். இத்தகைய பண்பாட்டுக் கருவூலங் களை எதிரொலித்து படைப்புகள் ஆக்கப்படுவதையும் எளிதாகக் காணலாம். மீராவின் கவிதைத் தொகுப்பி லிருந்து இன்னொரு எடுத்துக்காட்டைக் காண்போம்.

"துருபதன் மகளை
நிருவாணக் கோலத்தில்
நிறுத்த நினைத்த
நீசர்க் கெதிராய்க்
கண்ணன் கொடுத்த துகில்
இன்னுமா நீள்கிறது
குற்றாலத்தில்?"

மீரா எழுதிய 'குக்கூ' என்ற கவிதைத் தொகுப்பில் இக்கவிதை இடம் பெறுகிறது. மகாபாரதக் கதையில் இடம் பெறும் ஒரு பனுவல் சுருக்கத்தைக் கையாண்டு குற்றால நீர்வீழ்ச்சியின் அழகை மிகவும் நேர்த்தியாகக் காட்சிப்படுத்தியுள்ளார். புராணத்தில் இடம் பெறும் துகில் உரிகின்ற காட்சியையும், குற்றாலத்தில் தொடர்ச்சியாக விழுகின்ற அருவியின் காட்சியையும் நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தி விடுகிறார். மகாபாரதப் பனுவலை நினைவுறுத்தி, அதனைத் தொடர்புபடுத்திப் புதிய பனுவலைப் படைத்துள்ளார். அதே நேரத்தில் அதனை வேறுபடுத்தியும் காட்டுகிறார்.

### தோடுடைய செவியள்

மீராவின் இன்னொரு கவிதை பின்வருமாறு அமைந்துள்ளது.

மூன்று வயதில்
ஞானசம்பந்தர்
பாடினாராம்
தோடுடைய செவியன் என்று
இப்போதும்
அதே வயதுப்
பாலகர்கள்
பாடுவார்கள்
தோடுடைய செவியள் என்று
தப்பில்லாமல். (ஊசிகள், ப/77)

சைவ சமயக் குரவர்களுள் முதலாமவரான திருஞானசம்பந்தருக்கு ஞானப்பால் தந்து தோடுடைய செவியனாகக் காட்சி தந்தது புராணச் செய்தியாகும். இப்புராணச் செய்தியைக் கையாண்டு, அல்லது அதனை நினைவுபடுத்திப் புதுச் செய்தியை, புதிய படைப்பை உருவாக்கியிருக்கிறார் கவிஞர். பெண்களைக் கேலிவதை செய்வது பெருகி வரும் போக்கினைக் கண்டிப்பதாய் இக் கவிதை அமைந்துள்ளது. கவிஞர் மீராவின் கவிதைகளில் சில புகழ்பெற்ற அரசியல் முழக்கங்கள், இலக்கியத் தொடர்கள், பழமொழிகள், திரைப்பாடல்கள் ஆகியவை கையாளப்பட்டிருப்பதையும், சொல்ல வந்த கருத்துக்குப் பகைப்புலமாக முரண்பாடான ஒன்றை நிறுத்திச் சொல்லும் உத்தி கையாளப்பட்டிருப்பதையும் பாலு குறிப்பிட்டுள்ளார். (மீராவின் 'ஊசிகள்' நூலின் முன்னுரை உரையாடல் காண்க). இதுவே (intertexuality) என்ற நடையியல் உத்தியாகும்.

### காவ்ய நாயகி - விக்ரமாதித்யன் கவிதை

இராமாயணத்தில் சீதைக்கு ஏற்படும் பல்வேறு இன்னல்களையும், நிகழ்வுகளையும் சுட்டிக்காட்டி விக்ரமாதித்யன் ஒரு அற்புதமான கவிதை படைத் துள்ளார். இக்கவிதை intertexuality-க்கு அழகிய எடுத்துக் காட்டாக விளங்குகிறது. அக்கவிதை பின்வருமாறு :

இளவரசியாய்
மிதிலைப்பட்டணத்தில்
பேரரசியாய்
அயோத்திப் பட்டணத்தில்
சிறைக் காவலாய்
இலங்கைப் பட்டணத்தில்
வனவாசம்
அக்னிப்ரவேசம் வேறு
லவகுசா ஜனனம்
மகரிஷிகள் தயவில்
அவதாரத்தை நம்பியே
ஆயிரத்தொரு அவஸ்தைகளும்
ஆனாலும்
அந்தத் தேவியின் பாடுகள் அதிகம்தான்.

மிதிலையில் ஜனகனுக்கு மகளாய் இளவரசியாய் வளர்கிறாள். அயோத்திப் பட்டணத்தில் இராமனுக்கு மனைவியாய் பேரரசியாக விளங்குகிறாள். இலங்கையில் இராவணனின் சிறைக்காவலில் துன்புறுகிறாள். இராம னோடு வனவாசம் செல்கிறாள். இவ்வளவு துன்பங்களும் இராமனின் அவதாரச் சிறப்பை உணர்த்துவதற்காகச் சீதை அனுபவிக்கிறாள். ஒருவனின் சிறப்புக்காக அந்தப் பெண் பட்ட அவஸ்தைகளும் பாடுகளும் அதிகம் தான் என்று இராமாயணத்தை அப்படியே எடுத்துக் கவிதை யாக்கியுள்ளார்.

ஆனாலும் இது இராமாயணக் கதை அன்று. சீதையைப் பற்றிக் கூறுவதோ, அவளுக்காக அனுதாபப் படுவதோ கவிஞரின் நோக்கமன்று. இராமாயணச் சீதையை நினைவுபடுத்தித் தற்கால பெண்கள் படும் அவஸ்தைகளை, அவலங்களைச் சுட்டிக் காட்டுகிறாள். அந்த நிலையில் இக்கவிதை ஒரு புதிய பனுவல். பழைய

பனுவலைத் தழுவி அதன் எதிரொலியாக இக்கவிதை உருவாக்கப்பட்டுள்ளது. பழைய பனுவலுக்கும் புதிய பனுவலுக்குமான தொடர்பு கவிதைக்கு மெருகூட்டுகிறது. கவிதையை ஓர் உயர்ந்த நுகர்வுப் பொருளாக, இலக்கியமாக மாற்றுகிறது.

விக்ரமாதித்யனின் இன்னொரு கவிதையில் ஒரு நாலுவரி அகலிகையைக் குறித்து வருகிறது.

**"அகலிகை எனும் கல்**
**யோசிக்கிறது**
**அவன் ஏன் வந்தான்**
**இவன் எப்படி சாபமிடலாம்"**

இந்திரன் அகலிகையை வஞ்சிக்கிறான். அகலிகையின் கணவனான கௌதம முனிவரின் உருக்கொண்டு அவளை அடைகின்றான். அவளும் தன் கணவன்தானே என்று அவனது இச்சைக்கு ஆளாகிறாள். அவள்மீது யாதொரு பிழையுமில்லை. இதனை அறிந்த கௌதமர் இந்திரனையும், அகலிகையையும் சாபமிடுகிறாள். மூன்றாவது மனிதன் இராமனின் ஸ்பரிசம் பட்டு கல்லான அகலிகை மீண்டும் பெண்ணாகிறாள். இந்தப் பழைய பனுவலைத் தந்து 'பெண்ணின் அந்தரங்கத்தின் மீது ஆண்களின் அத்துமீறல், ஆக்கிரமிப்பு, ஆதிக்கம்' என்று உணரும் வகையில் புதிய பனுவலை விக்ரமாதித்யன் உருவாக்கியுள்ளார். பழைய பனுவலின் எதிரொலியாகப் புதிய பனுவல் அமைந்துள்ளது. அதனை நினைவுபடுத்தி அதே நேரத்தில் அதுவல்ல என்பதையும் சுட்டிக் காட்டுவதாக பனுவல் உறவு அமைந்துள்ளது.

இந்த உத்தி விளம்பரங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றது. அண்மையில் அஞ்சலகத்தில் ஒரு விளம்பரப் பலகையைப் பார்த்தேன். 'அஞ்சல் செய விரும்பு' என்பது தான் அந்த விளம்பரத் தொடர். 'அறம் செய விரும்பு' என்ற ஔவையின் ஆத்திச்சூடியைப் பின்பற்றி எழுதப்பட்டிருந்தது. 'யாமிருக்க நடையேன்' என்று ஒரு ஆட்டோவில் விளம்பர வாசகத்தைப் பார்த்தேன். 'நீயின்றி அமையாது உலது' என்பது ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியின் பெயர். இவையெல்லாம் பனுவல் தழுவி படைக்கப்படும் ஆக்கங்களே. ஒரு பனுவலுக்கும் இன்னொரு பனுவலுக்கும் தொடர்பை உருவாக்கிப் படைக்கும் ஆக்கங்கள் குறித்து மேலும் ஆய்வுகள் தேவை.

**Note :**

Intertexuality - an allusion to another text and at the same time, an apple to the reader's awareness of the text. (Verdonk).

**பார்வை நூல்கள்**


1. Verdonk Peter, Stylistics, (2002) Oxford
2. மீராவின் 'ஊசிகள்' கவிதைத் தொகுப்பு
3. விக்ரமாதித்யன் கவிதைகள்



# அஞ்சலி



எழுத்தாளரும்
பத்திரிக்கையாளருமான
'அர்ஷியா'
அவர்களின் மறைவுக்கு
'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்'
அஞ்சலியைத்
தெரிவித்துக்கொள்கிறது.

'ஏழரைப் பங்காளி வகையறா'
'அப்பாஸ்பாய் தோப்பு'
உள்ளிட்ட
நாவல்கள்
மற்றும்
ஏராளமான சிறுகதைகளின் வாயிலாக
தமிழ் இஸ்லாமிய
வாழ்க்கையைப்
படைப்பிலக்கியமாக்கிய
அர்ஷியாவின்
தனித்துவமான பங்களிப்பு
தமிழ் இலக்கிய வரலாற்றில்
மகோன்னதமானதும்
காலத்தால்
அழிக்கவியலாததும் ஆகும்.

# வாழ்த்துகள்




தமிழ்க் கவிஞர் நாளை முன்னிட்டு
29-04-2018 அன்று
தமிழக அரசு நடத்திய விழாவில்
மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி பண்பாடு (ம)
தொழிற்துறை அமைச்சர்
திரு.க.பாண்டியராஜன் அவர்களால்
தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில்
2015ஆம் ஆண்டிற்கான
சிறந்த நூல்களுக்கான பரிசு வழங்கப்பட்டது.




நியூ செஞ்சுரி புத்தக வெளியீடுகளான
கி.முத்துச்செழியன் அவர்களின் 'நூலகம் அறிவுலக நுழைவாயில்' மற்றும்
யூமா வாசுகி அவர்களின் 'அழகான அம்மா' ஆகிய நூல்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.
பரிசு பெற்ற நூலாசிரியர்களுக்கு
'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்' வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

## திருத்தப்பட்ட சந்தா விவரம்














**நியூ செஞ்சுரியின்**
**உங்கள் நூலகம்**



நியூ செஞ்சுரியின்
உங்கள் நூலகம்
மாத இதழுக்கு
ஆண்டுச் சந்தாவை
புதுப்பித்துக்கொள்ளுமாறு
கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**ஆண்டு சந்தா**

**₹ 360/-**

மாணவர்களுக்கு ₹ 300/-

*சந்தா தொகையை மணியார்டர் மற்றும் DD அனுப்புவோர்*
**New Century Reader's Sangam**
*என்ற பெயரில் அனுப்ப வேண்டும்.*

**நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்**
41 - பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 098
*தொலைபேசி எண்: 044 - 26359906*

# நியூ செஞ்சுரியின் பெரியாரிய நூல்கள்...




பசு. கவுதமன் தொகுத்தளிக்கும்
பெரியாரின் எழுத்துகளுக்கான செம்பதிப்பு

## "நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வர வேண்டும்?"

## பெரியார் ஈ.வெ.ராமசாமி

மொழி, கலை, பண்பாடு, இலக்கியம், தத்துவம் பற்றிய தொகுப்பு


3770 பக்கங்கள் அடங்கிய
ஐந்து தொகுதிகள்
₹ 4800/-

---

எஸ்.வி.ராஜதுரை - வ.கீதா எழுதிய


## பெரியார்: சுயமரியாதை சமதர்மம்

இந்திய மக்களின் வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் அச்சுறுத்தலை உருவாக்கிக் கொண்டிருக்கும், தமிழ் மக்களின் மொழி, பண்பாட்டு, சமூக, அரசியல் பொருளாதார நலன்களைத் துடைத்தெறிய பேயாட்டம் ஆடிக்கொண்டிருக்கும் போலி சந்நியாசிகளின் குண்டாந்தடி பாசிசத்தை எதிர்த்து நிற்க, ஊன்றி நிற்பதற்கு மட்டுமே கைத்தடிகளைப் பயன்படுத்திய அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் ஆகியோர் நமக்கான வலுவான கருத்தாயுதங்களாக இருப்பர்.




₹ 900/-

---





## பெரியார் என்னும் இயக்கம்

**தா.பாண்டியன்**

பெரியார் என்பவர் தனியொரு மனிதர். அவரது வாழ்வு ஒரு பேரியக்கமாகும். உலகுக்கே தன்வாழ்க்கைச் செயல்பாட்டில் வழிகாட்டும் பெரியார் காலங்களைக்கடந்து என்றென்றைக்கும் தேவைப்படும் ஞானசூரியன் என்பதை வலியுறுத்துகிறது இந்நூல்

₹ 80/-




**பாரதி என்றொரு மானுடன்**
டாக்டர் ஜே.ஜி.சண்முகநாதன்
*வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,*
*41- பி, சிட்கோ இண்ட்ஸ்ட்ரியல் எஸ்டேட்*
*அம்பத்தூர், சென்னை - 600 098.*
*தொலைபேசி எண்: 044 - 26359906*
*₹ 140/-*

# தன்னார்வ இலக்கிய விழிப்புணர்வு

சி.ஆர். ரவீந்திரன்

**த**னக்குள் பிரபஞ்சத்தையும் அதனுள் தன்னையும் உள்ளடக்கி இரண்டறக் கலந்த அத்வைத தத்துவ வாதியான பாரதியை அடையாளப்படுத்தும் முயற்சி யாகவே அமைந்துள்ளது 'பாரதி என்றொரு மானுடன்.'

மருத்துவத்துறையில் வல்லுனராக விளங்கும் டாக்டர். ஜே.ஜி. சண்முகநாதன் தன் உள்ளார்ந்த ஆர்வத்தால் மாமனிதனான பாரதியை இனம் கண்டு அடையாளப்படுத்தும் ஓர் அரிய முயற்சி யாக உள்ளது இந்த நூல்.

தனது கருத்துக்களுக்கும், வாழ்க்கைக்கும் எவ்வித முரணும் இல்லாமல் வாழ்ந்து வரலாற்றில் தன்னை நிலை நிறுத்திக்கொண்ட மகாகவியின் உயிர்த் துடிப்பை உணர்ந்து, அதைக் குறித்த உள்ளார்ந்த தனது மதிப்பீடுகளை இந்த நூலில் திறனாய்வாளர் முன்வைத்திருப்பது வியப்பைத் தருகிறது. இவருடைய இலக்கிய ஆர்வத்தைப் புரிந்து கொண்டு மகிழாமல் இருக்க முடிய வில்லை. வாழ்வியல் சார்ந்த இலக்கியம் எங்கும், எவரிடமும் இயல்பாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. இதற்கு வெளிப் படையான ஓர் எடுத்துக்காட்டு இந்த ஆய்வு நூல். ஆய்வு நூல் என்றாலும் வாசிப்புக்கு எளிமை யாகவும், வசதியாகவும் உள்ளது.

“பாரதியின் வாழ்வும் மனிதநேயமும்” என்ற முதலாவது இயலில் மகாகவியின் உள்முகத் தோற்றத்தை அவருடைய வெளிப்படையான வாழ்க்கை நிகழ்ச்சிகளிலிருந்தே இனம் கண்டு அடையாளப்படுத்துகிறார். மகாகவி பாரதியின் தனித்தன்மை தமிழ் இலக்கியத்தில் எந்த வகை யான அடிப்படைகளில் வெளிப்படுகிறது என்பதை வெளிப்படுத்துகிறார்.

திருவாவடுதுறை சந்நிதானம் மகாகவி பாரதியின் கவிதையால் ஈர்க்கப்பட்டவர். அதனால், அவரை எப்படியும் திருவாவடுதுறைக்கு அழைத்து வந்து சிறப்பிக்க வேண்டும் என்கின்ற தனது விருப்பத்தை ‘தமிழ்த் தாத்தா’ உ.வே.சாவிடம் தெரிவித்தார். ஆதீனக் கவிஞராக இருக்க பாரதியார் சம்மதித்தால் அதைவிட மகிழ்ச்சியான செய்தி தமக்குக் கிடை யாது என்றும் கூறியிருக்கிறார்.

அதன்பின், உ.வே.சா, பாரதியாரைத் தொடர்பு கொண்டு திருவாவடுதுறை சந்நிதானத்தின் விருப் பத்தைத் தெரிவித்திருக்கிறார். பாரதியார் எதுவும் சொல்லவில்லையாம். பலமுறை திருவாவடுதுறை ஆதீனம் முயற்சி செய்தும், பாரதி ஏதாவது சாக்குப் போக்கு சொல்லித் தட்டிக் கழித்திருக் கிறார்.

கடைசியில், பாரதியின் நண்பரான பண்டிதர் நாராயண அய்யங்கார் என்பவர், “திருவாவடு துறை ஆதீனத்தின் விருப்பத்தை நீங்கள் ஏன் தட்டிக் கழிக்கிறீர்கள்?” என்று பாரதியிடம் நேரிடை யாகவே கேட்டுவிட்டாராம். அதற்குப் பாரதியார் தெரிவித்த பதில் அவரைத் திடுக்கிட வைத்தது. “திருவாவடுதுறை ஆதீனத்தால் கௌரவிக்கப் படுவது என்பது சாதாரண விஷயமல்ல! இலக்கண இலக்கியங்களில் நன்கு தேர்வு பெற்ற அறிஞர்கள் கௌரவிக்கப்படும் தமிழ் ஆலயம் தான் அந்தச் சந்நிதானம். அந்த அளவுக்கு எனக்குத் தேர்ச்சி கிடையாது. நான் அதற்கு லாயக்கானவன் அல்ல” என்பது பாரதியின் பதில்.

இப்படிப்பட்ட நேர்மையான வாழ்க்கையை வாழ்ந்த பாரதி தன்னுடைய படைப்புக்களின் வழியாகத் தமிழ் இலக்கியத்திற்கு மாறுபட்ட வகையில் ஒரு தனித்தன்மையை உருவாக்கினார்.

தமிழறிஞர்களிடமும், பண்டிதர்களிடமும், புலவர்களிடமும் மட்டுமே இருந்து வந்த தமிழ் இலக்கியத்தை மக்கள் இலக்கியமாக மாற்றி அதைப் பரவலாக்கிய பங்களிப்பு பாரதிக்கு உரியது என்பது வரலாறு

மரபு வழிப்பட்ட தமிழிசை தவிர கும்மி, தெம்மாங்கு காவடிச் சிந்து, நொண்டிச் சிந்து, கிளிக் கண்ணி, பள்ளுப்பாட்டு, பண்டாரப்பாட்டு, நாடோடிப் பாட்டுக்கள் அனைத்தையும் கற்றுணர்ந்த வல்லவராக இருந்ததால் பாரதி மக்கள் இலக்கி யத்தைத் தனித்தன்மையுடன் உருவாக்கித் திசை மாற்றம் செய்ய முடிந்தது.

பாஞ்சாலி சபதத்தின் முன்னுரையில் பாரதி யார் பின்வருமாறு கூறுகிறார்:

‘எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், அவற்றினுடைய காவியம் ஒன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனா கிறான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவு படாமலும் நடத்தல் வேண்டும்’

“கவிதை மக்களின் மொழியில், மக்களுக்கு விளங்கும் சொற்களைக் கொண்டு மக்களைப்பற்றி எழுதப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டவர் பாரதி.” இப்படி பாரதியின் மொழியைப் பற்றிய கருத்தை அவருடைய சொற்களின் வாயிலாகவே விளக்குகிறார்.

பாரதி தன்னுடைய கதைகளிலும், கட்டுரை களிலும் இந்த முறையையே பின்பற்றினார். அதன் விளைவாகத் தமிழ் உரைநடை இலக்கியம் வளம் பெற்றுப் புதுமையுடன் விளங்கியது.

பாரதியின் உலகக் கண்ணோட்டத்தையும், வாழ்க்கை குறித்த புரிதல்களையும், வாழும் நெறி முறைகளையும் மதிப்பீடுகளையும் அவருடைய கவிதை, கட்டுரை, கதைகளிலிருந்து எடுத்துக் காட்டி அவருடைய மனிதத் தத்துவக் கோட்பாடு களை ஆய்வாளர் நிறுவுகிறார். அவருடைய தனிப்

பண்புகளையும், ஆளுமைகளையும், தனித்துவத்தையும் அவருடன் நெருங்கி வாழ்ந்தவர்களின் கருத்துக்களின் வாயிலாக அடையாளம் காண்கிறார். அதனால், அவரைப் பற்றிய ஊகங்களுக்கு இடமில்லை.

மனைவி செல்லம்மா, மகள் தங்கம்மாள், சகுந்தலா ஆகியோரின் அனுபவங்களிலிருந்தும், கருத்துக்களிலிருந்தும் பாரதியின் உள், வெளித் தோற்றங்களையும், ஈடுபாடுகளையும், நடைமுறைச் செயல்களையும் இனம் கண்டு வரையறை செய்கிறார்.

அதைப் போலவே அவருடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்த சமகால அறிஞர்களையும், அரசியல்வாதிகளையும், சமூகநலத் தொண்டர்களையும் குறிப்பிட்டு அவர்களுடைய கருத்துக்களின் வாயிலாக பாரதியின் தனித்தன்மையை அடையாளப்படுத்துகிறார்.

அவர்களில் ச. சோமசுந்தர பாரதி, ரா. கனகலிங்கம், குவளைக் கண்ணன், மண்டபம் ஸ்ரீநிவாசாச்சாரியார், சுதேசமித்திரன் பத்திராதிபர் ஜி. சுப்பிரமணிய ஐயர், நாகசாமி, வ. ராமசாமி, வ.வே.சு. ஐயர், வ.உ.சி, கிருஷ்ணசாமி ஐயர், உ.வே. சாமிநாத ஐயர் போன்றவர்களின் கருத்துக்களிலிருந்தும், அனுபவங்களிலிருந்தும் பாரதியின் உன்னதமான தன்மைகளை இனம் கண்டு அடையாளப்படுத்துகிறார்.

'மானுடம்' என்ற ஓர் உன்னதமான கருத்தாக்கம் எப்படியெல்லாம் பாரதியின் கவிதை, கதை, கட்டுரைகளில் வெளிப்படுகின்றன என்பதை அவருடைய படைப்புக்களிலிருந்து சான்று காட்டி விளக்குகிறார்.

தன்னைக் கட்டுதல், பிறர் துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல் என்ற பிரிவின் கீழ் பாரதி வாழ்க்கையின் அவலங்களை வகைப்படுத்துகிறார். சாதி வேறுபாடு, பெண்ணடிமை, மக்களில் உயர்வு தாழ்வு பேதம், கல்வியறிவின்மை, வறுமை போன்றவற்றிற்கு எதிராகக் குரல் எழுப்பும் பாரதியை அடையாளப்படுத்துகிறார். "மனிதர் நோக மனிதர் பார்க்கும் வழக்கம் இனியுண்டோ?" "மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம் இனியுண்டோ?" என்று உலகமக்களைப் பார்த்துக் கவிஞர் பாரதி கேட்கிறார். பிறர் துயர் தீர்த்தலில் ஆழ்ந்த கவனம் செலுத்தும் பாரதியை அறிமுகப்படுத்துகிறார் ஆய்வாளர். பிறர் நலம் வேண்டுதல் குறித்துத் தனது கவிதைகளின் வாயிலாக அறைகூவல் விடுக்கும் பாரதியையும் ஆய்வாளர் தெளிவாகக் காட்டுகிறார்.

பாரதியின் மனதில் தேசியத் தாக்கம் நிறைந்து அன்னையைப் போற்றுதலைப் போல ஆவேசத்துடன் நாட்டைப் போற்றுவதை அவரின் கவிதைகள் புலப்படுத்துவதை தகுந்த சான்றுகளுடன் விளக்குகிறார்.

வியக்கத்தகுந்த பாரதியின் கதைகளில் உள்ளார்ந்து நிறைந்து பரவிக்கிடக்கும் மானிடம் பற்றிய உணர்வுகளையும் குறிப்பிட்டுக்காட்டுகிறார். விதவை மறுமணம், மறுவாழ்வு போன்ற பெண் விடுதலைக் கோட்பாடுகளை முன்வைத்து மானுடத்தை பாரதி விளக்குவதையும் ஆய்வில் காணமுடிகிறது.

பாரதியின் சமுதாயச் சிந்தனை, கல்விச் சீர்திருத்தம் போன்றவற்றையும் இந்த நூலின் வாயிலாகத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

பாரதிக்குள் நிறைந்து பரவிக்கிடந்த ஆழமான, நுட்பமான, துல்லியமான இசையுணர்வையும் அவருடைய கவிதைகளின் வாயிலாக எடுத்துக் காட்டுகிறார் ஆய்வாளர். காணும் பொருளிலெல்லாம், கேட்கும் ஒலியிலெல்லாம் இசையைக் கண்டுணர்ந்து பரவசப்பட்டு மனம் பூரிக்க கவிதைகளாக வடிவப்படுத்திய பாரதியையும் இவர் நமக்கு விளக்கிக் காட்டுகிறார்.

தமிழுக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் தமிழ் வாழ்க்கைக்கும் புதிய பொருள்கண்டு புதிய தமிழில் தனது பங்களிப்பை மானுட உயர்வுக்குச் செலுத்திய பாரதியை ஆய்வாளர் தகுந்த எடுத்துக்காட்டுகளோடு இனம் காண்கிறார்.

மகாத்மா காந்திக்கும், பாரதிக்கும் இந்திய விடுதலைப் போராட்டத்தில் காணப்பட்ட வேறுபாட்டையும் இவர் கணக்கில் எடுத்துக் கொண்டு தனது தரப்பில் உறுதியாக நின்றதையும் காட்டுகிறார்.

ஆகவே, பாரதியாரின் பன்முகத்தன்மைகளை ஒருங்கிணைத்து அவருக்கு ஒரு முழுமையான அடையாளத்தை இந்தச் சிறிய நூலில் ஆய்வாளர் நிறுவியுள்ளார்.

தமிழுணர்வுள்ள ஒவ்வொருவரும் இந்த நூலைப் படித்துவிட்டு பாரதியின் படைப்புக்களின் ஊடாகப் பயணம் செய்யலாம். அல்லது பாரதியின் படைப்புக்களைப் படித்துவிட்டும் இந்த நூலின் வழியாகப் பயணம் செய்யலாம்.


வாசிப்புக்கு எளிமையாகவும், துல்லியமாகவும் வார்க்கப்பட்ட மொழியில் வடிவம் பெற்றிருக்கிறது இந்தச் சிறிய நூலான "பாரதி என்றொரு மானுடன்."


●


காவ்யாவின்
புதிய வெளியீடுகள்
மகாத்மா காந்தி காவியம்
தொகுதி: 1,2
விலை ரூ. 1700/-
மகாத்மா காந்தி காவியம்
புதுவை வட்டார நாட்டுப்புற மருத்துவம்
விலை ரூ. 360/-
விடுகதைகள்
விலை ரூ. 360/-
பாவேந்தரும் பாண்டியன் பரிசும்
விலை ரூ. 100/-
உணவும் வினையும்
விலை ரூ. 250/-
மரபணு என்னும் மாயக்கண்ணாடி
விலை ரூ. 110/-
வரதட்சணா
ரூ.100
பாண்டித்துரை
ரூ.400
16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024
பேச : 044 - 23726882 , 9840480232
மின்னஞ்சல் : kaavyabooks@gmail.com இணையம் : www.kaavyaa.com

# திரு.வி.க. பார்வையில் பௌத்தம்

அ.மார்க்ஸ்





1

**பௌத்த விளக்க அரங்கில் குழப்பம் விளைவித்த திரு.வி.க**

தமிழறிஞர் திரு. வி. கலியாணசுந்தரனார் சைவ மரபில் வந்தவர். சைவத்தில் தீவிரப் பற்றுமிக்கவர். சைவசமய சாரம், நாயன்மார் திறம், நாயன்மார் வரலாறு, சைவத் திறவு, பெரியபுராணம் குறிப்புரையும் வசனமும் முதலான நூல்களை எழுதியவர்.

அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கே பௌத்தம் பற்றிய ஆர்வத்தை ஏற்படுத்துவதற்குக் காரணமான டாக்டர் லட்சுமி நரசு மற்றும் பொது உடைமைக் கருத்துக்களைத் தமிழகத்தில் அறிமுகம் செய்த அறிஞர் சிங்காரவேலர் ஆகியோர் பவுத்தம் குறித்து நடத்திய கூட்டங்களில் சென்று, தான் சிறுவனாக இருந்த காலத்திலேயே குழப்பம் விளைவிக்கும் அளவிற்கு அவருக்கு சைவத்தின் மீது பற்று இருந்தது. அவர் எழுதியுள்ள 'வாழ்க்கைக் குறிப்புகள்' நூலில் அப்படியான தனது இளமைக்காலக் குறும்பு குறித்து திரு.வி.க கூறுவது:

"யான் மாணாக்கனாக இருந்தபோது கடலோரத்தில் விளையாடச் செல்வது வழக்கம். ஐஸ் அவுசுக்குப் பக்கத்திலேயுள்ள ஒரு கட்டிடத்தில் 'மகாபோதி சங்கம்' என்று தீட்டப் பெற்ற ஒரு நீண்ட பலகையைக் கண்டேன். ஒருநாள் அங்கே கூட்டம் கூடியிருந்ததைப் பார்த்தேன். அக்கூட்டம் என்னை ஈர்த்தது. ஒருவர் புத்தர் பிறப்பைப் பற்றிப் பேசினார். இன்னொருவர் நன்றி கூறினார். அவர் இலட்சுமி நரசு நாயுடு என்றும் இவர் சிங்காரவேல் செட்டியார் என்றும் தெரியலானேன். அக்கூட்டங்கள் எனக்கு வெறியூட்டின. வெறிகொண்டு சில மாணாக்கர்களைச் சேர்த்து ஒருநாள் பௌத்த சங்கக் கூட்டத்துள் நுழைந்தேன். அப்போது சிங்காரவேல் செட்டியார் பைபிள் சரித்திர சம்பந்தமான நூலாகாது எனப் பேசி முடித்தார். மறுவாரம் யான் பெருங்கூட்டம் கூட்டிச் சென்றேன். பௌத்தம் என்ற பகுதியில் சிங்காரவேல் செட்டியார் திருஞான சம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்கிய சரித்திரத்தை மறுத்து வந்தார். யான் குறுக்கிட்டேன். ஒரே கூக்குரல் எழுந்தது. யாரோ ஒருவர் 'வானரங்கள்' என்றார். மாணாக்கர் சும்மா இருப்பரோ? பெருங்குழப்பம் விளைந்தது. அன்று முதல் பௌத்த சங்க சொற்பொழிவுகளுக்கு தொல்லை விளைத்தே வந்தோம்."

தமது 'சிந்தனைச் சிற்பி சிங்காரவேலு வாழ்வும் சிந்தனையும்' நூலில் இம் மேற்கோளை எடுத்தாளும் பெரியவர்கள் கே.முருகேசன், சி.எஸ்.சுப்பிரமணியம் ஆகியோர், இந்தச் சம்பவம் நிகழ்ந்த காலகட்டத்தில் கலியாணசுந்தரனாரின் வயது 10 அல்லது 15 வயதுக்குள் இருக்கலாம் எனக் கணக்கிடுகின்றனர். அந்த வயதிலேயே சென்னை மெரினாவில் மீனவர் மக்கள் வசிக்கும் பகுதியில் செல்வாக்கு மிக்க வழக்குரைஞரான சிங்காரவேலர் மற்றும் அப்போது பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியராக இருந்த அறிஞர் லட்சுமி நரசு, பண்டிதர் அயோத்திதாசர் ஆகியோர் நடத்திய கூட்டங்களில் இந்தச் சிறுவர்கள் புகுந்து குழப்பம் விளைவிக்கும் அளவிற்கு அன்று சைவம் தீவிரமாக இருந்துள்ளதை அறிகிறோம். திரு.வி.க அவர்கள் அயோத்திதாசரின் பெயரைக் குறிப்பிடாவிட்டாலும் 'மகாபோதி சங்கம்' எனக் குறிப்பிடுவதிலிருந்து அது பண்டிதரின் ஏற்பாடு தான் என்பதை நம்மால் ஊகிக்க முடிகிறது.

**தனது வாழ்க்கைக் குறிப்புகளில் தொடர்ந்து திரு.வி.க சொல்வது:**

"கோமளீசுவரன் பேட்டை புதுப்பேட்டையிலே ஒரு பௌத்த சங்கம் கூடிற்று. அதிலே இலட்சுமிநரசு நாயுடு, சிங்காரவேல் செட்டியார் முதலியோர் பேசு கின்றனர் என்று கேள்வியுற்றேன். யான் கூட்டத்துடன் அங்கு சென்றேன். அங்குக் குழுமியிருந்த சிலர் என்னை உறுத்து உறுத்து நோக்கினர். எனக்கு அச்சமுண்டாயிற்று. யான் பேசாமலமர்ந்தேன். சிங்காரவேல் செட்டியார் டார்வின் கொள்கையைத் தமிழில் விளக்கினார். என் உள்ளம் அதில் ஈடுபட்டது."

திரு.வி.க அவர்கள் தீவிரமாகச் சைவ நெறியைப் பின்பற்றியவர் ஆயினும் பின்னாளில் அவர் ஒரு தொழிற்சங்கச் செயல்பாட்டாளராகவும், சமயப் பொறை உள்ள தமிழறிஞராகவும் விளங்கியவர். எனவே அவர் மனமாற்றம் கொண்டதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

பின்னாளில் அவர் பௌத்தம் பற்றி ஆற்றிய உரை 'தமிழ் நூல்களில் பவுத்தம்' எனும் குறுநூலாக வெளி வந்துள்ளது. எந்த லட்சுமி நரசு முதலானோர் கூட்டத்தில் அவர் குழப்பம் விளைவித்தாரோ அதே அறிஞர் நரசு அவர்கள் தலைமையில் நடந்த பௌத்த மாநாட்டில் அவர் ஆற்றிய உரை அது. அது குறித்து அந்நூலின் முன்னுரையில் திரு.வி.க சொல்வது:

"சன்மார்க்கக் கொள்கையுடைய அடியேனை தென்னிந்திய பௌத்த சங்கச் சார்பாகச் சென்னை சிந்தாதிரிப்பேட்டை 'ஹைஸ்கூல் நிலையத்தில்' 1928ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ம் தேதி அறிஞர் இலட்சுமிநரசு நாயுடு அவர்கள் தலைமையின் கீழ் கூடிய தென்னிந்திய பௌத்த மாநாட்டில், தமிழ் நூல்களில் பௌத்தம் எனும் பொருள்பற்றிப் பேசுமாறு அச்சங்கத்தார் பணித்தனர். அப்பணி மேற்கொண்டு, ஆண்டுப் போந்து அடியேன் நிகழ்த்திய விரிவுரையே இந்நூலின் உள்ளூறை" (தமிழ் நூல்களில் பௌத்தம், இரண்டாம் பதிப்பு, சாது அச்சுக் கூடம், இராயப்பேட்டை, சென்னை-14, 1952).


தமிழறிஞர் திரு.வி.க அவர்கள் பௌத்தத்தை எவ்வாறு காண்கிறார் என்பதை அந்நூலின் வாயிலாகப் பார்ப்போம்.

## 2

## இடைக்காலத் தமிழகத்தில் நடந்த சமயப் போர் பற்றி திரு.வி.க

திரு.வி.க அவர்கள் சைவத்தை வாழ்நெறியாக ஏற்றுக்கொண்டு வாழ்ந்தவர். பிற சமயப் பொறை என்பதை ஏற்றுக்கொண்டவர் ஆயினும் சைவமே சிறந்த ஒன்று என்பதை அவர் வெளிப்படுத்தத் தயங்கியவரும் இல்லை. அது மட்டுமன்று. தமிழகத்தில் நடந்த சமயப் போரின் ஊடாக சமணமும் பௌத்தமும் அழிக்கப் பட்ட வரலாற்றிலும் சைவத்தின் பக்கமே நியாயம் இருந்ததாகவும் கருதுபவர். எல்லாவற்றையும் தாண்டி பௌத்தத்தின் சில அடிப்படைக் கூறுகளை நுண்மை யாக அவர் எவ்வாறு கண்டு போற்றினார் என்பதைக் காண்பதே இங்கு நமது நோக்கம்.

"மெய்யறிவு விளங்கப் பெற்றால் எல்லாச் சமயங்களும் ஒன்றே. நாலா பக்கங்களிலும் தோன்றிய சமயக் குரவர்கள் யாவரும் அறிவுறுத்திய உண்மை



தமிழ் நூல்களில் பௌத்தம்

ஆக்கியோர் :

திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தரனுர்

இரண்டாம் பதிப்பு

சாது அச்சுக்கூடம்

இராயப்பேட்டை, சென்னை–14

1952

உரிமை
ஆக்கியோருடையது

விலை அணா 8

ஒன்றே. ஆனால் அவ் உண்மைப் பேற்றுக்குரிய முறைகளில் வேற்றுமை உண்டு. இந்த முறைகள் மாறக் கூடியவை" - என அவர் முன்னுரைப்பதிலிருந்து, எல்லாச் சமயங்களின் நோக்கும் இலக்கும் ஒன்றுதான். ஆனால் அவற்றை அடையும் நெறியும் முறையும்தான் வேறு வேறு என அவர் கருதுவது விளங்குகிறது.

இந்த இலக்கை அடையும் முறைகளில்தான் அவ்வப்போது மாசுகள் படிகின்றன எனவும், அவ்வாறு திரிபுகள் நேரும் போதெல்லாம் பெரியோர்கள் தோன்றி, திரிபுகளைப் போக்கி முறைகளைச் செம்மை செய்தார்கள் எனவும், அவ்வாறு செம்மை செய்தவர்களில் ஒருவர்தான் புத்தர் எனவும் திரு.விக தன் புரிதலை முன்வைக்கிறார்.

ஆனால் மற்ற மதங்கள் யாவும் கடவுளைப் பேசுகின்றன. போற்றுகின்றன. இறைவனடி சேர்வதையே இறுதிப் பயனாக உரைக்கின்றன. ஆனால் பௌத்தம் கடவுளைப் பற்றிப் பேசுவதே இல்லையே?

திரு.வி.க அதற்கு இப்படி விளக்கம் அளிக்கிறார்.

"புத்தர் கடவுளைப் பற்றி ஒன்றும் கூறாமையான் அவரை நாத்திகரெனச் சிலர் கருதுகின்றனர். புத்தர் அறமெனும் கடவுளைச் சீலம் எனும் வழிநின்று உணருமாறு அறிவுறுத்தல் போந்தார்."

பிற மதங்கள் கடவுளை வைக்கும் இடத்தில் பௌத்தம் அறத்தை வைக்கிறது என்பதையும். பிற மதங்கள் தம் இலக்கை அடைய பக்தி, வேள்வி, நோன்பு, புனித நீராடல் முதலான வழிமுறைகளை வைக்கும் இடத்தில் பஞ்சசீலம், தட்சீலம், எண்வழிப் பாதை முதலான அறவழிகளை மட்டுமே தன் இறுதி இலக்கை அடையும் நெறிகளாக பௌத்தம் முன் வைக்கிறது என்பதையும் திரு.வி.க மிக அற்புதமாகச் சொல்லிவிடுகிறார்.

அது மட்டுமல்ல, பௌத்தத்தின் தோற்றம் குறித்தும் திரு.வி.க மிகச் சரியான வரலாற்று உண்மைகளை முன்வைக்கிறார். இலக்கை அடையும் வழிமுறைகளில் மாசுகள் படியும்போது அவற்றை நீக்கி முறைகளைச் செம்மை செய்ய வந்தவராகப் புத்த பெருமானை முன்வைக்கும் கலியாணசுந்தரனார் அந்த "மாசுகள்" குறித்தும், அந்த மாசுகளை நீக்கப் போந்தவர் குறித்தும் இப்படிச் சொல்கிறார்:

"கடவுளை வேதம் எனும் நூலாகவும், யாகம் எனும் கொலைக் குழியாகவும், சாதி எனும் சாக்கடையாகவும் மன்பதை கொண்டதை மாற்றப் போந்த அறவோன், பெருமான்..." அவரே புத்தர்.

ஆக வேதம், யாகம் முதலியவற்றால் திரிந்து கேடு சூழ்ந்த உலகத்தைத் திருத்தவந்த அருளாளர்தான் புத்தர் என்பதை திரு.வி.க ஏற்றுக் கொள்கிறார். ஆனால் இன்று புத்தம் தான் தோன்றிய காலத்து அறங்களை எல்லாம் மறந்து இலங்கை, மியான்மர் முதலான நாடுகளில் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதை நாம் பார்த்துக் கொண்டுதான் உள்ளோம். அது குறித்தும் திரு.வி.க.வின் பார்வை சரியாகவே அமைகிறது.

"...புத்தர் பெருமான் போதனை இப்போது பௌத்தரென்று சொல்லிக் கொள்ளும் பலரிடமுஞ் சாதனையில் இல்லை... சமயக் குரவர்கள் செல்வழி எப்போதும் உலகம் நடப்பதில்லை. சமயக்குரவர் உருவங்களுக்கு மட்டும் வந்தனை, வழிபாடுகள் நிகழ்த்தி, அவர்களின் அறவுரைகளைக் குழிவெட்டிப் புதைப்பது உலகின் இயல்பாகிவிட்டது. இதற்கு சமயக் குரவர்கள் என் செய்வார்கள்? சமயம் என் செய்யும்...?"

இப்படி இதுவரை எல்லாவற்றையும் மனமாரச் சொல்லிவரும் அறிஞர் கலியாணசுந்தரனார் தமிழக வரலாற்றின் இடைக்காலத்தில் இங்கு நடந்த சமயப் போரைச் சொல்லும்போது மட்டும் சற்றே நிலை தடுமாறுகிறார்.

சமண பௌத்த மதங்கள் தமக்குள் சண்டையிட்டுக் கொண்டதை முதன்மைப்படுத்தியும், சமண பௌத்த மதங்களை அரசதிகாரத் துணையுடனும், கழுவேற்றல் முதலான வன்முறைகளினூடாகவும் சைவம் அழித்ததைத் தலைகீழாக்கியும் முன்வைப்பதைப் பார்ப்போம்.

"அறத்தில் பெரிதும் ஒற்றுமை வாய்ந்த சமண பௌத்த மதங்களே பின்னாளில் மறைந்து போரிட லாயின. பிற்காலத்திய சமண பௌத்தர்கள் போரைத் தம்மளவிலாவது நிறுத்திக் கொண்டார்களா? அவர்கள் தங்களுக்குரிய அறவொழுக்கங்களையும் முற்றாக மறந்து, கடவுள் இன்மை என்பதில் மட்டுமே கருத்தைச் செலுத்தி, மன்னர்களைத் தங்கள் வயப்படுத்திக் கடவுள் உண்மையில் உறுதியுடையவர்களைப் பலவாற்றாலும் துன்புறுத்தினார்கள்..."

"கண்டுமுட்டு, கேட்டுமுட்டு போன்ற கொடிய வழக்கங்கள் அவர்கள் வாழ்வில் நுழைந்த ஒன்றை ஈண்டுக் குறித்தல் தகும். சமண பௌத்தர்கள் என்று சொல்லக் கூடிய மக்கள் தங்களுக்குரிய சீலத்தை விடுத்துச் சீற்றத்தைக் கொண்டார்கள். இதற்கு சமணம் என் செய்யும்? பௌத்தம் என் செய்யும்?"

இது திரு.வி.க அவர்கள் இடைக்காலத்தில் இங்கு நடந்த சமயப் போர் குறித்துச் சொல்வன.

இங்கே ஒரு காலத்தில் அரச ஆதரவுடன் சமண பௌத்த அவைதீக மதங்கள் மேலெழுந்த நிலையில் சைவ சமயக் குரவர்களால் முன்னெடுக்கப்பட்ட பக்தி இயக்கம் மக்கள் ஆதரவையும் அரசாதரவையும் ஒருங்கே பெற்று அவற்றை வீழ்த்திய வரலாற்றை நாம் அறிவோம். இதன் பின்னணியில் பல வரலாற்றுக் காரணங்கள் இருந்தன. அதில் சமயம் சார்ந்த காரணிகளுக்கும் பங்குண்டு. சமயம் சாராத காரணிகளும் உண்டு. தமிழகத்தில் இக்காலகட்டத்தில் உருவான உறபத்தி முறை மாற்றங்கள், நிலவுடைமையின் வெளிப்பாடு முதலியன இதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

இந்தப் போரில் சமண பௌத்த மதங்கள் எந்தத் தவறுகளையும் செய்யவில்லை என நாம் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் வன்முறைகளுக்கான எல்லாப் பொறுப்புகளையும் சிரமண மதங்களின்பாற் சுமத்தி சைவத்தைக் களங்கமற்றதாக முன்வைப்பதை நாம் ஏற்க இயலாது. அப்பர், சம்பந்தர், சுந்தரர் முதலா னோர் எத்தனை வன்மத்துடன் சமண, பௌத்தத் தையும், சிரமண முனிவர்களையும் இழிவு செய்தனர் என்பதையும், எத்தனை வன்முறையாக அவர்கள் வெளிப்பாடுகள் அமைந்தன என்பதையும் நாம் இங்கே பட்டியல் போடும் முயற்சியில் இறங்க வேண்டாம்.

எனினும் கலியாணசுந்தரனார் அவர்கள் "கண்டு முட்டு, கேட்டுமுட்டு" என்பது போன்ற கொடிய வழி முறைகளைப் பயன்படுத்திச் சமண பௌத்தர்கள், தமக்குரிய சீலங்களைக் கைவிட்டுச் சீற்றத்தைக் கைக் கொண்டு, சைவத்துடன் போரிட்டதாகச் சொல் கின்றனரே அதுவென்ன?

## 3

## கண்டு முட்டும் கேட்டு முட்டும்

'கண்டுமுட்டு கேட்டு முட்டு' பற்றித் திருஞான சம்பந்தர்,

**"நீற்றுமேனிய ராயினர் மேலுற்ற**
**காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரைத்" (தேவாரம்)**

எனக் கூறுவதை ஒட்டித்தான் திரு.வி.கவும் பௌத்த சமண மதத்தவரைச் சீலமற்றவர்கள் என்கிறார். திருநீறு பூசிய மேனியர் மீது படும் காற்றும் தங்கள் மீது படக் கூடாது என்கிற நிலையை அமண மதத்தினர் மேற் கொண்டதாகச் சம்பந்தர் கூறுவதுதான் இக்குற்றச் சாட்டின் அடிப்படையும் ஆதாரமும்.

ஆனால் இந்தக் 'கண்டு முட்டு கேட்டு முட்டு' என்பதற்கு வேறு பொருளைச் சமணம் முன்வைக்கிறது. 'முட்டு' என்பது தடை எனப் பொருள்படும் சொல். சமண முனிவர்கள் மக்களிடமிருந்து ஒதுங்கி மலைக் குகைகளில் படுக்கைகள் அமைத்து அங்கே தவமியற்றி வாழ்ந்தவர்கள் என்பதை அறிவோம். பட்டினி நோன்பு என்பது அவர்களின் வாழ்முறைகளில் ஒன்று. உணவு அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல. எந்தெந்த முறை களில் எல்லாம் உணவைத் தவிர்ப்பது என அவர்களுக்கு நியதிகள் உண்டு. மலைக்குகைகளில் ஒதுங்கித் தங்கியுள்ள இவர்கள் தமக்குள் முறை வைத்துக் கீழிறங்கி மக்கள் வசிக்கும் தெருக்களில் அமைதியாகச் செல்வர். இல்லறத்தில் உள்ளோர் இப்படியான முனி - சாமிகளின் வருகைக்காகக் காத்திருந்து, அவர்கள் வரும்போது சென்று அவர்களின் கரங்களில் அமுதிடுவர். அவர்களும் வீதியில் நின்றவாறே அதை உண்டு தம் இருப்பிடம் திரும்புவர்.

சமண வழியினரான திருவள்ளுவர்,

**"துறந்தார்க்கும் துவ்வா தார்க்கும் இறந்தார்க்கும்**
**இல்வாழ்வான் என்பான் துணை"**

**"செல்விருந் தோம்பி வருவிருந்து-பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத்த வர்க்கு"**

எனக் கூறுவன இந்தப் பின்புலத்திலிருந்து சொல்பவை தான் என்கிற கருத்தும் உண்டு. 'செல்விருந்து' என்பது இப்படித் தெருவில் செல்லும் புனிதர்களுக்கு அன்னம் அளிப்பதைக் குறிப்பதுதான் என்பதாக அவர்கள் விளக்கம் அளிப்பர்.

அப்படிப் பிச்சை ஏற்றுப் பசி தீர்த்துக் கொள் வதற்காகத் தம் ஒதுங்கிடங்களிலிருந்து இறங்கி வருங் காலை அவர்கள் சில காட்சிகளைக் காண நேர்ந்தால் பிச்சை ஏற்பதைத் தவிர்த்துப் பசி ஆறாமலேயே தம் இருப்பிடம் திரும்புவர். அப்படித் தவிர்ப்பதற்கு ஏதுவாகும் காட்சிகளைத்தான் சமணர்கள் "முட்டு" என்கின்றனர். "கண்டு முட்டு" எனில் காட்சியால்

விளையும் தடை; "கேட்டு முட்டு" என்பது செவிப் புலனூடாக விளையும் தடை. இது குறித்துச் சமணர்கள் இவ்வாறு விளக்குவர்:

'தாம் உணவுண்ணும் முறைநாட்களில் தம் இருப்பிடங்களிலிருந்து கீழிறங்கி' வரும் வழிகளிலே கொலைகள், வேட்டையாடல்கள் போன்ற தீய செயல் களைக் கண்டால் உணவருந்த முட்டாகி விட்டதென மலையை நோக்கித் திரும்பி விடுவார்கள். அதே போன்று புலாலுணவு, கள் குடித்தல் போன்ற பேச்சுகளும், தீய சொற்களும் செவியில் விழுந்தால் முட்டெனத் திரும்பி விடுவார்கள். இவைகள் யாவும் நிகழாமல் ஊருக்குள் வந்து உணவேற்கும் நேரத்தில் காக்கை, கழுகுகள் வட்டமிட்டுக் கத்தினாலும் உணவைத் துறந்து நேரே சென்று விடுவார்கள். இவைகளையே கண்டு முட்டு, கேட்டு முட்டு என்று கூறுவதுண்டு.'

இது குறித்துத் 'தத்துவ நிஜானு போகசாரம்' என்ற நூல்,

**"கொன்றல் வேட்டல் குறைத்தல் கூப்பிடல்**
**கோழி கூகைகள் காகமும்**
**தின்றல் சோறெனப் புலா லிறைச்சிகள்**
**தீய சொற்கள் செப்புதல்**
**என்ற சொற்கள் அனந்தமும் செவி**
**யெய்திடில் சரிகைத் திறம்**
**அன்று முட்டென வோதும் முக்குடை**
**ஆதிநாதர் ஆகமம்"**

என விளக்கம் அளிப்பது இங்கே கருதத் தக்கது..

இதைத்தான் ஞானசம்பந்தர் அத்தனை வெறுப் புடன் குறிப்பிடுகிறார். திருநீரணிந்த மேனியரின் காட்சிகள், சொற்கள் ஆகியவற்றையே வெறுக்கும் அளவிற்குச் சமயப் பொறை அற்றவர்கள் என அமணர்கள் பற்றித் திரித்துரைக்கிறார்.

வேண்டுமானால் இப்படி நிகழ்ந்திருக்கலாம். சைவசமயத்தின் உட்சமயங்களாக அக்காலத்தில் விளங்கிய காபாலிகம், காளாமுகம், பாசுபதம் போன்ற பிரிவினர் குடித்தல், ஊன் உண்ணல், மண்டை ஓடுகளை மாலைகளாகவும், உண்ணும் பாத்திரங்களாகவும் தரித்துக் கொண்டும், வீதிகளில் பலவாறும் தீய சொற்கள் எனக் கருதுபவற்றைப் பேசிக் கொண்டும் அலைந்தனர் என்பதற்கு மகேந்திரபல்லவனின் 'மத்தவிலாசப் பிரகசனம்' எனும் நாடக நூல் நமக்குச் சாட்சியமாகக் கிடைக்கிறது. அப்படியான காட்சிகளையும், சொற் களையும் வேண்டுமானால் அமண முனிவர்கள் தவிர்த் திருக்கக் கூடும்.

இங்கு இன்னொன்றையும் குறிப்பிடல் தகும். சமண முனிவர்கள்தான் இவ்வாறு ஒதுங்கி இருந்தனர். இத்தனை தீவிரத்துடன் தமது நோன்புகளைக் கடை பிடித்தனர். பௌத்தத் துறவிகள் அவ்வாறு ஒதுங்கி வாழ்ந்தது இல்லை. புத்தர் ஒரு ததாகதர், வழிப்போக்கர். தம் சீடர்களுடன் தம்மை ஆதரிப்போர் உவந்து அளிக்கும் ஜேதவனங்களில் தங்கிச் செல்லும் வழக்க முடையவராகவே அவரும் அவரது சீடர்களும் இருந்தனர். புத்தபிரான் எதையும் முட்டென ஒதுக்கியதில்லை. மக்கள் அன்புடன் அளிக்கும் எதுவாயினும், அது சுஜாதை தங்கக் கிண்ணத்தில் அளித்த பாற் சோறாயினும், சுந்தன் அளித்த இளம் பன்றிக் கறியானாலும் ஒதுக்காது ஏற்றுக் கொண்டு அவர்களின் அன்பிற்கு மரியாதை அளித்தவர்.

அதுமட்டுமல்ல, நடந்து கொண்டு இருப்பது நூற்றுக்கணக்கான உயிரினங்களை நெருப்பிலிட்டு நடத்தப்படும் வேள்வியாயினும் அதை முட்டென ஒதுங்கிச் செல்லாமல், அங்கு சென்று அந்த வேள்வியைச் செய்து கொண்டிருப்போருடன் பேசத் தயங்காதவர். அவர்களை வென்றெடுப்பதையே நோக்காகக் கொண்டு வாழ்ந்தவர்.

திரு.வி.கலியாணசுந்தரனார் இவற்றையெல்லாம் புறந்தள்ளி, சமணம், பௌத்தம் இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகளையும் கருத்தில் கொள்ளாமலே இச்செய்தி களைப் பெய்துள்ளார் என்றே நாம் கொள்ள வேண்டும்.

எனினும் அன்று இராயப்பேட்டை புத்த சங்கத்தில் ஆற்றிய அந்த உரையில் பௌத்தம் குறித்த வெறுப்பு ஏதுமின்றி மிக நல்ல புரிதல்களுடன் மிக நுணுக்கமாகப் பலவற்றையும் அவர் கூறியிருத்தலைத் தொடர்ந்து காண்போம்.

## 4

## தமிழிலக்கியம் முழுமையிலும் பௌத்தத் தாக்கம் விரவிக் கிடக்கிறது

"ஈங்கொரு சமயக் கணக்கனாக நின்று கடனாற்றப் புகுகின்றேன் இல்லை. ஒரு ஆராய்ச்சிக்காரனாக நின்றே கடனாற்றப் புகுகின்றேன்" - என்று தன் உரையைத் தொடங்குகின்றார் திரு.வி.க. தான் சில உறுதியான சமய நம்பிக்கைகளைப் பின்பற்றுபவன் ஆனபோதிலும், தன் நம்பிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்காமல். ஒரு ஆராய்ச்சியாளனாக நின்று, என் அறிவிற்குப் பட்டதை உரைப்பேன் என்பது பொருள். அந்த வகையில் தன் உரை முழுவதையும் தனது மத நம்பிக்கைகளின் தாக்கம் ஏதும் இன்றி இங்கே முன்வைக்கிறார்.

'தமிழிலக்கியங்களில் பௌத்தம்' எனும் தன் தலைப்பிற்கேற்ப தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், ஐம்பெருங்காப்பியங்கள், திருமுறைகள், கம்பராமாயணம், புராணங்கள், பிற்பட்ட நூல்கள் என்பதாகத் தமிழிலக்கியம் முழுமையையும் பிரித்துக்கொண்டு இவற்றில் வெளிப் படும் பௌத்தக் கருத்துக்களையும், தாக்கங்களையும் சுருக்கமாக முன்வைக்கிறார்.

தொல்காப்பியத்தைத் திரு.வி.க சங்கத்திற்கு முற்பட்டதாகக் கூறுகிறார். இது சர்ச்சைக்குரிய ஒன்று. தவிரவும் புத்தர் காலத்துக்கு முற்பட்ட நூலாகவும், அதாவது கி.மு **6**ம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகவும் அதை அணுகுகிறார். இக்கருத்து உண்மையாயின் பௌத்தத் தாக்கம் ஏதும் அதில் உண்டா எனத் தேடிப் பயனில்லை. இறைமை குறித்துத் தமிழர்களின் பூர்வ நம்பிக்கை எவ்வாறிருந்தது என அறிய மட்டுமே தொல்காப்பியம் பயன்படும் எனக்கூறும் திரு.வி.க, அது ஒருவகையான இயற்கை வழிபாடு என்கிறார். சேய், மால், வேந்து, வண்ணம் என்றெல்லாம் தொல்காப்பியம் உரைப்பது இந்த இயற்கை அழகைத்தான் என்கிறார். அப்போது தமிழர்கள் மத்தியில் சாதி உணர்வும் கிடையாது எனவும், 'கந்தழி' எனக் குறிப்பிடப்படுவது அழுக்காறு, அவா, வெகுளி எனும் இம்மூன்று தீக்குணங்களும் அகன்ற ஒரு கட்டற்ற நிலைதான் என உரைக்கும் திரு.வி.க, பழந்தமிழர்களிடம் அறம், பொருள், இன்பம் எனும் சிந்தனைதான் இருந்ததே அன்றி 'வீடு' எனும் கருத்தாக்கம் இல்லை எனவும் குறிப்பிடுகிறார். மொத்தத்தில் இறை, மதம், சாதி முதலான கருத்துக்கள் உருவாகாத, இயற்கையோடு இயைந்த ஒரு வாழ்வுக் குரிய காலமாக அவர் தொல்காப்பிய காலத்தைக் குறிப்பிடுகிறார்.

புத்தர் தோன்றிய காலத்தைச் சொல்ல வருகையில் அதைக் 'கொலையும், குடியும், களவும், சாதிக் கொடுமையும்' வேள்வியின் பெயரால் உயிர்க்கொலை களும் நிறைந்த காலமென்கிறார். 'இக்கொடுமைகளை ஒழிக்க அறக்கிளர்ச்சி' ஒன்றைச் செய்த ஒரு கிளர்ச்சி யானாகப் புத்தரை திரு.வி.க முன்னிறுத்துவது குறிப்பிடத்தக்கது. வேள்வி மற்றும் பிறப்பில் உயர்வு தாழ்வு, அதாவது வருணம் ஆகியவற்றை ஒழித்து, யாண்டும் ஜீவகாருண்யம், சீலம், சமரசம் ஆகியவற்றை ஓம்பிய கிளர்ச்சியாளர்தான் புத்தர் எனக் கூறுவதோடு, இதுவே தொல்காப்பியம் கூறும் பழந்தமிழர்க் கொள் கையும் கூட என முன்வைத்து மேலே நகர்கிறார் திரு.வி.க.

தொல்காப்பியம் குறித்த திரு.வி.கவின் கருத்தை நாம் ஏற்க வேண்டும் எனில் அதில் ஆங்காங்கு வெளிப் படும் இதற்கு முரணான கருத்துக்களைப் பிற்சேர்க்கை களாகவே கருத வேண்டும். அப்படியான பிற்சேர்க் கைகள் பழம் நூல்களில் மேற்கொள்ளப் பட்டுள்ளது உண்மையே.

சங்க இலக்கியங்களான பாட்டு, தொகை மற்றும் கீழ்க்கணக்கு நூல்களைப் புத்தருக்குப் பிந்தியவை என ஏற்கும் திரு.வி.க, அவற்றில் பௌத்த தாக்கங்கள் மிகத் தொடங்கின என வாதிடுகிறார். கொலை, கொல்லாமை, கள்ளுண்ணல், கள்ளுண்ணாமை, பிற சமயக் கோவில்கள், பவுத்தப் பள்ளிகள், ஊன்வேள்வி, ஊனமில்வேள்வி எனத் தமிழ்நாடு அப்போது பெரிய 'கலம்பகமாக' இருந்த தென்றாலும் அவற்றுக்கிடையே கலகம் ஏதும் இல்லாத காலம் அது என்கிறார்.

"நாளடைவில் புத்தர் பெருமானின் அறநெறியே நாட்டில் ஓங்கி வளர்ந்தது. பதினெண்கீழ்க்கணக்கின் பாற்பட்ட நாலடியாரும் திருக்குறளும் இக்கருத்தை உறுதிப்படுத்தும். நாலடியாரும் திருக்குறளும் ஊன் வேள்வியையும், கொலையையும் எவ்வளவு உரமாகத் தடித்திருக்கின்ன என விரித்துரைக்க வேண்டியதில்லை. இதனால் விளங்குவதென்னை? புத்தர் பெருமானின் சென்னெறியின் வெற்றியே விளங்குகிறது" என பவுத்தக் கருத்துக்கள் பழந்தமிழ்க் கொள்கையினூடாகப் புகுந்து கலகம் விளைவித்ததன் ஊடாக வேள்விப் பண்பாட்டுத் தாக்கங்களை வீழ்த்தின என்கிறார் திரு.வி.க.

இங்கொன்றைச் சுட்டிக்காட்டுவது அவசியம். நாலடியார், திருக்குறள் ஆகியவற்றினடியாக வெளிப் படும் அறச் சிந்தனைகள் சமணம் சார்ந்தவை என்பது தான் இன்று பொதுவில் ஏற்றுக் கொள்ளப்படும் கருத்து. எனினும் இங்கு வி.க அதைப் பௌத்தத்தின் வெற்றியாகக் குறிப்பிடுகிறார்.

இதுகுறித்த நம் ஐயத்தை அவர் உடனடியாகப் போக்குகிறார்:

"சமணமும் பௌத்தமும் அறத்தில் பெரிதும் வேறுபடுவனவல்ல. மிகச்சில வேறுபாடுகளேயுண்டு. அவ்வேறுபாடுகளை ஈண்டுக் கருதல் அநாவசியம்" - என இதற்கான தன் விளக்கத்தை அளிக்கும் அவர் இரண்டுக்குமான முக்கிய வேறுபாடாகத் தான் கருதும் ஒன்றை மட்டுஞ் சுட்டிக் காட்டிவிட்டு மேற்செல்வார். அது:

"சமணர் உயிருண்மையை வலியுறுத்துவார்; பௌத்தர் அதை மறுப்பார்" எனக் கூறி அகலும் திரு.வி.க, 'நாலடியாரைச் சமண நூல் எனவும், திருக்குறளை சமண அறம் சார்ந்த பொது நூல்' எனவும் மிகச் சரியாக மதிப்பிடுவார்.

"புத்தர் பெருமானின் அருளறம் திருக்குறளில் யாண்டுங் கமழ்ந்து கொண்டிருத்தலே ஈண்டுக் கருதற் பாலது. அறத்தில் சமன பௌத்த சமயங்களில் எவ்வித மயக்கமும் எவருங் கொள்ள வேண்டியதில்லை" என அவர் கூறும்போது சிரமண அவைதீக மதங்கள் வலியுறுத்தும் அறங்களில் பெரிய வேறுபாடுகள் இல்லை. உயிருண்மை முதலான தத்துவார்த்த வேறு பாடுகள் வேண்டுமானால் இருக்கலாம் என்றாகிறது. இதுவும் ஏற்புடையதுதான்.

ஐம்பெருங் காப்பியங்களில் சிந்தாமணி பௌத்த நூலாயினும் அதில் காணும் அறங்கள் யாவும் பௌத்தத்திற்கு அரண் செய்பவைதான் என்றும், சமண

அறங்களில் பௌத்த அறங்களும் ஒன்றிவிடும் எனவும் கூறும் அவர் தொடர்ந்து சிலப்பதிகாரம், மணிமேகலை எனும் தமிழின் இரட்டைக் காப்பியங்கள் பற்றிச் சொல்வன நம் நெஞ்சை நெகிழ வைக்கும். அது:

“(அந்த) இரண்டு நூல்களின் நினைவு தோன்றும் போதே என் உள்ளம் இன்பக்கடலாடுகிறது. அவ் விரண்டு நூல்களையும் ஈன்ற தமிழ்நாட்டை மீண்டும் காணவேண்டும் என்பது என் தணியாக் காதல்.”

சிலப்பதிகாரம் சமணநூல் என்பது ஆய்வாளர்களின் முடிபு. மணிமேகலை பௌத்த நூல் என்பதை விளக்க வேண்டியதில்லை. “சிலப்பதிகாரம் சமண நூலாயினுமாக; பௌத்த நூலாயினுமாக. அதில் பௌத்த அறம் மலிந்து கிடக்கிறது. பௌத்த தருமமே சிலப்பதிகாரம் எனும் நாடகத் தமிழ் நூலாக உருக்கொண்டதென நான் கூறுவேன்” என வியந்து மேற்செல்லும் திரு.வி.க கோவலனும் கண்ணகியும் சோழநாடு விடுத்து பாண்டி நாடு செல்லும் போதான வழிநடைக் காட்சிகள் உட்பட எங்கும் சிலப்பதிகாரத்தில் பவுத்த அறங்கள் ஒழுகி வழிகின்றன எனச் சொல்லி. “புத்த பெருமான் எல்லாவற்றையும் தர்மமயமாக்கிவிட்டார்” என்பார்.

சிலம்பை இப்படி வியக்கும் கலியாணசுந்தரனார் மணிமேகலையை ஒரு அறநிலையம் எனத் தொழுவார்.

“மணிமேகலையின் சொல்லெல்லாம் அறம். பொருளெல்லாம் அறம். மணிமேகலையின் நாடெல்லாம் அறம். காடெல்லாம் அறம். புத்தர் பெருமானைத் தமிழிற் காட்டும் ஒரு அற நிலையம் மணிமேகலை” என நெகிழ்வார்.

பௌத்தம் அல்லாத பிற சமயத்தார்களின் கொள்கைகளை எல்லாம் ஒவ்வொன்றாகக் கேட்டு மறுப்பதாக அமையும் ‘சமயக் கணக்கர் திறங் கேட்ட காதை’யில் அக்காலத் தமிழகத்தில் மிளிர்ந்த சமயங் களை எல்லாம் காணக் கிடைப்பதைச் சொல்லி, பூத வாதத்திற்கும் (உலகாயதம்), பௌத்தத்திற்கும் இடை யிலான வேறுபாடாக மணிமேகலை முன்வைப்பதை மட்டும் சுட்டிக் காட்டுவார்.

“இம்மையும் இம்மைப்பயனும் இப்பிறப்பே / பொய்மை மறுமையுண்டாய் வினை துய்த்தல்” - எனப் பூதவாதி மறுபிறவி என்பதொன்றும் இல்லை என்பான். ஆனால் ஏற்கனவே புத்த பீடிகையின் மூலம் தன் முற்பிறப்பை உணர்ந்துள்ள மணிமேகலை உள்ளுக்குள் நகைப்பாள். அதற்கு முன்வரை பல்வேறு சமயக் கணக்கர் களின் திறங்களையும் அறிந்து, அவை தவறென்று உணர்ந்தாளென்றாலும் பதில் கூறாமல் அடுத்தவர் கொள்கையைக் கேட்கத் துவங்கும் மணிமேகலை இப்போது இந்த உலகாயதவாதியிடம் மட்டும் வாதிட்டு வெல்வாள். இதைச் சுட்டிக் காட்டும் திரு.வி.க. இங்கு சிலர் பௌத்தத் தத்துவம் உலகாயதம் தான் எனச் சொல்வதை நினைவூட்டி, அவர்கள் பௌத்த நூலாராய்ச்சி இல்லாதோர் என்பார். “இம்மை, மறுமை, நல்வினை, தீவினை, உயரிய நிர்வாண நிலை முதலியன பௌத்தத்திலுண்டு. இவ்வுண்மை மணிமேகலையை ஒருமுறை வாசிப்போர்க்கும் இனிது புலனாகும். மெய்யுணர்வு விளங்கியதும் பழம்பிறப்புணர்தல் என்பது பௌத்தத்தின் சிறந்த கொள்கைகளுள் ஒன்று” எனக் கூறி மணிமேகலைக் காலத்து அறஞ்செறிந்த தமிழ் நாட்டை மீண்டும் காண்போமா என வியப்பார்.

“மணிமேகலை நமக்கு வழங்கும் அமுதச் செம்பொருள்களைப் பருகாத மக்கள் மக்களா என்று வினவுகிறேன். மணிமேகலையில் எங்கணும் அறம்; எங்கணும் அன்பு; எங்கணும் அருள். மணிமேகலையில் சாதி கடிதல், பலி யொழித்தல், உயிர்க்கொலை நிறுத்தம் முதலியன யாண்டும் யாண்டும் மிளிர்கின்றன. மணிமேகலையில் ஒப்புரவில்லா இடமுண்டோ. பழம் பிறப்புணர்வோ மணிமேகலையில் பரந்தொளிர்கிறது. அவ்வற நூலின் மாண்பை என்னென்று சொல்வேன்?” என நெஞ்சுருகிச் சொல்வார்.

வளையாபதி, குண்டலகேசி எனும் இரு பௌத்த காப்பியங்களும் இன்று முழுவதும் கிடைக்காமற் போனமைக்காக மனம் நெகிழும் திரு.வி.க, கிடைக்கும் பாக்களின் ஊடாகப் பார்க்கும்போது முன்னதில் பௌத்தம் உயிர்நாடியாக உள்ளதும், பின்னதில் ‘பழம் பௌத்தம்’ ஒளிர்வதும் கண்கூடு என்பார்.

பழம் பௌத்தம் எனத் தான் சொன்னதற்கான காரணத்தையும் விளக்குவார். சமணம், பௌத்தம் இரண்டும் பின்னாளில் சமய வாதங்களில் ஈடுபட்டன என்றும், “அறம் எனும் உயிர்நாடி அறப்பெற்று வெறும் பெயர் எனும் உடலங்களாக மட்டும் உலவலாயின” என்றும் விளக்கி, காப்பிய காலத்திற்குப் பிந்திய பௌத்த சமண மதங்கள் தம் அறப் பண்பில் தாழ்ந்தன என உணர்த்துவார். எனினும் எல்லா சமயங்களுக்கும் நேரும் கதி இதுதான் எனவும், மக்களின் குறைபாடுகளே அதற்குக் காரணம் எனவும் ஆறுதல் கொள்வார்.

அடுத்ததாகத் திருமுறைகளில் பௌத்தம் குறித்துப் பேச உள்ள நிலையில் இப்படியான ஒரு முன்னுரைப்பு சைவ நெறியாளரான திரு.வி.க.வுக்குத் தேவைப் படுவதைப் புரிந்து கொள்கிறோம். எனினும் அவர் சொன்னதை நம்மால் முற்றிலும் மறுக்கவும் இயலாது. அரச மதங்களாக இன்று இலங்கையிலும், மியான் மரிலும் கோலோச்சும் பௌத்தம் அவ்வாறு தன் அற அடிப்படைகளை இழந்து நிற்பதைப் பார்க்கிறோம் தானே.

- தொடரும்

# நியூ செஞ்சுரியின் மார்க்சிய நூல்கள்




## அரசும் புரட்சியும்

அரசைப் பற்றிய மார்க்சியத் தத்துவமும் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளும்


**வி.இ. லெனின்**


அரசும் புரட்சியும் என்னும் இந்நூல் சோவியத் புரட்சி நடந்து கொண்டிருந்த காலத்தில் வெளிவந்தது. ஒரு நூற்றாண்டு கடந்தும் திரும்பத் திரும்ப வாசிக்கப்படுகின்ற சகாப்தம் படைத்த நூல்களில் இதுவும் ஒன்று.

## கூலி விலை லாபம்

**கார்ல் மார்க்ஸ்**

மார்க்சிய அரசியல் பொருளாதாரத்தின் அடித்தளங்களில் ஒன்றான உபரி மதிப்பு கோட்பாட்டை மார்க்ஸ் முதன்முதலாக கூலி விலை லாபம் என்ற இந்நூலில் எடுத்துக் கூறினார்.




## கூலியுழைப்பும் மூலதனமும்


**கார்ல் மார்க்ஸ், தமிழில்: ரா.கிருஷ்ணையா**

இந்த நூலில், மார்க்ஸ் அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைகள் தெரியாதவரும் விளங்கிக் கொள்ளும் வண்ணம், கூலியுழைப்பிற்கும் மூலதனத்திற்கும், தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இடையிலான உறவை அடிப்படையாகக் கொண்ட இச்சமூகத்தைத் திறந்து காட்டுகிறார்.

## மார்க்ஸிய அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைகள்

**எல்.லியான்டியாவ்,** தமிழில் **தா.பாண்டியன்**

மார்க்ஸிய அரசியல் பொருளாதார இயல். இந்த அறிவு இயலின் அடிப்படைகளை ஆழமாகவும் எளிமையாகவும் எடுத்துக் கூறுகின்றது இந்த நூல்.







## கம்யூனிஸ்டு அகிலம்

வரலாற்று சுருக்கம்

அ. சோபலெவ், கி. ஷிரினியா, ஃபி. ஃபீர்சவ், **தமிழில் ரா. கிருஷ்ணையா**

கம்யூனிஸ்டு அகிலம் 1919 முதல் 1943 வரை செயல்பட்டது. இந்தக் காலத்தில் உலகப் புரட்சி இயக்கங்கள் முகம் கொடுத்த சிக்கல்கள், அவை குறித்து எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றிய ஆழமான சித்திரத்தை இந்நூல் வழங்குகின்றது.



# சூழல் அக்கறையுடன் பேசும் நூல்

பி. ஆர். நடராஜன்

சுற்றுச்சூழல் நூல்களை எழுதுவதில் அக்கறை கொண்டவர் சுப்ரபாரதிமணியன். அவரின் சாயத்திரை, புத்துமண் போன்ற நாவல்கள், சூழல் அறம், மேக வெடிப்பு, மூன்றாம் உலகப்போர் கட்டுரை நூல்கள் உட்பட பத்துக்கும் மேற்பட்ட கட்டுரை நூல்கள் இதைச் சொல்லும். அந்த வரிசையில் இந்நூல் எழுதிய அனுபவத்தை இப்படிச் சொல்கிறார். "பசுமை விகடனின் 'ஒரு நாள் விவசாயி' நிகழ்ச்சிக்கு மது ராமகிருஷ்ணனின் பொள்ளாச்சி இயற்கை வேளாண்மைப் பண்ணைக்குச் சென்றிருந்த போது காலை, மதியம் உணவு வகைகளை திருவோட்டில் வழங்கினார். நண்பர்கள் ஒருவிதக் கூச்சத்தால் நெளிந்தனர். பிறகு திருவோடு மரத்தைக் காட்டியவர் இது அழிந்து வரும் மரம் என்றார். அதன்பின்னதான அவருடனான பேச்சில் அழிந்து வரும் மரங்கள் பட்டியலைத் தந்து எழுதச் சொன்னார். சில புத்தகங்கள், இணையதளச் செய்திகள் என் தேடலுக்கு உதவி செய்தன."

இதில் மறைந்து வரும் 30 மரங்கள் பற்றிய செய்திகள் உள்ளன. தாவரவியல் செய்திகள், மருத்துவச்செய்திகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இலக்கிய ரீதியான தகவல்கள் இதன் சிறப்பம்சம். சுப்ரபாரதிமணியன் ஒரு எழுத்தாளர் என்ற வகையில் பல நவீன கவிதைகளை (நாஞ்சில் நாடன், கல்யாண்ஜி, தேவதேவன்) மற்றும் சங்க இலக்கியப் பாடல்களை மேற்கோள் காட்டுவது வெகு சிறப்பு.

உதாரணமாய் சில : இலந்தை பள்ளிப்பருவத்தில் பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் வெளியே இலந்தைப் பழம் வாங்கி சாப்பிடுவோம். இதன் வரலாறு , வகைகள் விரிவாய் உள்ளது.

பூவரசம் பீப்பி எங்கே? கைகளில் சுற்றிய பம்பரங்கள் எங்கே?

நடைபழக்கிய நடை வண்டி எங்கே? அரைஞான் கயிறு எங்கே?

தென்னை ஓலை விசிறி எங்கே? பனை ஓலை விசிறி எங்கே?




**மறைந்து வரும் மரங்கள்**
சுப்ரபாரதிமணியன்
*வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,*
*41- பி, சிட்கோ இண்ட்ஸ்ட்ரியல் எஸ்டேட்*
*அம்பத்தூர், சென்னை - 600 098.*
*தொலைபேசி எண்: 044 - 26359906*
*₹ 100/-*

பல்லாங்குழி எங்கே? கிச்சு கிச்சு தாம்பாளம் எங்கே?

தெல்லு விளையாட்டு எங்கே? கோபிபிஸ் விளையாட்டு எங்கே?

சாக்கு பந்தயம் எங்கே? கில்லி எங்கே?

கோலிகுண்டு எங்கே? கோலிசோடா எங்கே?

இப்படி எங்கே எங்கே என்று கேட்கிற கேள்விகள் இன்று நீண்டு கொண்டே இருக்கின்றன.

நம் இலக்கியங்கள் அடையாளப் படுத்திய பாடல் பெற்ற சிறப்புடைய நானூற்றி சொச்சம் மரங்களில் எத்தனை மரங்கள் இப்போது உள்ளன. உலகின் தற்போதைய மக்கள் தொகையான 7.2 பில்லியன் எதிர்வரும் 2050-ம் ஆண்டு 9.2 பில்லியனாக உயரும் எனக்கூறுகிறார்கள். நிலம், நீர், காற்று மற்றும் ஏனைய இயற்கை வளங்களை முறையற்ற வகையில் பயன் படுத்துவதே காரணமாகும். புவி வெப்பமயமாதல், ஆற்றல் பற்றாக்குறை, அதிகப்படியான உணவுத் தேவை, பாதுகாப்பு, மண்வளம், காலநிலை மாற்றம், உயிரினங்களின் அழிவு மற்றும் பருவகால மாற்றங் களினால் ஏற்படும் நோய்கள் போன்றவை தற்கால சூழலின் சவால்களாகத் திகழ்கிறது. 2016-ம் ஆண்டு உயர்ந்த அளவில் வெப்பநிலை உலகெங்கிலும் காணப் பட்டது. அனலால் அலறினோம். 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட ஆற்றல் தேவைகள் நிலக்கரியின் மூலம் பெறப்படுவதால் சூழல் மாசுபாடு அடைவதோடு புவி வெப்பமயமாதலுக்கும் முக்கிய காரணியாக விளங்கு கிறது. இந்தியாவில் 365 விலங்கினங்களும், 1236 தாவர இனங்களும் அழியும் தறுவாயில் உள்ளதாக இந்திய விலங்கியல் கணக்கெடுப்பு நிறுவனம் கூறியுள்ளது. மேற்கண்ட சூழல் சவால்களை எதிர்கொண்டு சூழல் மண்டலங்களைக் காப்பதற்கு பல்துறை ஆராய்ச்சி இன்றியமையாததாக விளங்குகிறது. மாசு இல்லாத உலகில் அன்று மனிதர்கள் வாழ்ந்தார்கள். நோய் பயம் இல்லாமல் நீண்ட ஆயுள் பெறமுடிந்தது. காற்று மண்டலத்தில் உள்ள விண்வெளியை வனங்கள் தூய்மைப்படுத்தின. தொழில் புரட்சியின் விளைவால் வனங்களின் அழிவு தொடங்கியது. நெருக்கமான நகரக்குடியிருப்புகள் தோன்றின. கிராமமாயிருந்த இடங்களில் மாநகரங்கள் தோன்றின. அபூர்வமான மரங்களும் அழிந்து வருகின்றன என்கிறார்.

அதற்கான விழிப்புணர்ச்சியாய் மறைந்து வரும் சில மரங்கள் பற்றி இத்தொகுப்பு பேசுகிறது. மரங்கள் பற்றி அறிந்து கொள்ள நல்ல நூல் இது. மரங்களின் அவசியம், அவற்றைப் பேண வேண்டிய அவசியம் பற்றி இந்நூல் சூழல் அக்கறையுடன் பேசுகிறது. ●

## தற்போது விற்பனையில்...
## மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வுநூல்கள் 20 தொகுதிகள்

**விலை ₹ 5000/-**




மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள் வரிசையில் தொகுதி ஒன்று, 1848 கம்யூனிஸ்ட் அறிக்கையை அடையாளமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. 1841ஆம் ஆண்டிலிருந்து மார்க்ஸ் எங்கெல்ஸ் ஆகியோரின் சிந்தனை எவ்வாறு கம்யூனிஸ்ட் அறிக்கையை நோக்கி நகர்ந்து வந்தது என்பதை இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள நூல்களும் கட்டுரைகளும் எடுத்துக்காட்டுகின்றன.




மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள் தொகுதி 2 மார்க்சின் முதல் நூல்களில் ஒன்றான ''மெய்யறிவின் வறுமை: திரு புரூதோன் எழுதிய 'வறுமையின் மெய்யறிவு' என்னும் நூலுக்குப் பதில்'' என்ற முழு நூலையும் புரூதோன் பற்றிய மார்க்சின் ஒரு வரைவுரையையும், கூடுதலாக இரண்டு அரசியல் பொருளாதாரக் கட்டுரைகளையும் கொண்டுள்ளது.




மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்களின் மூன்றாவது தொகுதி மூன்று அற்புதமான நூல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவை பிரான்சில் வர்க்கப் போராட்டங்கள், லூயி போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர், ஜெர்மனியில் புரட்சியும் எதிர்ப்புரட்சியும் எனும் நூல்கள். கூடுதலாக தொகுப்பின் இறுதியில் இரண்டு கட்டுரைகள் இணைக்கப்பட்டுள்ளன. மூன்று நூல்களுமே மேற்கு ஐரோப்பிய நாடுகள் இரண்டில் அந்த நூற்றாண்டின் மைய ஆண்டுகளில் நிகழ்ந்த தீவிரமான சமூக மாற்றங்களை நோக்கிய மக்கள் எழுச்சிகளைப் பற்றியவை.




மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள் நான்காம் தொகுதியில் மார்க்ஸ் எழுதிய அரசியல் பொருளாதார விமர்சனத்துக்கு ஒரு கருத்துரை என்ற நூல் இடம்பெற்றுள்ளது. இது 1858 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதத்திற்கும் 1859ஆம் வருடம் ஜனவரி மாதத்துக்கும் இடையில் எழுதப்பட்டது. இதை எழுதுவதற்குப் பதினைந்து வருடங்களுக்கு முன்பிருந்தே மார்க்ஸ் பன்முகத் தன்மை வாய்ந்த ஆராய்ச்சியை மேற்கொண்டு வந்தார்.




ஐரோப்பா கடந்து சென்ற வரலாற்றை அதே தடங்களின் வழி கீழை நாடுகளும் கடக்க வேண்டும் என்ற பார்வையிலிருந்து அவர் விலகிச் சென்று மேற்கல்லாத நாடுகளின் மார்க்சியத்திற்கான விரிந்த வெளியைத் தனது எழுத்துக்களின் ஊடாக உருவாக்கியுள்ளார். மார்க்ஸ் உருவாக்கித் தந்துள்ள அவ்வெளியைப் பயன்படுத்திக் கொள்ள இத்தொகுதி உதவும்.




சர்வதேசத் தொழிலாளர் சங்கம் குறித்த ஆவணங்களையும் கட்டுரை களையும் கொண்ட இத்தொகுதி வரலாற்றுரீதியாக முக்கியமான சில பிரச்சினைகளைத் தொட்டு நிற்கிறது. பாட்டாளி வர்க்க சர்வதேசியம், பல நாடுகளில் பணிபுரியும் சங்கங்கள், கட்சிகள் ஆகியவற்றுக்கிடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு, ஒவ்வொரு நாட்டிலும் நிலவும் பிரத்தியேகமான பிரச்சினைகளில் தனித்த அக்கறை எனப் பல கோணங்களில் அகிலத்தின் விவாதங்களை வளர்த்தெடுத்துள்ளார்.

மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள் ஏழாவது தொகுதி, 1871ல் பாரிசில் நிகழ்ந்தேறிய வரலாற்றுச் சிறப்பு மிக்க தொழிலாளர் எழுச்சியையும் அதைத் தொடர்ந்து அமைந்த ''பாரிஸ் கம்யூன்'' என்ற முதல் தொழிலாளர் ஆட்சியமைப்பைப் பற்றியுமான ஆவணங்கள் மற்றும் மார்க்சின் கட்டுரைகள், அறிக்கைகள், நேர்முகங்கள் ஆகியவற்றைக் கொண்டமைந்துள்ளது.







மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள் எட்டாம் தொகுதியில் மூலதனம் பற்றிய எங்கெல்சின் எழுத்துகளும், மூலதனம் நூலில் இந்தியாவைப் பற்றி வரும் மிக முக்கியமான பகுதிகளும் இடம்பெற்றுள்ளன. மூலதனம் நூலுக்கான எங்கெல்சின் மதிப்புரைகளும் பொழிப்பும், மூலதனம் நூலைப் பயில்வதற்கான மிகச் சிறந்த கையேடுகள் ஆகும்.

1872லிருந்து 1883 வரையிலான காலப்பகுதியில் மார்க்சும் எங்கெல்சும் எழுதிய சில முக்கியமான சிறுநூல்களும் கட்டுரைகளும் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இத்தொகுதியின் நூல்களும் கட்டுரைகளும் மார்க்ஸ், எங்கெல்சுடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்த பல சிந்தனைப் போக்கினரை நமக்கு அறிமுகப்படுத்துகின்றன. பகூனிஸ்டுகள், புரூதோனியர்கள், பிளாங்கியர்கள், லஸ்ஸலியர்கள், நரோத்னிக்குகள் போன்றோர் அவர்களில் முக்கியமானவர்கள். இவர்கள் அனைவருடனும் மார்க்சும் எங்கெல்சும் காத்திரமான கருத்தியல் மோதல்களில் ஈடுபட்டிருக்கின்றனர்.







மார்க்ஸ், எங்கெல்ஸ் தேர்வு நூல்கள் பத்தாவது தொகுதி எங்கெல்சால் 1878ல் எழுதப்பட்ட ''டூரிங்குக்கு மறுப்பு'' என்ற ஒரே நூலை முழுவதும் கொண்டுள்ளது. மார்க்சியத் தத்துவம், அரசியல் பொருளாதாரம், சோசலிசம் என்ற மூன்று பகுதிகளையும் முதன்முறையாக ஒரே நூலில் கொண்டுள்ளது என்பது இந்நூலின் சிறப்பு ஆகும். மூன்று பகுதிகளை இந்நூல் ஒன்றாக்கிக் காட்டியுள்ளது என்பதிலிருந்து இம்மூன்று பகுதிகளும்தான் மார்க்சியத்தின் மூன்று அடிப்படையான உட்பகுதிகள் என்பது இந்நூலின் அமைப்பின் வழி நிறுவப்பட்டுள்ளது.




மார்க்ஸ் எங்கெல்ஸ் நூல்களின் 11 ஆம் தொகுதி நான்கு பாகங்களைக் கொண்டுள்ளது. முதல் பாகம், ''கற்பனாவாத சோசலிசமும் விஞ்ஞான சோசலிசமும்'', இரண்டாவது பாகம், ''கூலி முறை'', மூன்றாவது பாகம், 1848-1849 ஆம் ஆண்டுகளில் மார்க்ஸ் புதிய ரைன்லாந்து பத்திரிகையின் ஆசிரியராகப் பணி புரிந்த சூழல்களை விவரிக்கும் கட்டுரை, நான்காவது பாகமாக மற்றுமொரு நீண்ட கட்டுரை ''கம்யூனிஸ்டுகள் சங்கத்தின் வரலாறு''.




மார்க்ஸ்-எங்கெல்ஸ் நூல்வரிசையின் தொகுதி 12ன் முழுப்பரப்பையும் எங்கெல்சின் ''குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்'' என்ற நூல் தழுவி நிற்கிறது. முதலாளியத்திற்கு முந்திய யுகம் பற்றிய இந்நூலின்றி உண்மையில் இன்றைய மார்க்சியத்தின் வரலாற்றுக் கோட்பாட்டை முழுவடிவில் உருவகிப்பதே சாத்தியமில்லாத ஒன்றாகும்.




மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள் பதிமூன்றாம் தொகுதியில் எங்கெல்சின் இயற்கையின் இயக்க இயல் நூல் இடம்பெற்றுள்ளது. மார்க்சின் மூலதனம் நூல் கையெழுத்துப் படிகளை வெளியிடும் பணி தம் தோள்களின் மீது விழுந்து விட்டதால், இந்நூலை எங்கெல்ஸ் முழுமையாக எழுதி முடிக்கவில்லை. ஆயினும் உள்ளிணக்கமும் தெளிவும் இந்நூலில் மிளிரவே செய்கின்றன.




மார்க்ஸ் எங்கெல்சின் நூல்கள் தொகுதி 14ல் எங்கெல்சின் இரண்டு வகையான எழுத்துக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. முதல் பகுதியில் ''லுத்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும்'' என்ற எங்கெல்சின் சிறு நூல் அமைந்துள்ளது. இரண்டாவது பகுதியில் கிறித்தவம் பற்றிய எங்கெல்சின் மூன்று ஆய்வுக்கட்டுரைகள் அமைந்துள்ளன. உலக வரலாற்றுக்குச் சொந்தக்காரர்களான அதே உழைக்கும் மக்களே இனி அதன் தத்துவத்திற்கும் உரிமைதாரர்கள் என்ற செய்தியையே அவரது ''முடிவு'' என்ற சொல்லில் பெறுகிறோம்.




சமகால வரலாறு, அரசியல், சோசலிச இயக்கங்களின் பிரச்சினைகள் ஆகியவற்றைத் தம்முள் கொண்ட நான்கு சிறிய, பெரிய கட்டுரைகள் 15வது தொகுதியில் இடம்பெற்றுள்ளன. முதலாளியத்தின் அபரிமிதமான சக்திக்கு எதிராக நிற்கும் சிறு விவசாயிகளிடம் உங்களுடைய தனிப்பட்ட சொத்து களைப் பாதுகாப்போம் என்று எந்தச் சமயத்திலும் நாம் வாக்கு கொடுக்க முடியாது என்கிறார் எங்கெல்ஸ். திட்டவட்டமாக சிறு விவசாயிகளுக்கு நாம் ஆதரவாக இருக்கிறோம். அவர்களுடைய சொத்து உறவுகளில் நாம் பலவந்தமாக தலையிட மாட்டோம் என்பதை நாம் உறுதியாகக் கூறமுடியும். ஆயின் சிறு விவசாயிகளின் சொத்துரிமைகளை அப்படியே பாதுகாப்பது என்பது சாத்தியமல்ல என்று எங்கெல்ஸ் எழுதுகிறார்.




மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள் தொகுதி 16 மார்க்சின் இந்திய வரலாறு பற்றிய சுருக்கமான குறிப்புகளைக் கொண்டமைந்துள்ளது. இக்குறிப்புகள் 1879-82 ஆம் ஆண்டுகளில் மார்க்சால் எழுதப்பட்டவை. ஆங்காங்கே மார்க்ஸ் விட்டுச் செல்லும், ''இந்தியாவின் சமூகக் கூட்டமைப்பில் மிகவும் பலம் வாய்ந்த அரசியல் சக்தியாக புரோகித வர்க்கம் விளங்கியது'' போன்ற பல குறிப்புகள் நமது கவனத்தைக் கவருகின்றன; ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டுகின்றன.

மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வு நூல்கள் பதினேழாம் தொகுதியில் எங்கெல்சின் இளமைக் காலக் கடிதங்களும், தத்துவார்த்தப் பிரச்சினைகளைப் பேசும், மார்க்சும் எங்கெல்சும் எழுதிய மிக முக்கியமான கடிதங்களும் கடிதப் பகுதிகளும் இடம்பெற்றுள்ளன. மார்க்ஸ், எங்கெல்ஸ் வழங்கிய அறிவு இலக்கியச் செல்வத்தில் மிக முக்கியமான பகுதி அவர்கள் எழுதிய கடிதங்கள் என்று லெனின் கூறுகின்றார்.








மார்க்ஸ்-எங்கெல்ஸ் தேர்வுநூல்கள் 18,19ஆம் தொகுதிகளில் சோவியத் அறிஞர்கள் எழுதியுள்ள மார்க்சின் வாழ்க்கை வரலாறு இடம்பெற்றுள்ளது. இது மிகப் பெரிய நூலாக அமைந்து போய்விட்டதாலேயே, அதுவும் பல ஆசிரியர்களால் எழுதப்பட்ட நூலாக அமைந்துள்ளதாலேயே இந்நூலுக்குள் ஒரு விரிந்த பரப்பு, ஒரு பன்முகப்பண்பு, இந்நூலுக்கு உள்ளாகவே ஒரு விவாதப்பண்பு உருவாகியிருப்பதாகத் தோன்றுகிறது.

மார்க்சின் வாழ்க்கை வரலாறு பல வகைகளில் நமக்கு முக்கியமாக உள்ளது. அது ஒரு மிகப்பெரிய புரட்சிக்காரரின் வாழ்க்கை. அது ஒரு மிகப்பெரிய சிந்தனையாளரின் வாழ்க்கை. மார்க்சியம் என்ற அற்புதமான ஒரு சிந்தனை, அவரது வாழ்க்கை முழுவதிலும் ஒரு தொடர் நிகழ்வாக உருவாகிக்கொண்டிருந்தது. அது எப்போதுமே ஒரு முடிந்த சூத்திரமாக ஆகிவிடவில்லை.







மார்க்ஸ் எங்கெல்ஸ் தேர்வுநூல்களில் இருபதாவது தொகுதியாக இடம்பெற்றுள்ள எங்கெல்ஸ் வாழ்க்கை வரலாற்றில் மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் இடையிலான நட்பும் வேலைப் பிரிவினையும் ஆழ்ந்து உற்றுநோக்கத்தக்கன. சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு மார்க்சுக்கு மிக மிகத் தேவையாக இருந்த, படைப்புத் தன்மை கொண்ட ஒரு விவாதத் தோழமையை எங்கெல்ஸ் வழங்கினார். இதுவே எங்கெல்சின் மிகப்பெரிய சிறப்பு.


**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

☎ 044- 26251968, 26258410, 26241288; Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

**கிளைகள்**

அம்பத்தூர்: 044-26359906; ஸ்பென்சர் பிளாசா: 044-28490027; திருச்சி: 0431-2700885; புதுக்கோட்டை: 04322-227773; தஞ்சாவூர்: 04362-231371; திருநெல்வேலி: 0462-4210990, 2323990; மதுரை: 0452-2344106, 4374106; திண்டுக்கல்: 0451-2432172; கோவை: 0422-2380554; ஈரோடு: 0424-2256667; சேலம்: 0427-2450817; ஓசூர்: 04344-245726; கிருஷ்ணகிரி: 04343-234387; ஊட்டி: 0423-2441743; வேலூர்: 0416-2234495; விழுப்புரம்: 04146-227800; பாண்டிச்சேரி: 0413-2280101; திருவண்ணாமலை: 04175-223449.



# தமிழகத்தில் வரலாற்றுத் தொடக்ககால நெசவுத்தொழில்: ஒரு கூர்நோக்கு ஆய்வு

ந.அதியமான் - த.ஆதித்தன்

வரலாற்றுத் தொடக்ககாலத் தமிழ்ச் சமுதாயம் குறித்து கனகசபைபிள்ளை தொடங்கி கடந்த ஒரு நூற்றாண்டாகப் பல ஆய்வாளர்கள் வெவ்வேறு கோணங்களிலும், வெவ்வேறு ஆய்வுத் தளங்களிலும் தமது கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். அவ்வாய்வுகள் பலவும் வரலாற்றுக் கோட்பாடுகளின் நோக்கில் அல்லாமல் ஆய்வு நோக்கத்திற்கும் அறிவுத் தளத்திற்குமேற்ப அமைந்தன. திணைக் கோட்பாடுகளை உள்ளடக்கி வரலாற்றுத் தொடக்ககாலச் சமுதாயத்தை முதன் முதலில் அணுகியவர் கார்த்திகேசு சிவத்தம்பி ஆவார். அவரைப் பின்பற்றி மார்க்சிய அணுகுமுறையில் தமிழ்ச் சமுதாயத்தை நோக்கிப் பல ஆய்வாளர்கள் தமது ஆய்வுகளை வெளியிட்டுள்ளனர். அக்கட்டுரைகள் பெரும்பாலும் தமிழில் அமைந்தவை. மார்க்சிய - அமைப்பியல்வாத ஆய்வுத் தளத்தை முன்னெடுத்து சங்க இலக்கியங்கள் காட்டும் சான்றுகளுடன், பிற துறைச் சான்றுகளையும் ஒன்றிணைத்து சங்ககாலச் சமுதாயத்தை மானுடவியல் நோக்கில் விளக்க முற்பட்டவர்களுள் ராசன் குருக்களும் அடங்குவார். சங்க இலக்கியங்களை முக்கிய சான்றாகக் கொண்டு பிறதுறைகளான தொல்லியல், நாணயவியல், கல்வெட்டியல், சமூகவியல் கோட்பாடுகளை ஒன்றிணைத்து வரலாற்றுத் தொடக்ககாலத் தமிழ்ச் சமூகம் குறித்த கட்டுரைகளை 1980களில் தொடங்கி 2010 வரை அவர் வெளியிட்டுள்ளார். அக்கட்டுரைகளை ஒன்று சேர்த்து நூலாக 2010 ஆம் ஆண்டு தொடக்ககாலத் தென்னிந்தியாவில் சமூக உருவாக்கம் என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளார்.[1] அந்நூல் இன்னும் தமிழக ஆய்வாளர்களின் பார்வைக்கு வராமல் இருக்கலாம்.

தமது நூலில் உள்ள ஒவ்வொரு கட்டுரையிலும் முடிவாக அவர் தர முற்படுவது சங்ககாலத்தில் அரசுருவாக்கம் ஏற்படவேயில்லை என்பதும் அக் காலத்தில் தமிழர்கள் இனக்குழுச் சமுதாயமாகவே இருந்தனர் என்பதும் அவர்கள் வேட்டையாடிப் பிழைத்தும், கொள்ளையடித்துப் பிரித்துண்டும் வாழ்ந்தனர் என்பதும் வளமையான குறு மருதநிலப் பகுதியில் மட்டும் பல உற்பத்தித் தொழிலை மேற் கொண்டிருந்தனர் என்பதும் ஆகும்.[2] உரோமானியர்கள் வணிகத்திற்காக இங்கு வந்தனர் என்றாலும் இங்கு அதற்கான ஒழுங்கான வணிகக் கட்டமைப்பு இல்லை என்ற வாதத்தையும் முன்வைக்கிறார். இருப்பினும் சங்க இலக்கியங்களில் காணப்பெறும் சான்றுகளை வெளிப் படையாக (நேரடியாக) பயன்படுத்த இயலாது எனினும் நிறுவனம் (Institutional) மற்றும் கருத்தியல் (Ideational) சார் சூழலமைவுகளின் உண்மைத் தன்மையைப் புறந்தள்ள இயலாது எனவும் சுட்டுகிறார்.[3] தொடக்க காலத் தமிழக வரலாறு குறித்து இறுதியாக வெளி வந்துள்ள இவர் நூலில் உள்ள கருத்துகள்தான் தற்போது வட இந்தியாவில் பெரும்பாலான உயர் கல்வி நிறுவனங் களில் கற்பிக்கப்படுகின்றன. சங்க இலக்கியங்கள் காட்டும் இரும்புக்கால இனக்குழு வாழ்க்கைமுறை எச்சச் சான்றுகளை மட்டும் இவர் கையாண்டு நகர மயமாக்க, அரசுருவாக்கக் கூறுகளை இயன்றவரைத் தவிர்த்து தமிழ்ச் சமுதாயத்தை இனக்குழுச் சமுதாயமாகக் காட்டுகிறார். சங்க இலக்கியங்களில் காணப்பெறாத சொற்களைத் தமது ஆய்வில் சுட்டுவதோடு அல்லாமல் இவர் அளித்துள்ள ஆய்வுச் சான்றுக் குறிப்புகள் பல பிழையானவையாகவும் கருத்தாடலுக்குத் தொடர் பில்லாமலும் உள்ளன.[4] இவரின் பல கருத்துகளை மீளாய்விற்கு உட்படுத்தவேண்டும். காட்டாக, தொடக்க காலத் தமிழ்ச் சமுதாயத்தில் உடை குறித்த இவரின் கருத்துகள் கீழ்க்காணுமாறு உள்ளன.[5]

> "தமிழர்களின் ஆடையும், அணிகலன்களும் திணைக்கேற்றவாறு மாறுபட்டன. குறிஞ்சித் திணையில் வாழ்ந்தவர்களின் உடை இலைதழை களாலும் மரப்பட்டைகளாலும் பூக்களாலும் அமைந்தன. இந்நிலத்தின் தலைவர்கள்கூட மரப்பட்டைகளையும் இலைகளையும் உடலிலும் தலையிலும் சூடினர். குறிஞ்சி முல்லைத் திணையில் வாழ்ந்தோர், இறந்தோர் அனைவரும் மயிலிறகு, தளிர் இலைகள் மற்றும் பூக்களாலான மாலைகளை அணிந்தனர். பிற திணையில் வாழ்ந்த வர்கள் பருத்தியிலான உடையை அணிந்தது போலத் தெரிகிறது. இருப்பினும் அது குறைந்த அளவிலேயே இருந்திருக்கக்கூடும்."

மேலும் அவர் பிறிதொரு கட்டுரையில் இவ்வாறு கூறுகிறார்.[6]

> "சில தமிழக வாழ்விடங்களில் கண்டுபிடிக்கப் பட்ட சுடுமண் தக்களிகள், சாயத்தொட்டிகள் தமிழகத்தில் நெசவுத்தொழில் நடந்துள்ளமைக்குச் சான்றுபகர்வதோடு தொழில்நுட்பத்திறனையும் வெளிப்படுத்துகின்றன. அகழாய்வுகளில் கண்டு பிடிக்கப்பட்ட சாயத்தொட்டிகள் மற்றும் கண்ணாடிப் பொருள்கள் தமிழகம் ஒரு தொழில் மையமாகத் திகழ்ந்ததைக் குறிக்கின்றது என்றாலும் இது விவாதத்திற்குரியது."

காரல் மார்க்சு மற்றும் அவரின் தத்துவத்தின் அடிப் படையில் சமூகம் குறித்து விளக்கங்கள் அளித்துள்ள அறிஞர்களின் கோட்பாடுகள் அடிப்படையில் அவர் தந்துள்ள ஆய்வு முடிவுகள் தற்சார்பு வாய்ந்தவை. தொடக்ககாலத் தமிழகத்தில் நெசவுத் தொழில் நடைபெற்ற முறையினை அவர் மேற்கொண்ட ஆய்வு நெறிமுறையின் அடிப்படையிலேயே மீளாய்வு செய்து எவ்வாறு அவர் தவறான புரிதலுக்கு தமிழக வரலாற்று ஆய்வாளர்களைக் கொண்டு சென்றுள்ளார் என்பதைச் சுட்டிக்காட்ட இக்கட்டுரை முற்படுகிறது.

சங்க இலக்கியங்களில் பின்னர் இயற்றப்பட்டவை யாகக் கருதப்படும் பரிபாடல், கலித்தொகை மற்றும் திருமுருகாற்றுப்படை நீங்கலாகப் பிறவற்றில் காணப் படும் நெசவுத் தொழில் குறித்த சொற்களைத் தொகுத்து பிற சான்றுகளான, கல்வெட்டு, அயலவர் குறிப்புகள் மற்றும் தொல்லியல் சான்றுகளோடு பொருத்திப் பார்த்து சங்ககாலத்தில் எவ்வாறு நெசவுத்தொழில் நடைபெற்றது என்பதை இக்கட்டுரை காட்ட விழைகிறது.

சங்ககால நெசவுத்தொழில் குறித்து மயிலை சீனி வேங்கடசாமி முதலாகப் பல ஆய்வாளர்கள் குறித் துள்ளனர்.[7] சங்க இலக்கியங்களில் நெசவுத்தொழில், ஆடைகள் மற்றும் பயன்பாடு குறித்து 38 சொற்கள் காணப்படுகின்றன.[8] இச்சொற்கள் துணியின் மூலப் பொருள் உற்பத்தி முதற்கொண்டு துணியின் பயன்பாடு வரையிலானவை. இக்கட்டுரையில் பருத்தி உற்பத்தி, நெய்தல், துணியின் தரம், உற்பத்தியாளர்கள் குறித்து முதல் பகுதியிலும் இரண்டாம் பகுதியில் துணிகளின் வகைகள் குறித்தும் சங்க இலக்கியங்களில் காணப்பெறும் சான்றுகளோடு பிற துறைச் சான்றுகளையும் ஒருங் கிணைத்து விளக்கப்பெறுகிறது.

### பருத்தி உற்பத்தி

பருத்தி, தமிழகத்தில் புன்புலம் எனப்பட்ட புன்செய் நிலத்தில் பருவமழையின் பயனைக் கொண்டு விளைவிக்கப்படும் ஒரு பயிராகும். சங்க காலத்தில் பருத்தி விளைச்சலே சில ஊர்களின் வாழ்வாதாரமாக இருந்தது என்பதை அறிந்துகொள்வதற்கு சங்க இலக்கியப் பாடல்கள் உள்ளன.[9] பருத்தி விளைந்த புன்செய் நிலம் பருத்தி வேலி என்றும் பன்னல் வேலி என்றும்

குறிப்பிடப்படுகிறது. இங்கு பருத்திச்செடியின் தன்மை வேலியாகப் பயன்பட இயலாது என்பதால் வேலி என்னும் சொல்லை விளைநிலமாகக் கொள்வதில் தவறில்லை. அவ்வூரில் உளுந்தும் பயிரிடப்பட்டது என்பதையும் அறியமுடிகிறது. எவ்வாறு நெல்லும் கரும்பும் விளையும் மருதநில ஊரின் தலைவன் ஊரன் என அழைக்கப்பட்டானோ அதுபோல் பருத்தி விளைந்த ஊர்களின் தலைவன் சீறூர் மன்னன் என அழைக்கப் பெற்றான்.[10] இப்பருத்திச் செடி கோடையில் விளைச்சலைத் தரும். அவ்வாறு சேகரிக்கப்பட்ட பருத்தி வீட்டில் நிறைந்து கிடந்ததைச் சங்கப்பாடல் விளக்கும்.[11] இப்பருத்தியை மண்சாடிகளில் விதைத்து பராமரித்து சிறிய அளவில் விற்றும் பெண்கள் பயன்பெற்றனர்.[12] சங்க காலத்தில் பருத்தி பாரம் எனவும் அழைக்கப்பட்டது.[13] பாரம் (பருத்தி) விளையும் நிலங் களுக்கு அருகில் சிறிய நீர்க்குட்டைகள் இருந்தனவாக சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகிறது.[14] பருத்தி தினைப்புனத்தில் ஊடுபயிராகவும் பயிரிடப்பட்டது என்பதைச் சங்க இலக்கியத்திலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.[15] மேற்காணும் இலக்கியச் சான்றுகளினடிப் படையில் சங்க காலத்தில் பருத்தி உற்பத்திக்கென்றே ஊர்கள் இருந்தமையை அவ்வூர்களின் தலைவர் சீறூர் மன்னன் என்றழைக்கப்பட்டனர் என்பதைக் கொண்டும் அவர்களின் வாழ்வாதாரம் பருத்தி போன்ற புன்செய் பயிர்களாகும் எனவும் அறிந்துகொள்ள முடிகிறது.

### கொட்டை எடுத்து பருத்தியைப் பஞ்சாக்குதல்

விளைந்த பருத்தியைச் சேகரித்து அவற்றை நூலாக்குவதற்கு முதலில் பருத்தியிலுள்ள கொட்டை களை நீக்க வேண்டும். அவ்வாறு கொட்டை நீக்கப் பட்ட பருத்தி பஞ்சி என அழைக்கப்பட்டது. பருத்தியி லிருந்து கொட்டையை நீக்க இரும்பாலான வில்போன்ற கருவி பயன்படுத்தப்பெறும். பருத்தியை இக்கருவி கொண்டு அடிக்கும்போது கொட்டைகள் தனியே பிரித் தெடுக்கப்படும். அவ்வாறு பருத்தியிலிருந்து கொட்டைகள் இரும்புத் தடிகொண்டு எடுக்கப்பட்டதைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன.[16] கொட்டைகள் நீக்கப் பட்ட பருத்தியில் பருத்தியின் இழைகள் சிறுதுரும்பு களாக நூல்நூற்கும் வண்ணம் திரண்டிருக்கும். இதை துய் என்றழைத்தனர். இச்சொல் இறால் மீன்களின் மூக்கு, பெண்குரங்கின் தலைமயிர், ஈங்கை மலரின் காம்பு போன்றவைகளைக் குறிக்கவும் பயன்படுத்தப் பட்டன. எஃகு வில் கொண்டு அடிக்கப்படும் பருத்தியில் கொட்டைகள் நீங்குவதோடு நூல்நூற்கும் வண்ணம் துய் என்னும் துரும்புகள் உருவாகும். இத்துரும்பிழைகளைக் கொண்டு நூல் நூற்கப்படும். கொட்டை நீக்கம்பெற்ற பஞ்சி பெண்ணின் பாதங்களுக்கும், மழைமேகங் களுக்கும் இலக்கியங்களில் ஒப்பிடப்படுகின்றன.[17] பருத்தியினைத் தட்டிப் பஞ்சாக்கும்போது பருத்தியில் ஒட்டியிருக்கும் காய்ந்த பருத்தி இலைப் பிசிறுகள் மற்றும் தூசினைப் பிரித்தெடுக்கும் முறையினையும் சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது.[18]

### நூல் உற்பத்தி செய்தல்

நூல் உற்பத்தி நுட்பம் குறித்த செய்திகள் சங்க இலக்கியங்களில் காணப்பெறவில்லை எனினும் நூல் நூற்கும் தொழிலில் பெண்டிர் ஈடுபட்டனர். குறிப்பாகக் கணவனை இழந்த பெண்கள் ஈடுபட்டனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன.[19] நூலினைப் பனுவல் என்றும் இதை உற்பத்தி செய்யும் தொழிலைப் பெண்கள் மேற்கொண்டதாகவும் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன.[20] இப்பெண்கள் நூலை மிகவும் நுண்ணியதாக நெய்ததாகக் குறிப்பிடப்படுகிறது.[21] தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட பல தொல்லியல் ஆய்வுகளில் நூல் நூற்கும் தக்களிகள் கிடைத்துள்ளதால் தமிழகத்தில் நெசவுத்தொழில் ஒரு இன்றியமையாத தொழிலாகச் சங்ககாலத்தில் விளங்கியுள்ளது எனலாம்.[22]

### தறிகொண்டு துணி நெய்தல்

நூல்கள் எவ்வாறு துணியாக நெய்யப்பட்டன என்பதற்கான சான்றுகளோ அல்லது அதற்கான தறிகள் எவ்வாறு இருந்தன என்பதற்கான சான்றுகளோ இல்லை. எனினும் நெசவுத்தறி குறித்து ஒரு சான்று மட்டுமே சங்க இலக்கியங்களில் காணப்பெறுகிறது. நூலைப் படர்த்த நூற்கும் தறி (பா) விரவுவதைக் கதிரவனின் கதிர்கள் பரவுவதோடு ஒப்பிட்டுக் கூறப்படுவதிலிருந்து தறிகொண்டு நூல் நூற்கப்பட்டது என்பதை அறிய முடிகிறது.[23]

### சாயமேற்றுதல்

துணிகளுக்குச் சாயமேற்றுவது பல முறைகளில் மேற்கொள்ளப்படும். முதலாவது துணிகளை நெய்த பின்னர் அத்துணிகளைத் தேவையான நிறச் சாயத் தொட்டிகளில் ஊறவைத்துச் சாயமேற்றுவது, இரண்டாவது, நூல்கள் உருவாக்கிய பின்னர் நூல்களைச் சாயமேற்றி அதன் பின்னர் நெய்வது. இவ்விரு வழக்கங் களே பொதுவாகப் பின்பற்றப்படும். ஆனால் சங்க இலக்கியங்களில் சாயமேற்றுவது குறித்து வேறு வகையாக ஒரே ஒரு இடத்தில் குறிப்பிடப்படுகிறது. இம்முறையில் நூலாக்கம் பெறுவதற்கு முன்பே பஞ்சு சாயத்தில் நனைக்கப்பட்டு காயவைக்கப்பட்டு இரும்புத் தடியினால் அடிக்கப்பட்டு உருவாகும் துய் எனப்பட்ட துரும்புகளைக் கொண்டு நூலாக்கம் செய்யும் முறையைப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. சிகப்பு சாயம் ஏற்றப்பட்ட பஞ்சினைத் தடிகொண்டு அடித்த போது பறந்துபோன பஞ்சிப் பிசிறுகள் மழைக்காலத்தில் நிலத்தில் ஊர்ந்து செல்லும் தம்பலப்பூச்சிகள் போலக் காட்சியளிப்பதாகச் சங்க இலக்கியம் குறிப்பதால் பஞ்சாக இருக்கும்போதே சாயம் ஏற்றப்பட்ட

நுட்பத்தையும் தமிழர்கள் பயன்படுத்தியதாகத் தெரிகிறது.[24]

சங்க இலக்கியங்களில் துணிகளின் வண்ணங்கள் குறித்தும் சான்றுகள் கிடைக்கின்றன. அவை வெண்ணிற மாகவும், நீல நிறத்திலும், துவர்(சிகப்பு), செந்துவர் (ஆழ்ந்த சிகப்பு நிறத்திலும்), வெளிர் சிகப்பு நிறத்திலும், கருமை நிறத்திலும் இருந்தன என்பதை அறிய முடிகிறது. வெண்ணிறத் துணிகளைக் குறிப்பிடும்போது நேரிடையாகவும் அருவிக்கு ஒப்பாகவும் இலக்கியங்கள் குறிக்கின்றன.[25] சிகப்பு, செஞ்சிகப்பு வண்ண ஆடை களைப் போர்வீரர்கள் அணிந்தமையை அறிய முடிகிறது.[26] சாயமேற்றிய பஞ்சினை இரும்புத் தடியால் அடித்தபோது சிதறிய துளிகள் மழைக்காலங்களில் தரையில் ஊர்ந்து செல்லும் தம்பலப்பூச்சிகளுக்கு உவமையாகச் சுட்டப்பெறுவதால் இளஞ்சிகப்பு நிறத்திலும் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டன என்பதை அறியமுடிகிறது. போர்வீரர் இடுப்பைச் சுற்றிய துணி கச்சு என வழங்கப்பட்டு அது நீலநிறத்திலும், கருமை நிறத்திலும் இருந்தன என்பதையும் அறிய முடிகிறது.[27]

### துணியில் ஓவியம் வரைதல், பூவேலைப்பாடு செய்தல்

துணிகளில் ஓவியம் வரைதல்[28] மற்றும் பூவேலைப் பாடுகளும்[29] செய்யப்பட்டிருந்தன என்பதற்கு இலக்கியத்தில் சான்றுகள் இருந்தாலும் அவற்றின் தொழில்நுட்பம் குறித்த சான்றுகள் இல்லை.

### நெசவுத் தொழிலாளர்கள், வணிகர்கள்

சங்ககாலத்தில் பிற தொழில்கள் போல் நெசவுத் தொழிலையும் ஒரு பிரிவினர் குறிப்பாகப் பெண்கள் மேற்கொண்டனர் என ஏற்கெனவே அறிந்தோம். நூலாக்கத்திற்கு முன்பு பருத்தியில் கலந்து கிடக்கும் காய்ந்த இலைகளைப் பிரித்தெடுப்பது[30], நுண்ணிய நூல்களை உற்பத்தி செய்வது[31] போன்ற பணிகளை மேற்கொண்டமைக்குச் சான்றுகளுள்ளன. நூல் உற்பத்தி செய்தபின்னர் அவற்றைத் தறி கொண்டு நெய்து துணி உற்பத்தி செய்தமைக்கானச் சான்று சங்க இலக்கியத்தில் ஓரிடத்தில் காணப்படுகிறது என்பதை ஏற்கெனவே கண்டோம். இப்பணி செய்தோரைக் கம்மியர் என மதுரைக்காஞ்சி (521) குறிப்பிடுகிறது.[32] சிறிய பெரிய அளவிலான மடி என வழங்கப்பட்ட இத்துணிகளைச் சந்தையில் இளையோரும் பெரியோருமாக விற்றதாகவும் குறிப்பிடப்படுவதால் நெசவுத்தொழிலை ஆண்கள் மேற் கொண்டனர் எனவும் அறியமுடிகிறது. மேலும் பிற பொருள்களை விற்ற வணிகர்களோடு கலிங்க நாட்டி லிருந்து தருவிக்கப்பட்ட துணிகளை விற்றவர்கள் குறித்தும் மதுரைக்காஞ்சி (513) விளக்குகிறது. இந்நெசவுத் தொழிலில் உருவாக்கப்பட்ட துணிகளைப் பெற்று வணிகம் மேற்கொண்டவர்கள் அறுவை வணிகர் என அழைக்கப்பட்டதை அழகர்மலைக் கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது.[33]

அர்த்தசாஸ்திரம் பகுதி 11 இல் துணி வகைகளைக் குறிக்கும் போது துணி நெய்யப்படும் இடங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. பாண்டிய நாட்டில் நெய்யப் படும் 'பாண்டுரகா' என்னும் துணி கருப்பு நிறத்திலும் ரத்தினங்களின் மேல்பகுதி போல் வழுவழுப்பாகவும் இருக்கும் என்றும் குறிப்பிடுகிறது.[34] ஒற்றை, இரட்டை, மூன்று, நான்கு அளவுள்ள துணிகளையும் குறிக்கிறது. இவற்றில் 'க்சோமா' என்னும் வகைத்துணி பாண்டிய நாட்டிலிருந்து (பாண்டுரகா) பெறப்படுவதாகக் குறிக்கிறது. மதுரா, அபராந்தா, மேலைப்பகுதிகள், கலிங்கம், காசி, வங்கம், வத்சா, மஹிசா பகுதியிலிருந்து வரும் பருத்தித் துணிகள் மிகச்சிறந்தவை எனக் குறிப்பிடுகிறது.

தமிழகத்திலிருந்து அர்கெரு என்னும் துறைமுகம் வழியாக உரோமானிய நாட்டிற்கு 'அர்கரிடிடேஸ்' என்னும் துணி ஏற்றுமதி செய்யப்பட்டதாக 'பெரிப்ளூசு' நூலில் குறிப்பிடப்படுகிறது. இத்துறைமுகம் உறையூரென்று ஆய்வாளர்களால் கருதப்பட்டது. ஆனால் அர்கெரு உறையூரல்ல என்றும் அது தமிழக அரசு அகழாய்வு மேற்கொண்ட இராமநாதபுரத்திற்கருகிலுள்ள வைகை முகத்துவாரத்தில் அமைந்த அழகன்குளம் அல்லது அதற்கருகிலிருந்த ஒரு இடம் என நிறுவப்பட்டுள்ளது.[35] எனவே, தமிழகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் வட இந்தியாவிற்கும், உரோமானிய நாட்டிற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன என்பதனை அறிந்துகொள்ள முடிகிறது.

இதற்கான ஒரு கட்டமைப்பு இருந்திருத்தல் வேண்டும். பொருள்களைப் பிற இடங்களுக்கு வணிகர்கள் கழுதைகள் மூலம் பெருவழிகள் வழியாகக் கொண்டு சென்றதையும்,[36] அதற்காக 'உல்கு' எனும் சுங்கவரியைக் காவல்கள் நிறைந்த ஊரில் செலுத்தி யதையும் அவ்வாறு பெறப்பட்ட 'உல்கு' சரியான அளவில் வசூலிக்கப்பட்டதையும் சங்க இலக்கியங்களில் காண முடிகிறது.[37]

மேற்காணும் சங்க இலக்கியச் சான்றுகளைக் காணும்போது பருத்தி விளைவிப்பதற்கென்றே புலங்கள் இருந்தன என்பதையும் விற்பதற்கென்று சேர்த்து வைக்கப் பட்ட வீடு நிறைந்த பருத்தி மூட்டைகளைச் சங்க இலக்கியம் சுட்டுவதிலிருந்து பருத்தி ஒரு வணிகப் பொருளாகத் திகழ்ந்திருக்கலாம் எனவும் அறிய முடிகிறது. பருத்தியிலிருந்து கொட்டைகளைப் பிரித் தெடுத்தல், நூல்நூற்றல், தறிகொண்டு நெசவை மேற் கொள்ளல், சாயமேற்றுதல் முதலிய செய்திகளிலிருந்து தமிழகத்தில் நெசவுத்தொழில் சிறந்திருந்தது என்பதை அறியமுடிகிறது. இதனை மேலும் மெய்ப்பிக்கும்

வகையில் தமிழகத்தின் பல இடங்களில் கிடைத்த நெசவு நெய்யும் தக்களிகளாலும், திருப்பூர் மாவட்டம் கொடுமணல் அகழாய்வில் கிடைத்த துணியின் எச்சமும், மதுரையின் கிழக்குப் பகுதியில் அமைந்திருந்த நெசவுத் தொழில் மையமான கீழடியில் கிடைத்துள்ள தொல்லியல் எச்சங்களும் தமிழகத்தில் நெசவுத்தொழில் சிறந்திருந்தமைக்குச் சான்றாகின்றன.[38]

### துணிகளின் வகைகள், ஆடைகள்

சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியை உலோச்சனார் பாடும் போது மலையில் பிறந்த மணி, காட்டில் கிடைத்த பொன், கடலில் கிடைக்கும் முத்து இவற்றோடு வேறுபட்ட உடைகளையும் மதுக்குடங் களையும் அன்பளிப்பாக வழங்கியதாகக் குறிப்பிடுவதால் சங்க காலத்தில் பல வகையான துணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன என்பதை அறியமுடிகிறது.[39] சங்க காலத்தில் உடைகள் ஆடை, உடை மற்றும் பிற பயன் பாட்டுப் பொருள்கள் குறித்து 19 சொற்கள் காணப்படு கின்றன. அவை அறுவை, ஆடை, மடி, மடிவை, உடுக்கை, உடை, கச்சு, கச்சை, கம்பலம், கலிங்கம், காழகம், துகில், சிதார் (சிதர்வை), பட்டு, படம், படாஅம், மெய்ப்பை, போர்வை ஆகியனவாகும். சங்க இலக்கியத்தில் காணப்படும் சொற்களை அவற்றின் பயன்பாட்டுக் கூறுகளின் அடிப்படையை நோக்கினால் அறுவை, மடி, மடிவை, கலிங்கம், துகில், பட்டு, படாஅம் போன்ற சொற்களைப் பொதுவான துணி களின் வகைகளாகக் கொள்ளலாம். உடைகளாகப் பயன்பட்டவை ஆடை, கச்சு, கச்சை, உடுக்கை, உடை, சிதார், சிதாஅர், சிதர்வை போன்றனவாகும். இனி ஒவ்வொரு துணிவகைகளின் பயன்பாடு குறித்து நோக்கலாம்.

### அறுவை

அறுவை என்ற சொல் பொதுவாகத் துணியைக் குறிப்பதாகச் சங்க இலக்கியத்தில் அமைகிறது. இது உடையாகவும் போர்வையாவும் பயன்படுத்தப்பட்டது. அறுவையை விளக்கும் போது அது மெல்லிய மூங்கில் தோலை ஒத்ததாகவும் மிகவும் நெருக்கமாக நெய்யப் பட்டிருந்ததாகவும், பாம்புத் தோலில் காணப்படுவது போன்று பூவினைப்பாடுகள் நிறைந்ததாகவும் வெண்மை நிறத்திலிருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. தரையில் தேயும் வகையில் இதை அணிந்ததாகவும் சுட்டப் பெறுகிறது.[40] தமிழ்-பிராமி கல்வெட்டொன்றில் அறுவை வணிகன் எனக் குறிப்பிடப்பெறுவதால் இச்சொல்லினைத் துணியைக் குறிக்கும் ஒரு பொதுவான சொல்லாகக் கருதலாம்.

### மடி, மடிவை

இச்சொற்களும் பொதுவாகத் துணி என்ற பொருளைத் தருவதாகக் கருதலாம். இத்துணிகள் குறிப்பிட்ட அளவைக் கொண்டதாக இருக்கலாம். இவற்றைச் சிறிய மற்றும் பெரிய அளவிலான மடி என மதுரைக்காஞ்சி (520) குறிப்பதால் வெவ்வேறு அளவு களைக் கொண்டவையாக இத்துணிகள் இருந்திருக்கலாம்.[41] இன்றும் மடிப் புடவை என்னும் சொல் புழக்கத்தி லுள்ளது கருத்தில் கொள்ளத்தக்கது.

### கலிங்கம்

கலிங்கம் என்னும் துணிவகை கலிங்கநாட்டி லிருந்து தருவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்னும் ஆய்வாளர் கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதே. சங்க இலக்கியங்களில் இச்சொற்கள் பிற சொற்களுடன் ஒப்பிடும்போது மிகுந்த அளவில் பயின்று வருவதால் இத்துணி வகைகள் மிகவும் முக்கியத்துவம் பெற்று விளங்கின என்பதை அறியமுடிகிறது.[42] இதை வணிகர்கள் சந்தையில் விற்றனர் என்பதையும் மதுரைக்காஞ்சி (514) குறிப்பிடுவதால் இது முக்கிய வணிகப்பொருளாக இருந்துள்ளமையையும் அறியமுடிகிறது.

### துகில்

துகில் என்னும் சொல் பெண்கள் அணிந்த உடையாகவே சங்க இலக்கியங்களில் அடையாளம் காணமுடிகிறது.[43] இச்சொல்லும் சங்க இலக்கியங்களில் மிகுந்த அளவில் பயின்று வந்துள்ளது. ஒரு பாடலில் மட்டும் (புறநானூறு 398) தலைவன் தமக்குப் புகையை ஒத்த துகில் அளித்ததாகப் புலவர் குறிப்பிடுகிறார். எனவே, துகில் என்னும் சொல் பெண்கள் அணிந்த உடையைக் குறிப்பதாகக் கொள்வதில் தவறில்லை.

### பட்டு

பட்டு சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. காவிரிப்பூம்பட்டினத்தில் இரவுக்கால நிகழ்வு களுக்காகப் பெண்கள் தாம் உடுத்தியிருந்த பட்டுடை யினைக் களைந்து துகிலை உடுத்திச் சென்றனர் (பட்டினப்பாலை, 107). இக்காலம் போலவே இதனை மிகவும் விலையுயர்ந்த பாதுகாக்கப்பட வேண்டிய துணி வகையாக அக்காலத்திலும் கருதியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது. மேலும், பட்டுடையின் ஓரங்களில் குஞ்சங்கள் அமைக்கப்பட்டிருந்தன என்பதையும் அறியமுடிகிறது.[44]

### ஆடை

ஆடை என்ற சொல் வீரர்கள் அணிவதாக மட்டுமே சங்க இலக்கியங்களில் பயின்று வந்துள்ளது.[45] மேலும் வீரர்கள் தங்களின் அடையாளமாகத் தலையில் மயிலிறகைச் சூட்டி ஆடை அணிந்ததாக வந்துள்ளது. இவ்வாடை செந்நிறத்தில் இருந்ததாகவும் குறிப்பிடப் படுகிறது. சங்க இலக்கியங்களில் ஆடவர் என்னும் சொல் ஆள்பவரைக் குறித்ததாகப் பொருள் கொள்ள வேண்டும் என மாதையன் கருத்துரைக்கிறார்.[46] எனவே,

ஆடவர் அணியும் இவ்வுடை ஆடை என வழங்கப் பட்டிருக்க வேண்டும். படை வீரர்களுக்கென்றே பிரித்தறியும் வகையில் உடை இருந்திருக்கலாம். மேலும் ஆடை என்னும் சொற் பயன்பாட்டில் பெண்களின் உடைக்கு உரியதாகச் சங்க இலக்கியங்களில் வழங்கப் பெறவில்லை. இது மேலாடையாக இருந்திருக்க வேண்டு மென்பதைக் கச்சு, கச்சை என்னும் சொற்களுக்கான பின் வரும் விளக்கத்தின் மூலம் அறியமுடியும்.

### கச்சு, கச்சை

இவை படைவீரர் இடையைச் சுற்றி அணிந்த உடையாகும்.[47] இக்கச்சின் இடையில் வாள்களைச் செருகியிருந்ததாகச் சங்க இலங்கியங்களில் காண முடிகிறது.[48] குதிரைப்படை வீரர்கள் இவ்வுடையை அணிந்ததாகவும் சுட்டப்பெறுகிறது.[49] இச்சொற்கள் பிறர் அணிந்ததாகச் சங்க இலக்கியங்களில் சுட்டப் பெறவில்லை என்பதாலும் இக்கச்சு வீரர்கள் அணிந்த தாகக் குறிப்பிடப்படுவதாலும் இது படைவீரர் களுடைய இடையாடை என்பதை அறியமுடிகிறது.

### உடுக்கை, உடை

இச்சொற்கள் துணியின் பயன்பாட்டிற்கேற்றவாறு ஆடைகளாக உருவாக்கப்பட்டிருக்கலாம் எனச் சங்க இலக்கியங்களின் வாயிலாக அறியமுடிகிறது.[50] ஆனால் அவற்றின் அமைப்பு குறித்த எவ்வித செய்தியும் அறியமுடியவில்லை.

### சிதார், சிதாஅர், சிதர்வை

இம்மூன்று சொற்களும் ஒரே பொருளைத் தரலாம். ஏனெனில் இச்சொற்கள் பாணர் பாட்டுடைத் தலைவனைப் பாடும்போது தமது பழைய சிதாஅர் என வழங்கப்பட்ட உடையைக் களைந்து பட்டு, துகில், அறுவை, கலிங்கம் ஆகியன அளித்ததாக இலக்கியங் களில் குறிப்பிடப்படுகிறது.[51] மேலும் பாணரைப் பற்றிப் பிற இடங்களில் குறிப்பிடும்போதும் அவர்களின் உடைகள் சிதார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.[52] ஆனால் அழுக்கடைந்த துணிகளை அணிந்த பிறரைக் குறிப்பிடும்போது இச்சொல் பயன்படுத்தப்படவில்லை. பாணர்கள் அணிந்திருந்த பழைய துணிகளில் பாசி படர்ந்திருந்ததாகவும். கிழிந்த பகுதி வேறு ஒரு நூலால் தைக்கப்பட்டிருந்ததாகவும் அது கூதிர்ப் பருந்தின் நிறத்தையொத்ததாகவும் முட்டையீனும் பாம்பின் வாய் போன்ற துளைகளை உடையதாகவும் குறிப்பிடப்படுகிறது.

### துணி குறித்த பிற சொற்கள்

துணிகள் காழகம்[53] என்றும் படம்[54] என்றும் மெய்ப்பை[55] என்றும் தூசு[56] என்றும் இழை[57] என்றும் சங்க இலக்கியங்களில் வழங்கப்பெற்றுள்ளன. காழகம் என்பதைப் புடவை எனவும் உடை எனவும் அறிஞர்கள் பொருள் கொள்கின்றனர். மெய்ப்பை என்பது சட்டை எனவும் இதனை யவனர்கள் அணிந்திருந்தனர் எனவும் அறியமுடிகிறது. இழை என்பது பொதுவாக நூல் என்னும் பொருளில் சங்க இலக்கியங்களில் காணப் பட்டாலும் பதிற்றுப்பத்தில் வரும் சொல் ஆடை என்னும் பொருளைத் தருகிறது.

### துணிகளின் பிற பயன்பாடுகள்

துணிகள் உடையன்றி பிற தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டன. துணிகளில் கணைப்புட்டில்கள் (அம்பராத்துணி) செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டன. இவை ஆவம் என வழங்கப்பட்டன.[58] மூத்தோர் வழிபாடான நடுகல் வழிபாட்டின் போது நடுகல்லில் துணியைச் சுற்றி வழிபடும் வழக்கமுமிருந்தது.[59] இதன் வழி துணி தமிழர் வாழ்வியலில் ஓர் அங்கமாகத் திகழ்ந்ததை அறியமுடிகிறது.

### கம்பலம், போர்வை

துணிகள் கம்பலமாகவும்,[60] போர்வையாகவும்,[61] படுக்கை விரிப்பாகவும்[62] பயன்படுத்தப்பட்டன. போர்வையாகப் பயன்படுத்திய உரோமத்திலான பத்து துணி வகைகளைக் குறிக்கும் போது கம்பலம் என்னும் சொல்லையும் அர்த்தசாத்திரத்தில் காணமுடிகிறது.[63]

### சன்னல் திரையாக

மேலும் சன்னல் திரையாகத் துணி பயன்படுத்தப் பட்டதை எழினி எனச் சங்க இலக்கியம் குறிக்கிறது.[64] மேலாடை படம் என்றும் வழங்கப்பட்டது.[65]

மேற்காணும் சான்றுகளை நோக்கினால் தமிழகத்தில் சங்க காலத்தில் பலவகைப்பட்ட துணிகள் உற்பத்தி செய்யப்பட்டும், பிற இடங்களிலிருந்து தருவிக்கப்பட்டும் புழக்கத்திலிருந்தன என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது. இத்துணிகள் எவ்வகைத் தரத்திலிருந்தன என்பதையும் சங்க இலக்கியங்களிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

### துணிகளின் தரம்

துணிகளின் தரம் குறித்த சான்றுகளை நோக்கினால் துணிகள் மூங்கில் உட்புறத்தோல் போலவும்,[66] பாம்புரித்த சட்டை போலவும் இருந்ததாகவும்,[67] ஆவி[68] போன்றும் புகை[69] போன்றும் இருந்ததாகவும் நூலிழை களை அறிய இயலாதவாறு நுண்மையாக இருந்த தாகவும்[70] மலர் போன்று மென்மையாக இருந்ததாகவும்[71] சுருக்கமற்று[72] இருந்ததாகவும், ஒளி[73] பொருந்திய தாகவும் இருந்தன என்றும் அறியமுடிகிறது.

### கிழிந்த துணிகளின் நிலை

கிழிந்த துணிகளைக் குறிக்கும்போது கிழிந்த நிலையைப் பிற பொருள்களுக்கு உவமையாக இலக்கி யத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.[74] கிழிந்த துணிகள் நூல் கொண்டு தைக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன.

தையலைத் துன்னம் எனச் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது.[75] அவ்வாறு தைக்கப்பட்ட உடையில் பயன்படுத்தப் பட்ட நூல் பருமனாக இருந்ததாகவும் இலக்கியம் சுட்டுகிறது.

### அழுக்கேறிய துணிகள்

சங்க இலக்கியங்களில் துணிகள் உடையாகப் பயன்படுத்தப்பட்டு அழுக்கேறிய நிலையைப் பல இடங்களில் காணமுடிகிறது. பாணர்கள் பயன்படுத்திய அழுக்கேறிய உடையை சிதார், சிதாஅர், சிதர்வை என்று அழைத்ததைப் போலப் பிறர் பயன்படுத்திய அழுக் கேறிய உடைகள் குறித்தும் சான்றுகள் உள்ளன.[76]

### துணியை துவைத்தல்

துணிகள் உவர்மண் கொண்டு துவைக்கப்பட்டன. இத்துணிகளை வெளுக்கும் பணியினை மேற்கொண்ட பெண்களைப் புலைத்தி எனச் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது.[77] துவைக்கும் பணியை மேற்கொண்ட ஆண்களைக் 'காழியர்' எனச் சங்க இலக்கியம் ஓரிடத்தில்[78] குறிப்பதால் சில வேளைகளில் ஆண்களும் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடும். இத்துணியினை வெளுக்கும் பணிக்கு உவர் மண்ணைப் புலத்தியரும் காழியரும் பயன்படுத்தினர்.[79] மேலும் துவைக்கப்பட்ட துணிகளுக்குக் கஞ்சியிட்டதையும் இலக்கியங்களில் அறியமுடிகிறது.[80]

### மருத்துவப் பயன்பாட்டிற்குப் பஞ்சி

பஞ்சி போரில் ஏற்பட்ட காயங்களை மூடப் பயன்படுத்தப்பட்டது என்பதைச் சங்க இலக்கியத்தில் காண முடிகிறது.[81] எனவே, தமிழர் புண்ணுக்குப் பஞ்சியைப் பயன்படுத்திய முறை சங்ககாலத்திலேயே இருந்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

### தழையுடை?

இனி, ராசன் குருக்களின் கருத்தைக் கூர்ந்து நோக்கலாம். குறிஞ்சி நிலப்பெண்கள் இலை, தழை களையும், பூக்களையும், மரப்பட்டைகளையும் சேர்த்து அணிந்திருந்தனர் என அவர் குறிப்பிடுவது முற்றிலும் தவறானது. தழை அணிந்த பெண்கள் பற்றிச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடும்போது அதைத் தழையுடை எனப் பல பதிப்பாசிரியர்களும், உரையாசிரியர்களும் குறிப்பிடுகின்றனர். சங்க இலக்கியங்களில் தழையுடை என்ற சொல் எவ்விடத்திலும் காணப்பெறவில்லை. மகளிரின் இடையில் தழையை அணிந்ததாகவே பெரும்பாலான இடங்களில் குறிப்பிடப்படுகிறது. தழைகளின் ஊடே ஆம்பல் மலர்கள் கட்டப்பட்டு பெண்களின் இடை அழகுறுத்தப்பட்டது. இதை பெண்கள் இடையாடைக்கு மேலே அணிந்திருந்தனர் என்பதாகக் கொள்ளவேண்டும். இதற்கு முன் இவர்கள் வாழ்ந்த இனக்குழு வாழ்க்கையின் தொடர்ச்சியாக இது இருந்திருக்கக்கூடும். இதன் தொடர்ச்சியே பல்லவர் காலத்திலும் அதன் பின்னர் செதுக்கப்பட்ட சிற்பங் களிலும் காணப்பெறும் இடையணிகளாகும் என்று கருதலாம். இப்பொருள் குறித்து விரிவாக வேறு கட்டுரையில் விளக்கப் பெறுகிறது.

சங்க இலக்கியங்களை நோக்கும்போது இடையில் அணிந்த தழையணி குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை நிலப் பெண்கள் அணிந்ததாகக் குறிப்பிடப்பெறுகிறது.[82] முல்லை நிலப் பெண்களும், ஆண்களும் அணிந்ததாகக் குறிப்பிடப்பெறாதது ஆய்வுக்குரியது. எனவே, ராசன் குருக்கள் குறிஞ்சி நிலப்பெண்கள் மட்டும் தழையுடை அணிந்ததாகக் குறிப்பிடுவது முற்றிலும் தவறான கருத்தாகும். மேலும் குறிஞ்சி நிலத்தலைவர்களும் பூ, தழை, மரப்பட்டைகள் கொண்ட தழையுடையை அணிந்ததாகக் குறிப்பிடுவதும் மிகத்தவறானதாகும். இருப்பினும் குறிஞ்சி நிலத்தில் வசித்த குறவர் தாவர நாரினால் செய்யப்பட்ட உடையை அணிந்ததற்கான குறிப்பு ஓரிடத்தில் இடம்பெற்றுள்ளது.[83] இதை ராசன் குருக்கள் தவறாகப் புரிந்து மேற்காணும் கருத்தை அளித்திருக்கலாம். மேலும் குறவர் என்ற சொல் குறிஞ்சி நிலத்தில் வசித்த ஆண்களைக் குறிக்கப் பொதுவாக வழங்கப்படும் சொல்லாகும். இது குறிஞ்சி நிலத் தலைவனைக் குறிப்பதாகாது. இவர் கூற்று தவறென்பதற்கு முத்தாய்ப்பாகத் தொல்காப்பியர் பொருளதிகாரத்தில்[84]

> கூழை விரித்தல் காதொன்று களைதல்
> ஊழணி தைவரல் உடைபெயர்த்து உடுத்தலொடு
> கெழீஇய நான்கே இரண்டென மொழிப
>
> (மெய்ப்பாட்டியல் 248)

என்று கூறும்போது தழை என்னும் சொல்லைப் பயன் படுத்தாமல் உடை என்ற சொல்லைப் பயன்படுத்தி யுள்ளமை இங்குக் கருதத்தக்கது.

### கருத்துரை

முடிவாக, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்ககாலத் தமிழகத்தில் நெசவுத்தொழில் மிகச்சிறந்த நிலையில் இருந்திருந்தது என்பதையும் இத்தொழிலில் பருத்தி விளைவித்தல் தொடங்கி துணிகள் விற்பனை வரையிலான ஒரு கட்டமைப்பு இருந்திருக்க வேண்டும் என்பதையும் அறியமுடிகிறது. இதில் பருத்தி உற்பத்திக்கென்றே தனி ஊர்கள் இருந்ததையும் அவை ஊடுபயிராக விளைவிக்கப் பெற்றமையையும் அறியமுடிகிறது. நூல் நூற்கும் பணியினைப் பொதுவாகப் பெண்கள் மேற்கொண்டனர். நெசவுத்தொழிலைத் தனி ஒரு சமூகம் மேற்கொண்டு அவற்றைச் சந்தையில் கொண்டு சென்று விற்றது. அவற்றைப் பெற்று வணிகர்கள் பிற இடங்களுக்குக் கொண்டு சென்று விற்றனர் என்பதை அறியமுடிகிறது. இச்செயலை ஒரு இனக்குழு மட்டும் மேற்கொண்டிருக்க இயலாது என்பதையும் அறியமுடிகிறது.

ஆடைகள் எவ்வாறு செய்யப்பட்டிருந்தன என்பதற்குச் சான்றுகள் இல்லையெனினும் ஆடை, கச்சு, கச்சை என்பனவற்றை வீரர்கள் மட்டும் பயன் படுத்தியுள்ளனர் என்பதையும் துகில் பெண்களால் அணியப்பட்டது என்பதையும் அறியமுடிகிறது. பாணருக்கு வழங்கப்பட்ட உடைகள் மடி, கலிங்கம், துகில், பட்டு என்னும் பொருளில் வந்துள்ளன. எனவே, இவை துணிகள் என்ற பொருளன்றி உடலைச் சுற்றிக் கொள்ளப் பயன்படுத்தப்படும் ஆடையாகவும் பயன் படுத்தப்பட்டிருக்கலாம். இவற்றில் சிதாஅர், சிதர்வை, சிதார் போன்ற சொற்கள் மிகவும் பயன்பாட்டிலிருந்த உடைகளைக் குறிக்கும். இவற்றைப் பாணர் அணிந் திருந்ததாகவும் அவற்றை நீக்கி புதிய உடையைத் தலைவன் வழங்கியதாகவும் மட்டுமே வருகிறது.

இச்சொற்களில் கலிங்கம், பட்டு ஆகிய சொற்கள் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. கலிங்கம் என்பது கலிங்கநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட துணியாக இருக்கலாம். பட்டு சீனாவிலிருந்து கொண்டுவரப் பட்டிருக்கலாம். கலிங்கநாட்டில் உற்பத்தி செய்யப் பட்ட துணிகள் வட இந்தியாவிற்கும், தென்னிந்தியா விற்கும் கொண்டு வரப்பட்டிருக்கவேண்டும். குறிப்பாகத் தமிழகம் வந்த துணிகள் கடல் வழியில் வந்திருக்க வேண்டும். அவ்வாறு வட இந்தியாவிலிருந்து இங்கு பல பொருள்கள் வந்தமைக்கான சான்றுகள் உள்ளன.[85] சீனத்துணிகள் நேரிடையாக இங்கு வந்ததற்கான சான்றுகள் இல்லை. எனவே, இவையும் வட இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டிருக்கலாம். இவற்றின் மூலம், சங்க காலத்தில் நெசவுத்தொழில் தொடக்க நிலையிலேயே இருந்திருக்கலாம் என ராசன் குருக்கள் குறிப்பிடுவது தவறானது என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ளமுடிகிறது.

### சான்றெண் விளக்கம்

1. Rajan Gurukkal, 2010. Social Formations of Early South India. Oxford University Press, New Delhi.
2. *மேலது. பக்.29*
3. *மேலது பக்.139*
4. *சான்றாக, 'தழையுடை' என்ற சொல் சங்க இலக்கியங்களில் ஓரிடத்திலும் காணப்படவில்லை. ஆனால் தமது ஆய்வில் அச்சொல்லைத் தாமாகவே உருவாக்கி தமது கருத்தாடலுக்குப் பயன்படுத்தித் தவறாக செய்தியை அளித்துள்ளார்.(மேலது. பக்.89) மேலும் தமது சான்றெண் குறிப்பில் 1955-57 ஆம் ஆண்டுகளில் உ.வே.சாமிநாதையர் குறுந்தொகை, குறிஞ்சிப் பாட்டு, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம், முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பரிபாடல், பட்டினப்பாலை, பெரும் பாணாற்றுப் படை, பொருநராற்றுப்படை, புறநானூறு, சிறுபாணாற்றுப்படை, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு ஆகிய நூல்களைப் பதிப்பித்ததாகவும் அவற்றைச் சைவசித்தாந்த நூல்பதிப்புக் கழகத்தினர் வெளியிட்டதாகவும் குறிக்கிறார் (மேலது பக்.90). மேலும் சங்க இலக்கியத்தில் குடி என்ற சொல்தான் வழக்கத்திலிருந்தது. ஆனால் தமது கருத்தில் குடிமக்கள் என்ற புதிய சொல்லைப் பயன்படுத்துகிறார் (மேலது பக். 128). மேலும், கிழான் என்ற சொல் சங்க இலக்கியத்தில் இல்லை. சங்க இலக்கியங்களில் காணப்பெறும் கிழவன் என்ற சொல் இடைக்காலத்தில் கிழான் என்றானது. இவர் அரசு உருவாக்கம் குறித்த தமது கருத்தாடலில் கிழான் என்ற இடைக்காலச் சொல்லை ஊரின் தலைவன் எனப் பயன்படுத்துகிறார். ஆனால் சங்க இலக்கியங்களில் நாட்டிற்கு உரிமையாளனும் கிழவன் என அழைக்கப்பெற்றான். மேலும் மீனவர் என்ற சொல் சங்க இலக்கியத்தில் இல்லை. ஆனால் அவர் தமது விளக்கத்திற்குப் பயன்படுத்துகிறார் (மேலது பக். 139). இது போன்று சங்க இலக்கியச் சான்றுகளை அவர் தமது கருத்தாக்கத்தில் அளித்திருப்பதில் பல பிழையானவை.*
5. *மேலது. பக். 89*
6. *மேலது. பக்.25*
7. *மயிலைசீனி. வேங்கடசாமி, 1974, பழங்காலத் தமிழர் வணிகம் (சங்க காலம்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.(நான்காம் அச்சு, 1991); சுப்பராயலு, எ. 1983, 'பொருளியலும் வணிகமும்', தமிழ்நாட்டு வரலாறு: சங்ககாலம் - வாழ்வியல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை. ப. 167; வி.சி. சசிவல்லி, 1989, பண்டைத் தமிழர் தொழில்கள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை;* Champakalakshmi, R., 1996. Trade, Ideology and Urbanisation: South India 300 BC to 1300 AD. Oxford University Press, Delhi.
8. *சங்க இலக்கியங்களில் காணப்பெறும் நெசவு, நெசவாளர், ஆடைகள், துணி குறித்து காணப்பெறும் சொற்கள். பிறைக்குறியீட்டில் இருப்பது இலக்கியங்களில் வரும் எண்ணிக்கை 1. பரீஇ (1), 2. பருத்தி (6), 3. பருத்திப் பெண்டிர் (3), 4. பன்னல் (1), 5. பஞ்சி (8), 6. பாரம் (1), 7. துய் (14), 8. அறல் (1), 8. அறுவை (9), 9. ஆடை(4), 10. மடி (7), 11. மடிவை (2), 12. ஆவம் (1), 13. இழை (7), 14. உடுக்கை (6), 15. உடை (11), 16. கச்சு (3), 17. கச்சை (6), 18. கம்மியர் (1), 19. கம்பலம் (1), 20. கலிங்கம் (23), 21. கிழி (1), 22. துகில் (19), 23. சிதர்வை, சிதாஅர், சிதார் (13), 24. பா (1), 25. நூல் (4), 26. தூசு (1), 27. காழகம் (2), 28. காழியர், 29. புலைத்தி (6), 30. பிணையல் (2) 31. பனுவல் (3), 32. பட்டு (3), 33. படம் (4), 34. படாம் (1), 35. துன்னம் (3), 36. மெய்ப்பை (1), 37. போர்வை (1), 38. எழினி (1)*
9. *புறநானூறு 299:1, 324:7-8*
10. *சீறூர் மன்னர் முல்லை, குறிஞ்சி நிலப்பகுதியில் மழையின் பயனாக வேளாண்மை செய்த புன்செய் நிலம் சார்ந்த ஊரின் தலைவனாகச் சுட்டப்பெறுகின்றனர் (புறநானூறு 197, 299, 308, 319, 328). இவர்களில் சிலர் வேந்தருக்குத் துணையாகப் போருக்குச் சென்றனர் (புறநானூறு 319). மேலும் பார்க்க, மாதையன், பெ., 2004, சங்ககால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, பக். 38-59.*
11. *கோடைப் பருத்தி வீடுநிறை பெய்த*
 *மூடைப்பண்டம் இடைநிறைத்தன்ன*
 *வெண்நிண மூரிஞ் (புறநானூறு 393:12-14)*
12. *தாழிமுதல் கலித்த கோழ்இழைப் பருத்திப்*
 *பொதிவயிற்று இளங்காய் பேடை ஊட்டி*
 *போகில் பிளந் திட்ட பொங்கல் வெண்காழ்*
 *நால்கூர் பெண்டிர் அல்கல் கூட்டும் (அகநானூறு 129:7-10)*
13. *குறிஞ்சிப்பாட்டு 92, புறநானூறு 345:20*
14. *சுரன்முதல் வருந்திய வருத்தம் பைபயப்*
 *பாரம் மலிசிறு கூவலின் தணியும் (நற்றிணை 41:3-4)*
15. *......... மாமலைப்*
 *பரீஇ வித்திய ஏனல் (குறுந்தொகை 72:3-4)*
16. *வில்எறி பஞ்சி போல மல்குதிரை*
 *வளிபொரு வயங்குபிசிர் பொங்கும் (நற்றிணை 299:7-8)*

 *வில்எறி பஞ்சியின் வெண்மழை தவழும்*
 *கொல்லை இதைய குறும்பொறை மருங்கில் (அகநானூறு 133:6-7)*

 *பெய்துபுலம் திறந்த பொங்கல் வெண்மழை*
 *எஃகுஉறு பஞ்சித் துய்ப் பட்டன்ன (அகநானூறு 217:1-2)*

17. அம்சில் ஓதி இவள்உறும்
பஞ்சி மெல்அடி நடைபயிற்றும்மே (நற்றிணை 324:8-9)
பெய்துபுலம் திறந்த பொங்கல் வெண்மழை
எஃகுஉறு பஞ்சித் துய்ப் பட்டன்ன (அகநானூறு 217:1-2)

18. சிறையும் செற்றையும் புடையுநள் எழுந்த
பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்து (புறநானூறு 326:4-6)

19. பருத்திப் பெண்டின் பனுவல் அன்ன
நெருப்புச்சினம் தணிந்த நிசந்தயங்கு கொழுங்குற் (புற.125:1-2)
பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்துக்
கவிர்ப்பூ நெற்றிச் சேவலில் தணியும் (புறநானூறு 326:7-8)
ஆளில் பெண்டிர் தாளின் செய்த
நுணங்குநுண் பனுவல் போல கணம் கொள (நற். 353:1-2)

20. பருத்திப் பெண்டின் பனுவல் அன்ன
நெருப்புச்சினம் தணிந்த நிசந்தயங்கு கொழுங்குற்
(புறநானூறு 125:1-2)
கைதொழூஉப் பரவிப் பழிச்சினிர் கழிமின்
மைபடு மாமலைப் பனுவலிற் பொங்கிக்
கைதோய் வன்ன கார்மழைத் தொழுதி (மலைபடு. 360-362)
ஆளில் பெண்டிர் தாளின் செய்த
நுணங்குநுண் பனுவல் போல கணம் கொள (நற்றிணை 353:1-2)
பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்துக்
கவிர்ப்பூ நெற்றிச் சேவலில் தணியும் (புறநானூறு 326:7-8)

21. ஆளில் பெண்டிர் தாளின் செய்த
நுணங்குநுண் பனுவல் போல கணம் கொள (நற்றிணை 353:1-2)

22. காட்டாக, கொடுமணல் மற்றும் கீழடியைக் குறிப்பிடலாம்.

23. துகில்ஆய் செய்கைப் பாவிரிந் தன்ன
வெயில் அவிர்பு நுடக்கும் வெவ்வெங்களரி (அகம். 293:4-5)

24. ஊட்டுறு பஞ்சிப் பிசிர்பரந் தன்ன
வண்ண மூதாய் தண்நிலம் வரிப்ப (அகநானூறு 283:14-15)

25. மலைபடுகடாம் 561; நற்றிணை 70:2, 328:8; புறநானூறு 154:10-11, 286:3-5, 291:1-3

26. நற்றிணை (33:6); ஐங்குறுநூறு 363(1-2)

27. புறநானூறு (274:1);சிறுபாணாற்றுப்படை 96,97; மதுரைக் காஞ்சி 639; மதுரைக்காஞ்சி 636; அகநானூறு 376:7-8

28. தூவினை நுண்நூல் ஆகம் பொருந்தினள் (அகநானூறு 198: 5-6)
புதுவதியன்ற மெழுகுசெய் படமிசைத்
திண்ணிலை மருப்பின் (நெடுநல்வாடை 159-160)

29. நீலக்கச்சைப் பூவார் ஆடைப்
பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன் (புறநானூறு 274:1-2)
துன்னற் சிதாஅர் துவர நீக்கி
நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்
தரவுரியன்ன அறுவை நல்கி (பொருநராற்றுப்படை 81-84)

30. ஆளில் பெண்டிர் தாளின் செய்த
நுணங்குநுண் பனுவல் போல கணம் கொள (நற்றிணை 353:1-2)

31. சிறையும் செற்றையும் புடையுநள் எழுந்த
பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்து (புறநானூறு 326:4-6)

32. கம்மியர் என்னும் சொல் சங்க இலக்கியங்களில் பொற் கொல்லரைக் குறிப்பதாகும். உ.வே.சாமிநாதயைர் 'கம்மியர்' என்பதைக் 'கர்மியர்' என்பதன் சிதைவென்பர் எனவும் தொழில் செய்வோரென்பது அதன் பொருள் எனவும் குறிக்கிறார். உ.வே.சாமிநாதையர், 1986, பத்துப்பாட்டு மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்கினியருரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். (1931இல் வெளியிடப்பட்ட மூன்றாம் பதிப்பின் மறுதோன்றிப் பதிப்பு), பக். 397.

33. சு.இராசகோபால், பொ.இராசேந்திரன், வெ.வேதாசலம், சொ.சாந்தலிங்கம். (உ.ப.ஆ) 2006, தமிழ்-பிராமி கல்வெட்டுகள், (ப.ஆ) தி.ரீ. ரீதர், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை. பக்.52

34. Shamasastry, R. (Tr.), 1915, Kautilya's Arthasastra, Goverment Press, Bangalore, Digital PDF Copy, pp. 109-110.

35. அதியமான், ந. 2017, 'அயலவர் குறிப்பிடும் அர்செரு உறையூறா?', புதிய ஆராய்ச்சி, இதழ் 7, பக்.134-140.

36. அணர்ச்செவிக் கழுதை சாத்தொடு, வழங்கும்
உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்
வில்லுடை வைப்பின் வியன்காட்டு இயவின்
(பெரும்பாணாற்றுப்படை 80-83)

37. வைகல்தொறும் அசைவின்றி
உல்கு செயக் குறைபடாது (பட்டினப்பாலை 124-125)

38. கீழடி அகழாய்வு அறிக்கை இன்னும் வெளியிடப் பெற வில்லை. Rajan, K. 2015, Early Writing System: A Journey from Graffiti to Brahmi, Pandya Nadu Centre for Historical Research, Madurai. Pl.1.20 p. 47.

39. மலைபயந்த மணியும் கடறுபயந்த பொன்னும்
கடல்பயந்த கதிர்முத்தமும்
வேறுபட்ட உடையும் சேறுபட்ட தசும்பும்
கனவின் கண்டாங்கு வருந்தாது நிற்ப (புறநானூறு 377:16-19)

40. புறநானூறு 154:10-11, 286:3-5, புறநானூறு 291:1-3; அகநானூறு 195:12-13; பொருநராற்றுப்படை 80-84; சிறுபாணாற்றுப்படை 235-236; நெடுநல்வாடை 34-35; நற்றிணை 70:1-2; பதிற்றுப்பத்து 34:3-4

41. புறநானூறு 390:13-15,393:15-18;அகநானூறு 13:15-16, 54:9-10, 226:3; நற்றிணை 70:1-2; பதிற்றுப்பத்து 27:3; மதுரைக்காஞ்சி 519-522; நெடுநல்வாடை 132-135.

42. புறநானூறு 383:11-12, 392:14-15, புறநானூறு 393:16-19, 397:15, 400:10-13;பதிற்றுப் பத்து 12:20-21, பதிற்றுப் பத்து 76:13;அகநானூறு 86:20-22, 136:19-20;குறுந்தொகை 167:1-2; நற்றிணை 20:4, 90:2-4, 380:1-2; சிறுபாணாற்றுப்படை 85,86, 96,97;பெரும்பாணாற்றுப்படை 468-470; மதுரைக் காஞ்சி 431-433, 513-514,553-554, 720-722;நெடுநல்வாடை 132-135, 45-147; மலைபடுகடாம் 561.

43. புறநானூறு 337:8-10, 398:8-20; அகநானூறு 293:4-5, 387:5-7; நற்றிணை 15:1-2, 43:1, 99:2, 120:7-8, 366:2; பதிற்றுப்பத்து 54:5; சிறுபாணாற்றுப்படை 262:2; பெரும்பாணாற்றுப்படை 235, 327-329; நெடுநல்வாடை 145-147,181; குறிஞ்சிப்பாட்டு 54-55; பட்டினப்பாலை 107, 145.

44. அகநானூறு 236:11; பட்டினப்பாலை 107; பொருநராற்றுப் படை 154, 155

45. நீலக்கச்சைப் பூவார் ஆடைப்
பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன் (புறநானூறு 274:1-2)
கோட்டம் கண்ணியும் கொடுந்திரை ஆடையும்
வேட்டது சொல்லி வேந்தனைத் தொடுத்தலும் (புறம். 275:1-2)
துவர் செய் ஆடைச் செந்தொடை மறவர் (நற்றிணை 33:6)
சிலையில் பகழிச் செந்துவர் ஆடைக்
கொலைவில் எயினர் (ஐங்குறுநூறு 363:1-2)

46. மாதையன், பெ. 1987-88, 'எவ்வழி நல்லவர் ஆடவர்', தமிழ்ப் பொழில் 61(8-9), பக். 367,379,399,412

47. ஒண்பெரி புனைகழல் சேவடிப்புரள
கருங்கசுச்சு யாத்த காண்பன் அவ்வயிற்று (அகம். 376:7-8)
பாசி சூழ்ந்த பெருங்கழல்
தண்பனி வைகிய வரிக்கச்சினே (ஐங்குறுநூறு 206: 4-5)
நீலக் கச்சை பூவார் ஆடை
பீலிக் கண்ணி பெருந்தகை மறவன் (புறநானூறு 274:1-2)
... ... .... இளையர்
அரைச்செறி கச்சை யாப்பு அழித்து அசைஇ (நற்றிணை 21:1-2)
காளரி ஊட்டிய கவர்கணைத் தூணிப்
பூவிரி கச்சைப் புகழோன் தன்முன் (சிறுபாண். 238-239)
நுண்வினைக் கச்சைத் தயக்குஅறக் கட்டி
இயல் அணிப் பொலிந்த ஈகை... (குறிஞ்சிப்பாட்டு 125-126)

48. பொருகணை தொலைச்சிய புண்டீர் மார்பின்
விரவுவரிக் கச்சின் வெண்கை யொள்வாள் (பெரும்பாண். 70-71)
குறங்கிடைப் பதித்த கூர்நுனைக் குறும்பிடி
நிறங்கவர்பு புனைந்த நீலக்கச்சினர்

மென்னேலேணிப் பன்மாண் சுற்றினர் (மதுரைக்காஞ்சி 639-640)

49. ..................... பொற்கோட்டியானையர்
கவர் பரிக்கச்சை நன்மாவினர் (புறநானூறு 377:23-24)

50. அகநானூறு 7:18-19, 54:9-10, 285:8-9, 136:14-15; புறநானூறு 54:10-11, 138:4-5, 159:13-14, 376:10-11, 377:16-19, 390:13-15; நற்றிணை 64:4-5, 90:1-4; பொருநராற்றுப்படை 153-155; பெரும்பாணாற்றுப்படை 175; முல்லைப்பாட்டு 59-61; மதுரைக்காஞ்சி 720-722; பட்டினப்பாலை 146-150.

51. புறநானூறு 385:5-7, 392:14-15, 393:15-18, 398:8-20, 400:10-13; பதிற்றுப் பத்து 12:20-21; அகநானூறு 337:11-13; பொருநராற்றுப்படை 80-84, பொருநராற்றுப்படை 153-155; பெரும்பாணாற்றுப்படை 468-470.

52. புறநானூறு 69:2-3, 138:4-5, 150:1-2

53. புறநானூறு 41:9; மதுரைக்காஞ்சி 597-98

54. புறநானூறு 260:28-29; பெரும்பாணாற்றுப் படை 68-69; முல்லைப்பாட்டு 66; நெடுநல்வாடை 159-160)

55. முல்லைப்பாட்டு 59-60

56. பட்டினப்பாலை 146-147

57. புறநானூறு 69:2-3, 136:1-3, 376:9-10, 383:10-12; பதிற்றுப் பத்து 62:1; பொருநராற்றுப்படை 80-84; மலைபடுகடாம் 561

58. நிமிர்பரிய மாதாங்கவும்
ஆவம் சேர்ந்த புறத்தை தேர்மிசைச்
சாவ (புறநானூறு 14:7-9)

59. இடம்பிறர் கொள்ளாச் சிறுவழிப்
படம்செய் பந்தர்க் கல்மிசையதுவே (புறநானூறு 260:28-29)

60. கம்பலத்து அன்ன பைம்பயிர்த் தாஅம் (நற்றிணை 24:1-2)

61. உடாஅ போரா ஆகுதல் ஆறிந்தும்
பாடாம் மஞ்ஞைக்கு ஈட்ட எம்கோ (புறநானூறு 141:9-10)

கலிங்கம் ..................
ஆர்வ நெஞ்சமொடு போர்வை வவ்வலின் (அகம். 136:23)

62. துணைபுண ரன்ன தூநிறத் தூவி
யிணையணை மேம்படப் பாயணை யிட்டுக்
காடிகொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடமை தூமடி விரித்த சேக்கை (நெடுநல்வாடை 132-135)

63. Shamasastry, R. (Tr.), 1915, Kautilya's Arthasastra, Goverment Press, Bangalore, Digital PDF Copy, p. 110.

64. திருமணி விளக்கங்காட்டி திண்ஞா
ணெழினி வாங்கிய வீரறைப் பள்ளியுள் (முல்லைப்பாட்டு 63-64)

65. மரும்பொரு எருத்துந் திருந்துதொடை நோன்றா
அடிபுதை யரணமெய்தப் படம்புக்கு (பெரும்பாண். 68-69)
படம்புகு மிலேச்ச ருழைய ராக (முல்லைப்பாட்டு 66)

66. புறநானூறு 383:10-12; சிறுபாணாற்றுப்படை 235-236

67. புறநானூறு 383:10-12, 397:15, பொருநராற்றுப்படை 80-84

68. பெரும்பாணாற்றுப்படை 468-470

69. புறநானூறு 398:8-20

70. புறநானூறு 392:14-15; நற்றிணை 366:2; அகநானூறு 198:5-6

71. புறநானூறு 390:13-15, 393:15-18; பதிற்றுப்பத்து 54:5; பெரும்பாணாற்றுப்படை 235

72. அகநானூறு 136:19-20

73. நெடுநல்வாடை 145-147; குறிஞ்சிப்பாட்டு 54-55

74. ஈன்ற அரவின் நா உருக் கடுக்கும் என்
தொன்றுபடு சிதாஅர் துவர நீக்கிப்
போதுவிரி பகன்றைப் புதுமலர் அன்ன
அகன்றுமடி கலிங்கம் உடீஇச் (புறநானூறு 393:15-18)

இரும்புலி வேங்கைக் கருந்தோல் அன்ன
கல்எடுத்து எறிந்த பல்கிழி உடுக்கை (அகநானூறு 285:8-9)

75. யாழ்ப் பத்தர்ப் புறம்கடுப்ப
இழைவலந்த பஃறுன்னத்து
இடைப்புரை பற்றிப் பிணிவிடாஅ (புறநானூறு 136:1-3)

துன்னற் சிதாஅர் நீக்கித் தூய
கொட்டைக் கரைய பட்டுடை நல்கி (பொருநராற்றுப்படை 154)

வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னற் சிதாஅர் துவர நீக்கி
நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்
தரவுரியன்ன அறுவை நல்கி (பொருநராற்றுப்படை 80-84)

76. காட்டாக, புறநானூறு 54:10-11, 159:13-14, 376:10-11

77. உடைஓர் பான்மையின் பெருங்கை தூவா
வறன்இல் புலத்தி எல்லித் தோய்த்த
புகாப்புகர் கொண்ட புன்பூங் கலிங்கமொடு (நற்றிணை 90:3-5)

கழுவுறு கலிங்கம் கழாஅது உடிஇக் (குறுந்தொகை 167:2)

கழுவுறு கலிங்கம் கடுப்பச் சூடி (பதிற்றுப் பத்து 76:13)

காடிகொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடமை தூமடி விரித்த சேக்கை (நெடுநல்வாடை 134-135)

78. ஊழுறு வினை நெற்று உதிர, காழியர்
கல்வைப் பரப்பின் வெவ்உவர்ப்பு ஒழியக் (அகம். 89:7-8)

79. முருகுமெய்ப் பட்ட புலைத்தி போலத்
தாவுபு தெறிக்கும் மான்மேல் (புறநானூறு 259:5-6)

களர்ப்படு கூவல் தோண்டி நாளும்
புலைத்தி கழீஇய தூவெள் அறுவை (புறநானூறு 311:1-2)

பசைகொல் மெல்விரல் பெருந்தோள் புலைத்தி
துறைவிட்டன்ன தூமயிர் எகினம் (அகநானூறு 34:11-12)

அவ்வரி கொன்ற கறைசேர் வள்உகிர்ப்
பசைவிரல் புலைத்தி நெடிதுபிசைந்து ஊட்டிய
பூந்துகில் இமைக்கும், பொலன்காழ் அல்குல் (அகம். 387:5-7)

நலத்தகைப் புலத்தி பசைதோய்ந்து எடுத்துத்
தலைப்புடை போக்கித் தண்கயத்து இட்ட (குறுந். 330:1-2)

80. சோறமைவுற்ற நீருடைக் கலிங்கம்
உடையணி பொலிய............ (மதுரைக் காஞ்சி 720-722)

காடிகொண்ட கழுவுறு கலிங்கத்து (நெடுநல்வாடை 134)

81. செருவாய் உழக்கிக்குருதி ஓட்டிக்
கதுவாய் போகிய துதிவாய் எஃகமொடு
பஞ்சியும் களையாப் புண்ணர் (புறநானூறு 353:14-16)

82. காட்டாக, குறுந்தொகை 342:4-5 (குறிஞ்சி), நற்றிணை 80:5 (மருதம்), நெய்தல் ஐங்குறுநூறு 191:3 (நெய்தல்), அகநானூறு 7:2 (பாலை).

83. மரல்நார் உடுக்கை மலையுறைக் குறவர்
அறியாது அறுத்த சிறியிலைச் சாந்தம் (நற்றிணை 64:4-5)

84. பதிப்பாசிரியர் குழு, தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரையுடன், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. பக். 379

85. வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
.......
.......
கங்கை வாரியும் காவிரிப் பயனும் (பட்டினப்பாலை 187, 190)

வடக்கிலிருந்து இங்கு கொணரப்பட்ட சூதுபவளங்கள் தமிழகத்தின் அகழாய்வில் பல இடங்களில் கண்டெடுக்கப் பட்டுள்ளன. கங்கையிலிருந்து வெட்டிவேர் கொணரப் பட்டதற்கு இலக்கியம் மட்டுமன்றி ஆவணச் சான்றும் உள்ளது. (பார்க்க ந.அதியமான் 2016 'சங்க காலத் துறைமுகத்தில் முசிறித் துறைமுகத்தின் பங்கு குறித்த ஒருகிரேக்க ஆவணம்' புதிய ஆராய்ச்சி, இதழ் 6. பக். 96-104). இவ்வாறு வெட்டிவேர் கொணரப்படும்போது கலிங்கநாட்டுத் துறைமுகத்திலிருந்து துணிகளும் பெற்று வந்திருக்கலாம்.

வால்உளைப் புரவியொடு வடவளம் தரூஉம்
நாவாய்சூழ்ந்த நளிநீர்ப் படப்பை (பெரும்பாண். 320-21)

நாவாய் என்னும் ஆழ்கடலில் பயணம் செய்யும் கப்பல்களில் மேலைநாடுகளிலிருந்து வந்த குதிரைகளையும் வட இந்தியாவி லிருந்து வந்த பொருட்களுடனும் நீர்பெயற்று என்னும் துறை முகம் விளங்கியதாகப் பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது ●



# சொல் தானியங்கள் சுமந்தலையும் பயணி

ப.இராஜராஜேஸ்வரி




**வைக்கோல் கன்று பசுவானது**
**பூர்ணா**
*வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,*
*41- பி, சிட்கோ இண்ட்ஸ்ட்ரியல் எஸ்டேட்*
*அம்பத்தூர், சென்னை - 600 098.*
தொலைபேசி எண்: *044 - 26359906*
**₹** *65.00*

இலக்கியம் கனம்கூடிய நெருக்கடிகளின் அழுத்தத்தி லிருந்து விட்டு விடுதலையாகத் துடிக்கும் மனித மனத்தின் வெளிப்பாடாக மட்டுமன்றி ஈரம் உலராத நேற்றைய, அதற்கும் முந்தைய நாட்களின் புனை வாகவும் அமைகிறது.

"அக, புறத் திணைகளில் உள்ள முரண்களும் சமூகத்தில் நான் எதிர்கொள்ளும் ஏற்றத்தாழ்வுகளுமே என் சிந்தனையைக் கூர்மையாக்கின. விளிம்புநிலை மக்களின் ஓலத்திலிருந்தும், நிலம் சார்ந்த சிந்தனையி லிருந்துமே என் எழுத்து கர்ப்பம் தரிக்கிறது'' என்று கூறும் பூர்ணாவின் "வைக்கோல் கன்று பசுவானது" எனும் ஆறாவது கவிதைத் தொகுப்பு வெறுமை வெளியிலிருந்து தன்னை மீட்டெடுக்கும் ஓர் உயிரின் வேட்கையாகவும் தன்னைச் சுற்றியிருக்கும் சிறையை உடைத்து வெளிவரத் துடிக்கும் மௌனத்தின் வெடிப் பாகவும் அமைகிறது.

இயற்கையாய் மரணித்துவிட்ட அல்லது இயற்கை மரணம் என்று எல்லோரும் நம்பிக்கொண்டிருக்கும் கன்றின் தோல் உரித்து வைக்கோல் திணித்து வைக்கப் பட்ட வைக்கோல் கன்றினை கறவை மாட்டின் மடி சுரப்பிற்காகப் பயன்படுத்திக்கொள்ளும் அதீத அறிவாளிகள் போல அதிகார வர்க்கமும் தங்கள் தேவை களுக்கும் வசதிகளுக்கும் சோதனைக் களங்களுக்கும் விரும்பியபடியெல்லாம் பயன்படுத்திக்கொள்ளும் வைக்கோல் கன்றுகளாகவே மக்களைக் கையாளுகின்றனர். உணர்வுகளும் உரிமைகளும் கனவுகளும் களவாடப் பட்டு நடைபிணங்களாக நடத்தப்படும் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயங்கள் மறுக்கப்படும் சூழலில் தாய்மை உணர்வோடு எழுப்பும் எதிர்க்குரல் இத் தொகுப்பு முழுதும் ஒலிப்பதன் குறியீடாகத் தலைப்பு அமைந்துள்ளது.

வழக்கமானத் திட்டமிடல்கள், எதிர்பார்ப்புகளைத் தகர்த்தெறிந்து நடந்தேறுகிற நிகழ்வுகளால் அகத்திலும் புறத்திலுமாய் ஏற்படும் அதிர்வுகளை மிக நுட்பமாக சொற்கூட்டங்கள் வழியே வாசகர்களுக்குக் கடத்தி விடுகிறார். இயற்கையிலிருந்து பிரித்தறிய முடியாத சங்கக் கவிதை மரபினைத் தனது அடையாளமாகப் பெற்றிருக்கும் கவிஞர் பூர்ணா உடலில், உள்ளத்தில் படிந்துகிடக்கும் நிலத்தின் சாயலை கவிதைகளில் பிரதிபலிக்கிறார்.

ஆதிகாலம் தொட்டு தம் இனத்தின் வாழ்வாயிருந்த புழங்கு பொருள்கள் எல்லாமும் கண்காட்சியில்

வரிசைப்படுத்தப்பட்டிருப்பது கண்டு கடந்து செல்ல மனமில்லாமல் திகைத்து நிற்பதும், எவருக்கும் தெரியாமல் கண்ணீரைத் துடைத்துக்கொள்வதுமாய் சுயம் தொலைத்து நிற்கும் விவசாயியைக் காட்டுகிறார். வெம்பாடுபட்டு உழைத்தபோதெல்லாம் விவசாயம் செழிப்பாகவே இருந்தது. விவசாயத்திற்கென உபகரணங்கள் எல்லாம் கண்டுபிடித்தபின் விவசாய நிலமே இல்லாமல் போனது தான் முரண். "இனி ஒருபோதும்/ நாம் கொண்டாடப் போவதில்லை உழவர்களை / புலம்பெயர்ந்த நிலங்கள் / தொட்டிச்செடிகளில் வாழப்பழகிக்கொண்டன.''

பெருவெள்ளமாய்ப் பாய்ந்து போகும் அரசியலில் அடித்துச் செல்லப்பட்டு நீர் வடிந்தபின் காய்ந்து கிடக்கும் பாழ்நிலமென சாமானியர்களின் வாழ்க்கை ஓய்ந்து கிடப்பது "மீன்களைச் சுவைக்க / மீன் குழம்பு வைக்க / எங்களுக்குத் தெரியும் / மீன் அரசியல் சமைக்க / அவர்களுக்குத்தான் தெரியும்" எனும்போதும் "கூலின்னு சொல்லுங்கடா என்று / தடித்தச் சொல்லொன்று / விழுந்தது / முதலாளியைத்தான் / அவர்களால் ஒன்றும் செய்ய முடியாதே'' எனும் வரிகளிலும் நெடியடிக்கிறது.

உழைக்கும் வர்க்கத்தினரின் வாழ்நாட்களை உபரியாய் வாழ்ந்து கொள்ளும் முதலாளி வர்க்கத்தைப் பற்றி சிந்திக்காமல் இளம் சமுதாயம் கட்டற்று அலைந்து தடமிழந்து போவதைச் சுட்டும்போது "அடுப்பு எரிக்க வக்கற்றவன் / பேருந்தை எரிக்கிறானாம் / தீக்குளிப் பானாம் / அவனிடம் சொல் / பலமுறை இல்லையென்று / திருப்பி அனுப்பியவனிடம் / கால்கடுக்க வயதான தாய் / வாங்கிய மண்ணெண்ணெய்" என்று வார்த்தைகள் தீப்பிடித்து எரிகின்றன.

இப்படி வெறுமை, வறுமை, அடிமை என வெவ்வேறு வடிவிலான சிறைக்கம்பிகள் தகர்க்கும் சொல்லமர்க்களத்தைத் தாண்டி நேயம் பேசும்போது கவிதைகள் சில்லிடுகின்றன. சொல்தானியங்களை சுமந்தலையும் இந்தப் பயணி கதகதப்பாக தேநீர் அருந்தும் போதும் இதயத்தைத் தாண்டி பசித்த கன்றுக்குட்டியின் கதறலைக் கேட்டு உறைகிறார். பிற உயிர்களின் தேவையறிந்து நல்கும் ஈகையே இறைவனுக்கு அளிக்கும் காணிக்கையாகிறது. கோயிலுக்குள் இருப்பது உண்டியல் அல்ல பிச்சைப் பாத்திரம். கோயிலுக்கு வெளியில் தோல் போர்த்திய எலும்பு கையில் இருப்பது பிச்சைப்பாத்திரம் அல்ல உண்டியல் என்று பக்தியை, காணிக்கையைப் புரிதலுக்கு உட்படுத்துகிறார்.

மழைபிடித்து விளையாடிய பால்ய நினைவுகளும், வீடுமுழுதும் முளைவிட்டிருக்கும் குழந்தையின் சொற்களை இனம் கண்டுகொள்வதும், பண்டிகை முடிந்த மறுநாள் வெடிக்காத வெடிகளைத் தேடும் துப்புரவாளனுக்காக இரங்குவதும், மனம்பிறழ்ந்து திரிபவர்களிடம் தெய்வச்சாயலைத் தரிசிப்பதும், ஆகாயத்தோட்டி காக்கையின் மரணத்திற்கு மௌன அஞ்சலி செலுத்த வேண்டுவதும், கூண்டுக்குள் தான் இட்டிருந்த முட்டையை வெறித்துப் பார்க்கும் பறவையின் ஒலிக்குறிப்புகளை ஒப்பாரியாய் மொழி பெயர்த்துக்கொள்வதும், காற்று தீண்டும்போதெல்லாம் அசையும் நாணல் மீன்கொத்தியை அழைப்பதாய் புனைந்து கொள்வதும், மிட்டாய் தின்னும் குழந்தையின் வாயில் ஒழுகும் எச்சிலில் துயரங்களைச் சலவைசெய்து கொள்வதும், உப்பில் உறைந்திருக்கும் கடலைச் சிறிது கிள்ளித் தூவுவதுமாய்த் தொகுப்பின் பக்கங்கள் எங்கும் அழகும் அன்பும் ததும்பும் சொற்கள் உலவுகின்றன.

சிரிக்கும் தொட்டிப் பூச்செடி, குறுநகையுடன் தூங்கும் மழலை, தாய் முதுகிலமர்ந்திருக்கும் கோழிக் குஞ்சு, ஆட்டின் வயிற்றில் தலைசாய்ந்திருக்கும் குட்டி ஆகியவை பாசாங்கற்ற பாசத்தின் குறியீடுகளாகும்.

காவல் தெய்வங்களும் காப்பாற்றும் தெய்வங்களும் எங்கெங்கும் இருந்தபோதும் கொலை, கொள்ளைகள் நடப்பதாக விசனப்படும் கவிஞர் "அது ஒன்றும் செய்யாது / பொய்க்குதிரை / தொட்டுப்பார் என்று / பலவகையில் மெய்ப்பித்த தந்தை / அய்யனாரும் ஒன்றும் செய்யாது / என்பதையும் சொல்லியிருக்கலாம்'' என்று கட்டுடைக்கிறார்.

இரத்தம் வழிந்தோட கடித்துக்கொண்ட நாய்கள் பின்னொரு நாளில் குப்பைத்தொட்டியில் உணவைத் தேடிக்கொண்டிருப்பதைக் காணும் கவிஞர் "விளையாடப் போய் காலில் இரத்தம் சொட்ட / வீடு வந்த மகன் / ஏப்பா பெரியய்யா /பாதை மேல முள்ளை போட்டு வச்சுருக்கு / என்றான்.''

எனும்போது மிருகத்திடம் தோற்றுவிட்ட நாணய மற்ற மனிதத்தின் இறுமாப்பினை நொறுக்குகிறார்.

உடலில் ஏற்படுத்திய ஐந்து காயங்களினும் குற்றவாளி என்று நாவால் வீசப்பட்ட ஆறாவது காயம்தான் இயேசுவின் உயிரைக் குடித்தது. அதுபோல நிரூபணமற்ற குற்றச்சாட்டுகளில் மரித்துப்போகும் உயிரின் ஆறாத ரணங்களில் கசியும் குருதியின் பிசுபிசுப்பினைக் காட்சிப்படுத்தும்போதும், நசிந்து கொண்டிருக்கும் சூழலியலைக் கவனப்படுத்தும்போதும் மனம் பதைக்கிறது.

வாழ்க்கைப் பரப்பில் விழுந்து கிடக்கும் முடிச்சு களின் இறுக்கமறிந்து தளர்த்தும் கணங்கள் பூர்ணா என்ற ஜோ.ஏசுதாஸ் எழுதுகோலில் கவிதை களாக மலர்வது இயல்பாக நிகழ்கிறது. கழிவிரக்கமாய்ச் சுருங்கிவிடாக் கவிதைகளில் கலகக்குரல் ஓங்கி ஒலிக்கின்றது. இசங்களுக்குள் பொருத்திவைக்க முயலாத கவிதைகள் ஆதலால் இசங்களாய் நீள்கின்றன. ●

# பட்டுக்கோட்டையார் பாடல்களில் சமுதாயப் பார்வை



ப.இந்திரா

மானிட வாழ்க்கை மகத்துவமானது. மற்ற உயிர்களைக் காட்டிலும் பண்பட்ட பக்குவ நிலையை உடையது. சூழலும், சூறாவளியும் சுற்றி வருவது போல மனித வாழ்க்கையும் மாறிக் கொண்டேயிருக்கிறது. தரிசு நிலங்களைக் கொத்திப் பதப்படுத்தி மண்ணைப் பொன்னாக்கும் வளமான பூமியாக மாற்றுவது உழவனின் கடமையாகும்.

பண்பில்லாத மனித உள்ளத்திற்குத் தத்துவங் களையும் அறிவுரைகளையும் வழங்கி ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவது கவிஞர்களின் கடமையாகிறது. ஏனெனில் ஒரு கவிஞன் பொதுநலவாதியாகத் தான் இருப்பான். பொதுநலத்திற்காக பாடுபடும் ஞானிகள், யோகிகள், கவிஞர்கள், அடியார்கள், சான்றோர்கள் மற்றும் மனித நேயம் கொண்ட மனிதர்கள் அனைவரும் சமூகச் சீர்திருத்தவாதி களாக இருக்கின்றனர்.

சிந்தனை, செயல், விழிப்புணர்வு, விடுதலை யுணர்வு, புரட்சி, மறுமலர்ச்சி மனமாற்றம் இவற்றிற்குக் காரணமாக விளங்கியவர்கள் பலர். அவர்களுள் அரிஸ்டாட்டில், ஆபிரகாம் லிங்கன், காரல் மார்க்ஸ், லெனின், பாரதியார், பாரதி தாசன், பெரியார் போன்றவர்களைக் குறிப்பிடலாம். அவர்களின் வழியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் தான் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்.

பண்பாட்டின் புகழிடமாய் விளங்கும் செந் தமிழ் மண் ஈன்றெடுத்த பாவலர்களிலே, மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரமும் ஒருவராவார். இக்கவிஞரது பாடல்களில் பொது வுடைமைக் கருத்துக்களும் புரட்சிக் கருத்துக்களும் மிகுந்து காணப்படும். இதற்குக் காரணம், அவர் வாழ்ந்த அக்காலச் சமூகச் சூழ்நிலையே ஆகும்.

மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டத்திலடங்கிய 'செங்கப்படுத்தான் காடு' என்ற கிராமத்தில் 1930ஆம் ஆண்டு விவசாயக் குடும் பத்தில் திரு. அருணாச்சலக்கவிராயருக்கும், திருமதி. விசாலாட்சி அம்மையாருக்கும் இளைய மகனாய்ப் பிறந்தார். கணபதிசுந்தரம், வேதம்பாள் ஆகிய இருவரும் கவிஞரோடு உடன்பிறந்தவர்கள். இவரின் துணைவியார் கௌரவாம்பாள் என் பவராவார். 1959-ஆம் ஆண்டு மகன் குமரவேல் பிறந்தார். 8.10.1959 ஆம் ஆண்டு மூக்கில் இரத்தக் கசிவு ஏற்பட்டு திடீரென்று சென்னை பொது மருத்துவமனையில் மறைந்தார்.

கல்யாண சுந்தரனார் சிறுவனாக இருக்கும் பொழுது அண்ணன் கணபதியுடன் ஓராண்டு உள்ளூர் சுந்தரம் பிள்ளை திண்ணைப்பள்ளியில் அரிச்சுவடி படித்திருக்கிறார். பிறகு தன் அண்ணனிடம் இரண்டாண்டு பாடம் கற்றுக்கொண்டார். சிறு வயதிலேயே பாடல்கள் பாடுவதிலும், நாடகம் திரைப்படம் பார்ப்பதில் அலாதியான ஆர்வம் கொண்டவர்.

கவிஞர் எட்டு வயதில்,

**"நல்லதைச் சொல்பவன் நாத்திகனா?- உலகில்**
**இல்லாததை சொல்லி ஏமாற்றுவது தான் முறையா?"**

என்ற பாடலை தன் அண்ணன் கணபதியிடம் எழுதிக் காட்டியிருக்கிறார். இதுவே கவிஞரின் முதல் பாடலாகும். ஆனால் இந்தப் பாடலின் முதல் வரியைத் தவிர, மற்ற வரிகள் இதுவரை கிடைக்கவில்லை.

கவிஞருக்கு ஒன்பது வயதிலேயே படிப்பு முடிந்துவிட்டது. கவிஞர் வாழ்ந்த காலத்திற்குள் 17-வகையான தொழில்களைச் செய்தாராமென்று ப. ஜீவானந்தம் அவர்கள் குறிப்பிடுகிறார்.

கவிஞர் எந்தப் பாடலை எழுதத் தொடங் கினாலும் "வாழ்க பாரதிதாசன்" என்று எழுதி விட்டுத்தான், பாட்டின் பல்லவியை எழுதத் தொடங்குவார்.

திரைப்படத்திற்கு எழுதிய முதல் பாடல்.

**"காப்பி ஒண்ணு எட்டணா கார்டு சைசு பத்தனா**
**காணவெகு ஜோராயிருக்கும் காமிராவைத் தட்டினா!**

............................

பிரியம் போல காசுபணம் சலிசாகவும் கொடுக்கலாம்''

இந்தப் பாடல் 'படித்த பெண்' என்ற திரைப்படத்திற்கு எழுதிய பாடலாகும்.

கல்வி மனிதனுக்குத் தேவைதான் என்று கவிஞர் அழுத்திக் கூறுகிறார். ஆராய்ந்து அறிந்து கொள்ளும் உண்மை அறிவு கல்வியால்தான் வரும் என்பதோடு இந்த உலக இயக்கத்தைப் புரிந்து கொள்ளவும் கல்வியின் வழிபெறும் அறிவே தேவை என்கிறார். ஆனால் அதுமட்டும் அவன் வாழ்க்கையை மேம்படுத்திவிடாது என்று தொடர்ந்து கூறி நம்மை சிந்திக்கத் தூண்டுகிறார்.

''படிப்பு தேவை அதோடு
உழைப்பும் தேவை - முன்னேற
படிப்பு தேவை - அதோடு
உழைப்பு தேவை
உண்மை தெரியும், உலகம்
தெரியும் படிப்பாலே - நம்
உடலும் வளரும் தொழிலும்
வளரும் உழைப்பாலே''

ஏட்டுக்கல்வி ஒரு மனிதனின் மூளையைத் தான் கூர்மையாக்கும் என்று மு.வ அவர்கள் கூறு கின்றார். அறிவு வளர்ச்சி வேறு மூளை வளர்ச்சி வேறு. ஒரு மனிதன் எட்டில் படித்ததோடு நின்று விட்டால் அவன் அறிவு வளர்ச்சி பெற்றவனாக ஆகிவிடமாட்டான் என்ற அற்புத வாழ்வியல் உண்மையைப் பட்டுக்கோட்டையார் மிக எளிமை யாகத் தமது பாடல்களில் கூறியுள்ளார்.

பெண்ணின் உரிமைக்குக் குரல் கொடுத்த வர்கள் மாயூரம் வேதநாயகம்பிள்ளை, பாரதியார், பாரதிதாசன் போன்றவர்கள் ஆவர். இவர்களுடைய வழிவந்தவர் நம் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள்.

சமுதாயம் முழு விடுதலைபெற்று உயர பெண்கள் முன்னேற்றம் மிக அவசியமானதொன் றாகும். இதனையுணர்ந்த கவிஞர் தம் பாடல்களில் பெண்களின் உயர்வினைப் பற்றியும், அவர்கள் படும் துயரம், அத்துன்பம் நீக்க, பல வழிகள் இவைகளை தம் பாடல்களில் பாடியுள்ளார்.

பெண்மையைப் புகழ்ந்து பாடிய பாரதியை பட்டுக்கோட்டையார் பாடுகையில்,

''பெண்மையைச் சக்தியை
உண்மையைப் புகழ்ந்தான்''

என்கிறார்.

சமூகத்தில் பெண்களின் தாழ்வுற்ற நிலை மையைத் தம் பாடல்களின் மூலம் வெளிக் கொணர்ந்து பெண்ணுரிமைக்குக் குரல் கொடுக் கிறார் பட்டுக்கோட்டையார்.

''உலகிற்கு ஒளி அளிப்பது ஆதவன்
வாழ்விற்கு ஒளி அளிப்பது பெண்மை''

என்று பாடுகின்றார்.

ஒரு நாட்டின் செல்வத்தை, மேன்மையை, அந்நாட்டுப் பெண்களின் மூலம் கணக்கிட முடியும் என்பதே கவிஞரின் கருத்தாகும்.

''ஆணுக்குப் பெண்கள் அடிமையென்று
யாரோ எழுதி வச்சாங்க''

என்ற பாடலின் ஒவ்வொரு வரியிலும், மக்கள் கவிஞரிடம் பெண்களின் விடுதலைக்குப் பாடு படும் உணர்வு மேலோங்கிக் காணப்படுகிறது.

மேலும் அப்பாடலிலேயே,

''கற்பின் பலமென்றும் கண்ணகி குலமென்றும்
கச்சிதமா திட்டுவாங்க''

என்று கூறுவதிலிருந்து பெண்களின் கற்பைக் களவாடும் ஆண் சமூகத்தினைச் சாடுவது புலப் படுகிறது.

மக்கள் அனைவருக்கும் தேவையான உணவு, உடை, இருப்பிடம் ஆகிய மூன்றினையும் உருவாக்கு வோர் தொழிலாளர்களே. தொழிலாளர்கள் உலகை நடத்திச் செல்லும் ஒளி விளக்குகள் என்றால் மிகையாகாது. உலகை வாழ வைக்கும் பாட்டாளி மக்கள் நலமுடன் வாழ்ந்தால்தான் மக்களினம் சிறப்புற்று வாழ முடியும். தொழிலாளர்கள் வாழ்விலே, பஞ்சம் புகுந்தால் அவர்களின் நிலை பரிதாபத்திற்குரியதாகும். எனவே தொழிலாளர்கள் பூரண நலத்துடன் வாழ வேண்டும்.

''செய்யும் தொழிலே தெய்வம்
அந்தத் திறமைதான் நமது செல்வம்
கையும் காலுந்தான் உதவி
கொண்ட கடமைதான் நமது பதவி
பயிரை வளர்த்தால் பலனாகும்
அது உயிரைக் காக்கும் உணவாகும்
வெயிலே நமக்குத் துணையாகும்''

என்று தொழிலாளர்களின் தன்னம்பிக்கையையும், செய்யும் தொழிலையும் திறமையாகச் செய்ய வேண்டும் என்ற பொதுவுடைமைக் கோட்பாட்டை உருவாக்கினார் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார்.

கஞ்சி குடிப்பதற்கிலார் - அதன்
காரணங்கள் இவை எனும் அறிவுமிலார்

என்று பாரதி கேட்டதையே,

அவன் தேடிய செல்வங்கள் சீமான் வீட்டினிலே
சேர்ந்ததினால் வந்த தொல்லையடி

என்று கூறுகிறார்.

*உழைக்காததால் அல்ல, உற்பத்திப் பெருக்கம் இல்லாததால் அல்ல, உற்பத்தி சேர வேண்டிய இடத்தில் சேராமல் முதலாளிகளிடம் சேர்ந்து விட்டால் தான் வருகிறதுதொல்லை என்று சுட்டுகிறது.*

**''வளர்ந்து வரும் உலகத்துக்கே**
**நீ வலது கையடா''**

*என்று ஆற்றல், அறிவு, பண்பு ஆகியவற்றை உடைய தொழிலாளர் உலகின் வலதுகை என்கிறார்.*

**''பழந்துணி அணிந்தாலும்**
**பசியாலே இறந்தாலும்**
**பாதை தவறாத**
**பண்பு உள்ளம்**
**இருந்த நிலை மறந்து**
**இழுக்கான குற்றம் தன்னைப்**
**புரிந்திடலாமென்று**
**துணியுதடா - நேர்மை**
**பொல்லாத சூழ்நிலையால்**
**வளையுதடா''**

*என்று பாடுவதில் தவறுகள் இழைக்கப்படுவதற்கே சூழ்நிலை தான் காரணம் என்ற கருத்தை வெளியிடுகிறார்.*

**''காலுக்குச் செருப்பும் இல்லை**
**கால் வயிற்றுக் கூழும் இல்லை''**

*என்று ஜீவா கூறிய கருத்தை அமைத்து,*

**''கையில் ஒரு காசுமில்லை**
**கடன் கொடுப்பார் யாருமில்லை**
**கஞ்சிக்கொரு வழியுமில்லை**
**கொல் வறுமை தாழவில்லை**
**ஏங்கி இரந்துண்ணவோ எங்கள் மனம்**
**கூசுதடா''**

*என்கிறார்.*

*பசியிலும், தன்மான உணர்வைப் பலியிடத் தயங்கி ஏங்கும் உழைப்பாளர் குமுறலை வெளியிட்டார். அதே தொனி இப்பாட்டிலும் ஒலிக்கிறது.*

*ஒன்பது செண்பகப்பூ கவிதைத் தொகுதியில் (ஆசிரியர் - துறைவன்) கவிஞர்கள் ஏரோட்டும் உழவனை, பார்போற்றும் புலவனாக்கி மகிழ்கின்றனர். அதுவும் புலவர்கள் தங்கள் இலக்கண மரபை மாற்றி உழவன் படைத்த இலக்கியத்தைப் போற்றுகின்றனர். கிழவர்கள் தனது பழைய மரபுகளைப் பறைசாற்றுவதைத் துறந்து, மாறிவரும் உலகிற்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டு இளைஞர்களிடம் உள்ள புதிய மரபை ஏற்றுக் கொள்கின்றனர். இதனை, பட்டுக்கோட்டையார்*

**''உழவர் புதியதாய் தமிழ் செய்வார் - அதை**
**உவந்து புலவர் போற்றிடுவோர்**
**கிழவர் கூடி இளைஞரிடம் - நிதம்**
**கேட்டு மகிழ்வார் புதுமறைகள்''**

*என்று கூறுகிறார்.*

*உயிரினங்களின் உன்னத உணர்வு காதல், அன்பு, நேசம், பிரியம், பாசம், பற்று, நட்பு, பக்தி எனப் பல சொற்களின் ஒரே பொருள் காதல். கங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை தனது மையப் பொருண்மையாய் தேர்ந்தெடுத்தது காதலையே. காதலின்றி கவி படைத்தவரை காணலாகாது. உலக இயக்கமானது காதல் என்ற மையப் புள்ளியைப் பற்றிக் கொண்டே படருகிறது. இவ்வகையில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் படைத்துள்ள காதலின் பன்முகப் பரிமாணங்களைக் காணலாம்.*

**''எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது**
**தான் அமர்ந்து வரூஉம் மேவற்றாகும்''**

*பட்டுக்கோட்டையார் காதலைப் பற்றிப் பாடும் போது,*

**''மின்னும் இயற்கையெல்லாம்**
**உன்னழகைக் காட்டுதடி**
**எண்ணமெனும் தேன் கூட்டில்**
**இன்பக் கனல் மூட்டுதடி''**

*என்று காதலியின் உயர்வைப் பாடுகிறார். மேலும் பெண்களின் அன்பையும், பாசத்தையும், நல்ல கணவன் உறவையும்,*

**''மங்கை இதயம் நல்ல துணைவன்**
**வரவு கண்டே மகிழ்ந்திடும்**
**உறவு கொண்டால் இணைந்திடும் - அதில்**
**உண்மை இன்பம் விளைந்திடும்''**

*என்று எடுத்துரைக்கின்றார். காதலுக்குப் பொருள் கூறுகையில்*

**'' தடுத்தவர்கள் வென்றதில்லை**
**சரித்திரமே சொல்லும் - காதல்**
**அடுத்தவர்கள் அறியாமல்**
**ரகசியமாய்ச் செல்லும்''**

*என்று கூறிக் காதலின் வல்லமையைப் புலப்படுத்துகிறார்.*

*யார் வாழ்ந்தாலென்ன, யார் ஆண்டாலென்ன? தான் வாழ்ந்தால் போதும் எனத் தற்சார்போடு இயங்கிக் கொண்டிருக்கும் சமுதாயத்தில் கவிஞர் விடிவெள்ளியாகத் திகழ்ந்தார் என்பது அவரின் கவிதைகளால் வெளிப்படுகிறது. கவிஞரின் சமுதாய சிந்தனைகள் கவிதைகளாக மட்டும் உருவாகவில்லை. கால வரலாறாகவும் காணப்படுகிறது. அவரின் சிந்தனைகள் சமுதாயத்தில் பிரதிபலிக்கப்படுமானால் தமிழ்ச் சமுதாயம் உலக அரங்கில் தலை நிமிர்ந்து இருக்கும்.* ●

## விறுவிறுப்பான விற்பனையில்...

# கார்ல் மார்க்ஸ்

**அறிவுப் பயணத்தில் புதிய திசைகள் (1881-1883)**

**மார்செல்லோ முஸ்ட்டோ**

தமிழாக்கம்

**எஸ்.வி.ராஜதுரை**




₹ 210/-

கார்ல் மார்க்ஸின் கடைசி மூன்றாண்டுகளில், அவர் சொந்த வாழ்வில் எதிர்கொண்ட கடும் சோதனைகளையெல்லாம் மீறி, கணிதவியல் ஆராய்ச்சிக்கு முக்கியப் பங்களிப்புச் செய்ததையும், மானுடவியலில் மேற்கொண்ட ஆராய்ச்சிகளில் கிடைத்த முடிவுகளையும், எண்ணற்ற வரலாற்று நூல்களிலிருந்து கற்றவற்றையும் அவர் தமது அரசியல், பொருளியல், கோட்பாடுகளைச் செழுமைப்படுத்தப் பயன்படுத்தியதையும் எடுத்துரைக்கிறார் மார்செல்லோ முஸ்ட்டோ.

மார்க்ஸின் செழுமையான இயக்கவியல் பார்வையை மட்டுமின்றி, அவரது கலை - இலக்கிய இரசனைகளையும், கனிவும் அன்பும் பாசமும் நிறைந்த கணவராக, தந்தையாக, பாட்டனாராக, நண்பராக அவர் வகித்த பாத்திரங்களையும் சிந்தனைக்கு விருந்தாக்கும் இந்த நூல், வியப்பு தரும் பல வரலாற்றுச் செய்திகளையும் உள்ளடக்கியுள்ளது.



# முத்தன்பள்ளம் - நிகழ்காலத்தின் கீழடி!

இரா. மோகன்ராஜன்




**முத்தன் பள்ளம்**
அண்டனூர் சுரா
மேன்மை வெளியீடு
5-2, பெர்தோ தெரு, ராயப்பேட்டை,
வி.எம்.தெரு, (கில்ஆதர்ஷ் பள்ளி அருகில்)
சென்னை - 600014
தொலைபேசி எண்: 044 - 28472058
₹ 150/-

**போ**கிமான் என்பது ஒரு அலைபேசி விளையாட்டு. கூகுள் வரைபடத்துணையுடன் அலைபேசியில் நிழலும், நிஜமும் கலந்து விளையாடப்பட வேண்டிய ஒன்று. நிழல் பொம்மை ஒன்று நிஜ இடங்களைக் காட்டிச் செல்ல நிஜ மனிதர்கள் அதனைப் பின் தொடர்ந்து சென்று நிஜ இடங்களில் ஒளிந்திருக்கும் நிழல் பூச்சியைக் கண்டுபிடிக்க வேண்டும். மெய்யாக இந்த விளையாட்டு நிஜமும், நிழலும் கலந்த ஒன்று. மெய்மையும், பொய்மையும் கலந்த ஒன்று. இருளும், ஒளியும் கலந்த ஒன்று. போகிமான் என்பது நிழலும் நிஜமும் கலந்த நிழலின் நிஜமாகும் அல்லது நிஜத்தின் நிழலாகும்.

நிழலும் நிஜமும் கலந்த போகிமானின் வசியக் குரலுக்கு கடந்த காலங்களில் மனிதர்கள் பலர் தமது உயிரைக் கொடுக்க வேண்டியவர்களானார்கள். இன்றைக்கு நீலத் திமிங்கிலம் எப்படி அலைபேசி மனிதர்களை வலைவீசிப் பிடித்ததோ அது போல, போகிமான் பல நிஜம் போன்ற நிழல்களுக்குள் மனிதர்களை இழுத்துப் போனான். மெய்யாக உயிர் வாழத் தகுதியற்ற இடங்களில்தான் போகிமான் தனது வலையை விரித்து வைப்பவனாக இருந்தான். மனித காலடிகளுக்குச் சவாலான இடங்களில் போகிமானின் பூச்சிகள் ஒளிந்திருந்தன. நிஜப் பூச்சிகளுக்குச் சவாலாக அவை இருந்தன. இருக்கின்றன. எந்தப் பூச்சிக் கொல்லிக்கும் அகப்படாத அந்த போகிமான் என்ற இருள் பூச்சியை மேலைநாடுகள் தடை செய்தன. ஒரு வகைப் புரட்சியைத்தான் அந்த மாயப் பூச்சிகள் செய்தன. மேட்டுக்குடிகளின் கால்கள், குடிசைகளை நோக்கியும், குடிசைகளின் கால்கள் மேட்டுக்குடிகளை நோக்கியும் நடக்கச் செய்த மாயப் புரட்சி வழித்தடத்தைத்தான் அவை உருவாக்கிக் கொடுத்தன.

வாழ்காலத்தின் வழித்தடத்தை மட்டுமல்ல போகிமான் வரலாற்றின் வழித்தடத்தையும் நிகழ்காலத் துடன் இணைக்க முடியும் என்பதைத்தான் முத்தன் பள்ளம் நாவல் பேசுகிறது. முத்தன் பள்ளம் என்ற நிகழ் வெளியை வரலாற்று வெளியுடன் போகிமான் பூச்சி இணைக்கிறது. நாவலின் மையக் கருவும் அதுதான். போகிமான் பூச்சியை நீங்கள் அடையும்போது உங்கள் விளையாட்டு முடிந்திருக்கும். ஆனால் முத்தன் பள்ளம் என்ற இருளடைந்த வெளியின் சிக்கல்கள் தொடர் வதாக இருக்கும். வரலாற்றில் தொடங்கி நிகழ்காலம் வரை முடிவடையாத சிக்கல்களின் இருப்பிடத்தை போகிமான் முத்தன் பள்ளத்தில் தொடங்கி வைப்பது தான் நாவலாகியிருக்கிறது. கடந்த காலமும், நிகழ் காலமும் சந்திக்கும் இடத்தில்தான் போகிமான் பூச்சியின் வாழிடம் அதை நோக்கித்தான் முத்தன் பள்ளம் நாவலும், போகிமான் பொம்மையும் நம்மை மாறி மாறிப் பயணித்து அழைத்துச் செல்கின்றன.

வரலாற்றில் இனக்குழுவாக வாழத் தொடங்கி அரசு, அரியணை என்று மகுடம் சூடி கோலோச்சிய ஓர் இனம் எப்படி போகிமான் பூச்சி வலைபின்னிக் கிடக்கும் இடமாக மாறியது என்பதைத்தான் நாவல்வழிக் காட்டிச்செல்கிறது. பதாகை என்பது என்ன? மனிதர் களின் தன்முனைப்பின் உருவமா? அடிமனதின் வாமன அவதாரமா? தற்புகழ்ச்சியின், தற்பெருமையின் கலை வடிவமா? ஆனால் நவீன வரலாற்றின் கல்வெட்டுக் களாகப் பதாகைகள் மாறியிருக்கின்றன என்று சொல்லலாம். ஆண்ட பரம்பரைகள், மீண்ட பரம்பரைகள் தொடங்கி பூமிக்குக் கீழே சென்ற அத்தனைக் கல்லறை மனிதர் களும் உயிர்த்தெழும் இடமாக பதாகைகள் மாறியிருப்பது என்னவே மெய்.

ஒரு வகையில் பழைய மகுடமும், புதிய ராஜாக் களும் ஆளும் இடமாக பதாகைகள் இருக்கின்றன. பதாகைகளின் ராஜாக்கள் பதாகை வழியாகவே தமது பரிபாலனத்தை செய்கிறார்கள். நவீன ராஜாக்களின் அசையும் ராஜ்ஜியம் பற்றிய செய்திகளுக்கான அசையா ஊடகமாகப் பதாகைகள் இருக்கின்றன. கல்வெட்டுக் களைப் பதித்த இனம், காணாமல் போய்க் கொண்டிருக்க, ஒரு காற்றுக்கே நிற்காத பதாகைகளில் தமது ராஜ்ஜியத்தின் சாதனைகளைப் பறைசாற்றிக் கொண்டிருக் கிறார்கள் நவீன ராஜாக்கள்! கல்வெட்டில் வாழ்ந்த பரம்பரை ஒன்று முத்தன் பள்ளத்தில் வீழ்ந்து கிடக்கும் அரசியலை எந்தப் பதாகையும் சொல்லப் போவதில்லை. மாறாக அந்தப் பதாகையின் கீழ் மூடிவைக்கவே செய்யும். வரலாற்றின் பெருமை பதாகைகளாக இருக்க, அதுவே இருக்கும் மானத்தைக் காக்கும் ஆடையாக மாறிநிற்கும் கதையை, முத்தன் பள்ளம் நாவல், வரலாற்றில் வழியும் குருதியைக் கவிச்சி மாறாமல் முன்வைத்துச் செல்கிறது.

வரலாற்றில் வாழ்ந்த இனமான, ஆண்ட இனமான முத்தரையர், அரையர் என்றெல்லாம் அழைக்கப்படும் இனம் எப்படி இனக்குழுவாக, வேட்டைச் சமூகமாக, இருந்து ஆளும் வர்க்கமாக, ஆண்ட வர்க்கமாக மாறி பின் வரலாற்றின் துரோகத்தால் முத்தன் பள்ளத்தில் வீழ்ந்த கதையைச் சொல்லிச் செல்கிறது நாவல். புதுக்கோட்டையைக் குறிப்பாக கல்லாக்கோட்டையை நடுவமாகக் கொண்டு ஆண்ட, அவர்களில் ஒரு பிரிவான கள்ளர் இனக்குழுவிற்கும், முத்தரையர் இனக்குழுவிற்குமாக மாறி மாறி அமையும் கொண்டும், கொடுத்தும் வாழ்ந்த உறவு, அவர்களது அரசியல், சமூக பொருளாதார வாழ்வு, போர், சமாதானம் என்று வரலாற்றின் திசைகளில் ஆழப் பயணிக்கிறது நாவல்.

முத்தரையர் இனக்குழு, சமண மதத்தைச் சேர்ந்ததாக இருந்ததும், பல்லவர்களுடன் அவர்களுக்கு இயல்பான உறவு இருந்ததையும் புரிந்து கொள்ள முடிகிறது. அதே சமயம் பல்லவர்களுடன் அவ்வினக் குழுவிற்கு சகோதர உறவு முறையும் இருந்துள்ளது. வேட்டை இனமான முத்தரையர் குழுவின் ஆட்சி அதிகாரச் சின்னம் மீன் சின்னமாக இருந்துள்ளது. தஞ்சையின் திருக்காட்டுப்பள்ளியை முதன்மையாகக் கொண்டு ஆட்சி செய்த அக்குழு பின்னர் புதுக் கோட்டையை நோக்கி நகர்கிறது. ஆனால் தஞ்சை - புதுக்கோட்டையை வலமிட்ட ஆட்சிப் பகுதியாக முத்தரையர் இனக்குழு அறியப்படும் பின்னணியில் அவர்கள் ஆட்சி அதிகாரம் இழந்த கதை, வரலாற்றில் நமக்கு மீள ஓர் ஈழத் தமிழர் கதையைச் சொல்வதாக இருக்கிறது.

வரலாறு எங்கும் போய் விடுவதில்லை. அவை மீண்டும், மீண்டும் திரும்பி வருகின்றன என்பதைத்தான் நாவல் நமக்குச் சொல்வதாக இருக்கிறது. 35 உட்

பிரிவுகளைக் கொண்ட முத்தரையர் எனும் இனக்குழு, விரிவடைந்து ஆட்சியதிகாரக் காலத்தில் தனது உறவுமுறையின் உட்பிரிவுகளையே தாயாதிகளையே தனது ஆட்சியதிகாரத்தின் சகல நிலையிலும் நியமித்துக் கொள்கிறது. அது ஒரு வகையில் பாதுகாப்பானதாகவும் இருக்கலாம். கோலோச்சும் மன்னனும் அவர்களாகவே இருக்கிறார்கள், குடிமக்களும் அவர்களாகவே இருக்கிறார்கள். காலப்போக்கில் அவ்வினக்குழு பிற இடங்களுக்குப் பரவின காலத்தில், தெலுங்கு, மலையாளம், கன்னடம் பேசுவோராகவும் மாறுகிறார்கள். இதை நாம் பல்துறை வித்தகர் ந.சி.கந்தையா அவர்களின் 'தென்னிந்திய குடிகளும், குலங்க'ளும் நூலிலும் பார்க்கலாம். வேட்டை, மற்றும் காவலில் திறமைசாலிகளான அவ்வினக்குழு ஓர் அரசியல் சதியால் பிற்காலத்தில் இருந்த இடம் தெரியாமல் ஆக்கப்பட்ட கதை, வரலாறு எப்படி நிகழ்காலம் வரை நீண்டு கிடக்கிறது என்பதை நமக்குச் சொல்வதாக இருக்கிறது.

பகையே அறியாத முத்தரையன், சகோதரத்துவம் பூண்ட பாண்டியனின் வஞ்சகச் சொல் கேட்டு பிறிதொரு சகோதர மன்னனான பல்லவன் மீது போர் தொடுக்க வேண்டியவனாகிறான். இன்னொரு பக்கம் குறுநில மன்னனான விசயாலய சோழன் வஞ்சகமாகப் பல்லவரையும், கங்க மன்னனையும் இணைத்துக் கொண்டு பாண்டியன் - முத்தரையன் மீது போர் தொடுத்து முத்தரையனின் ஆட்சியை தஞ்சைப் பகுதியில் முடிவுக்குக் கொண்டு வருகிறான். விசயாலயச் சோழனுக்கும், முத்தரையனுக்குமான போரில் அன்றைக்கு ஆனைவிழுந்தான் பள்ளத்தில் ஆனைவிழுந்ததோ இல்லையோ, முத்தரையன் ஆட்சி விழுந்தது. அவனது இனம் விழுந்தது. ஆனைவிழுந்த பள்ளத்திலிருந்து முத்தன் பள்ளம் வரையிலாக விழுந்துவிட்ட இனக்குழுவின் வரலாறு சமூக அறிவியல் பார்வையில் நாவலில் விரிந்து செல்வதாக இருக்கிறது. நாவலாசிரியரின் வரலாற்றுப் பார்வையும், உழைப்பும் உடன் பயணிக்கிறது.

விசயாலய சோழன் காலத்திலிருந்து முத்தரையர் இனம் மெல்ல சமூகத்தின் விளிம்பிற்குத் தள்ளப்படுவதைத்தான் ஆனைவிழுந்தான் பள்ளத்திலிருந்து முத்தன் பள்ளம் வரை நமக்குச் சொல்கிறது. மீண்டும் ஆட்சியதிகாரத்திற்கு வந்துவிடக்கூடாதென்ற வகையில் ஓர் இனமே தண்டனைக்குள்ளாக்கப்படுவதைத்தான் நாவலுக்குள் பார்க்கிறோம். சோழருக்குப் பிறகு மராட்டியர், நாயக்கர் ஆட்சியிலும் மேலும், மேலுமென அவ்வினம் வரலாற்றில் மிகக் கவனமாக ஒடுக்கப்படுகிறது. சொந்த நிலத்திலிருந்து மெல்ல நாடுகடத்தப்படுகிறது. வரலாற்றில் ஈழத்திற்கு முன்பாக ஓர் இனக்குழு மொத்தமாக தனது நிலத்திலிருந்து அகற்றப்படுவதை வரலாறு நமக்கு முன் சென்று கற்பிக்கிறது. முள்ளிவாய்க்கால் போல முத்தன்பள்ளம் ஓர் வரலாற்று சாட்சி.

வீழ்ந்துபட்ட ஓர் இனத்தின் தலைமகனாக முத்தன் இருக்கிறான். முத்தரையன் வீழ்ந்த இடம் முத்தன் பள்ளத்திலிருந்து தொடங்குகிறது. வேட்டையில் தொடங்கிய இனம் மீண்டும் வேட்டையினமாக, காவல் காக்கும் இனமாகத் தொடங்குகிறது. மகுடம் இழந்த இனம் மாற்றுக்குடியாகிறது. முத்தன் பள்ளம் என்பது மகுடம் இழந்தவர் இடமாகும். மகுடம் இழக்கும் இடமெல்லாம் முத்தன் பள்ளமாகத்தான் இருக்க முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக முத்தன் பள்ளம் இருக்கிறது.

வரலாறு என்பது வலிமையாளர்களின் வரலாறு என்பதைத்தான் முத்தன் பள்ளமும் நமக்குச் சுட்டுகிறது. வலிமையாளர்கள் எந்த இனத்தை, மதத்தை சேர்ந்தவர்களாக இருக்கிறார்களோ அதுவே வரலாறாகிவிடுகிறது. அதுவே நீதியாகிவிடுகிறது. முத்தரையர் இனக்குழு வரலாற்றில் சமூக ரீதியிலும், பொருளாதார அரசியல் ரீதியிலும் தலித் சமூகத்தைப் போன்றே சமூகத்தின் விளிம்பிற்குத் தள்ளப்படும் ஒன்றை, பேசப்படும் ஒன்றை நாவலில் பேசப்படாத பகுதியாகப் பார்க்க முடிகிறது. விசயாலய சோழன் காலத்தில் தொடங்கும் அதுவரையிலில்லாத பார்ப்பன ஆதிக்கம், சமஸ்கிருத மொழி திணிப்பு, சைவ மத செல்வாக்கு பின்னணியில் முத்தரையன் ஆட்சியின் வீழ்ச்சியைக் கணிக்க வேண்டியிருக்கிறது. சமண மதத்தைப் பின்பற்றும் முத்தரையன் ஆட்சி, அக்குடிமக்கள் விசயாலய சோழன் ஆட்சிக் காலத்தில் தாழ்குடியாக்கப்படுகிறார்கள். முத்தரையன் மகுடம் இழந்தபோது சமணமும் மகுடம் இழக்கிறது. பாண்டியன் வம்சமும் ஏககாலத்தில் சமண செல்வாக்குப் பெற்றதாகவே இருக்கிறது. ஆக முத்தரையன்-பாண்டியன் உறவென்பதே சமண உறவாகவே இருந்திருக்கலாம்.

விசயாலயன் வம்சம் சோழ வம்சமாக விரியும் காலத்தில் எண்திசையும் சைவ மதம் தழைக்கிறது. சமணம் - அதை ஏற்றுக் கொண்ட முத்தரையன், பாண்டியன் இனக்குழுக் குடிகள் சமூக ரீதியில் ஒடுக்கப்படுகிறார்கள். பொதுவெளியில் வைத்துச் சமணத் துறவிகள் கழுவேற்றப்படுகிறார்கள். சோழர்களால் செல்வாக்கும், சொல்வாக்கும், செல்வமும் பெற்ற பார்ப்பனர்கள் மதப் போருக்கு அழைத்து வாதங்களால் சமணர்களை வீழ்த்துவதுடன் அவர்களை மத நிந்தனைக்குள்ளாக்கி கழுவேற்றுகிறார்கள். சோழர்கால பார்ப்பனர் ஆதிக்கம் சமூகத்தில் மேல், கீழ் குடிகளை உருவாக்குகிறது. சமூகத்தில் உயர் பிரிவாக பார்ப்பனர் உருவாகின்றனர். சமண மதம் சமூகத்தின் விளிம்பு நிலையினர் மதமாக்கப்படுகிறது. சமணம் இழிவான போது, அதைப் பின்பற்றியவர்களும் இழிவாகினார்கள்.

அக்குடி இழிவாகியது. அம் மனிதர்கள் இழிவானார்கள். முத்தன் பள்ளம் இழிவானது.

வரலாறு, சைவமதச் செல்வாக்குச் சமண, புத்த மதங்களை இழிவாக்கிச் சென்றது மட்டுமல்லாது. பின் வந்த காலங்கள் எல்லாம் அக்குடிகளை இழிவாகவே வைத்திருக்கச் செய்தது. மன்னராட்சிக் காலம் தொடர்ந்து மக்கள் ஆட்சிக் காலம் வரை சைவத்தின், பார்ப்பனியத்தின் செல்வாக்கு, ஒரு தொகுதி மக்களை விளிம்பிலேயே வைத்திருக்கிறது. சமண, பவுத்த மதங்களின் விடுதலைபேசும் அறத்தின் குரலை மக்களாட்சிக் காலத்திலும் தொடர்ந்து சிறை வைத்திருப்பதைத்தான் நாவல் உள்ளார்ந்த மனசாட்சியாக ஒலிக்கிறது.

மேலோட்டமாகப் பார்க்கும் போது போருக்குப் பிந்தைய ஒரு நாடு எதிரிநாட்டின் வசமாகப் போகும் போது ஏற்படும் துயரம் ஒரு பக்கம் என்றால் அந்நாட்டுக் குடிகள் சமூக, பொருளாதார நிலைகள் ஒரு பக்கம் முற்றாக அழித்தொழிக்கப்படுகின்றன. சீர்குலைக்கப்படுகின்றன. மேலாக அக்குடிகளின் சமயம், பண்பாட்டை அரச அதிகாரவர்க்கம் ஏற்றாலும், அதன் பின்னிருக்கும் ஆதிக்கவாதிகளும், மதவாதிகளும் விடுவதில்லை. அதைத்தான் முத்தன் பள்ள வரலாற்றிலும் பார்க்கிறோம். ஓர் அரசு மாறும்போது வெறும் அரசாக மட்டும் மாறுவதில்லை. மன்னன் மட்டும் மாறுவதில்லை. மகுடம் மட்டும் மாறுவதில்லை. ஓர் குடிமைச் சமூகமே மாற்றப்படுகிறது. கைப்பற்றப்பட்ட நாடு மட்டுமல்ல, மன்னன் மட்டுமல்ல அவனது குடிகளும் அடிமையாக்கப் படுகின்றன. அவர்களது மதமும் அடிமையாக்கப் படுகிறது.

சோழர்கள் காலம் சைவமதத்தின் எழுச்சி மிக்க காலம் என்பதை நமக்குத் திரும்பத்திரும்பப் பாட நூல்கள் விதந்தோதுவதைப் பார்க்கிறோம், கற்கிறோம். ஆனால் அந்த எழுச்சியின் கீழ் நசுக்கப்பட்ட மதம், அதைப் பின்பற்றிய மக்களின் நிலை பற்றி நாம் படிக்கத் தவறிவிடுகிறோம். சொல்லாமல் விடப்படும் வரலாறுகள் வரலாற்றின் இருண்ட பக்கங்களாகி விடுகின்றன. முத்தன்பள்ளம் இருண்ட வரலாற்றின் நவீன பக்க மாகும்.

சோழர்கள், பார்ப்பனர்களுக்கு உபரி நிலங்களைத் தானமாக வழங்குகின்றனர். அவை அகரங்களாகவும், சதூர்வேதி மங்களங்களாகவும் மாறுகின்றன. நீதி வழங்கும் இடங்களைப் பார்ப்பனர்கள் படிப்படியாகப் பெற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் மதத்திலிருந்து நீதியை உருவாக்குபவர்களாகிறார்கள். நான்கு வர்ணங் களைச் சோழர்காலச் சமூகம் வளர்த்தெடுக்கிறது.

முத்தரையர் - கள்ளர் உறவு முறையை, உயர்வு, தாழ்வாகச் சைவமே பிரிக்கிறது. வரையறுக்கிறது. விசயாலய சோழ வழி சைவம், சமணமதம் சார்ந்த முத்தரையரை சைவத்திற்குக் கீழாக்குகிறது. கடவுள் மறுப்பும், சடங்கு எதிர்ப்பும் கொண்ட முத்தரையர் இனக்குழுவை, முத்தன் பள்ளத்தில் இறுதியில் தள்ளுகிறது. சைவசமயம் பரவும் காலத்தில் அப்பூதியடிகள், திருநாவுக்கரசர் மீது கொண்ட பாசத்தையும், சைவமதத்தின் மீதான பிடிப்பையும் எள்ளலுடன் நாவல் விவரிப்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. "எனக்கு அப்பூதியாரை நினைக்க கோபம்தான் வந்தது. பிறகு என்னவாம்! பார்க்க, பயன்படுத்த, கூப்பிட என அனைத்திற்கும் ஒரே பெயரைச் சூட்டும் கலாசாரத்தைத் தொடங்கி வைத்தவன் அவன்தான் இல்லையா?" (பக்-103) நாவலாசிரியரின் நியாயமான கோபத்தைத்தான் இன்றைய அரசியல் கலாசாரத்திலும், 'பிளக்ஸ்' 'உருப் பெருக்கிப்' பதாகைகளிலும் பொருத்திப் பார்க்கிறோம். அப்பூதியடிகள், நவீன பிளக்ஸ் போர்டின் வரலாற்று வடிவம் என்றால் மிகையில்லை.

நாவல் தொண்டைமான் ஆட்சிக்கால நிலையை விளக்கிச் செல்கிறது. சாதியச் சமூகமாக இருக்கும் தொண்டை மண்டலத்தில் சாதியின் காரணமாக வழங்கப்படும் தண்டனையும், காதலுக்காக தன் மகுடத்தையே துறக்கும் மன்னனையும் பிறிதொன்றாகப் பார்க்கிறோம். ஒன்றுக்கொன்று வலையாகப் பின்னிச் செல்லும் நாவல், தொண்டைமானுக்கும், பாட்டனுக்கும் உள்ள உறவை ஆழ்ந்து சொல்கிறது. இரு இனங்களின் இணக்கத்தைச் சொல்கிறது. முத்தன் பள்ளம் அரசதி காரத்தின் வஞ்சகத்தில் உருவாகிறது. மன்னர் காலம் தொடங்கி மக்களாட்சிக் காலம் வரை முத்தன் பள்ள வரலாறு அதிகாரத் துரோகத்தில் அமிழ்ந்து கிடக்கிறது. தொண்டைமான் கொடுத்தச் செப்புப்பட்டயம் அதிகார வர்க்கத்தின் பட்டயமாவது போல முத்தன் பள்ளம் நவீன அதிகாரவர்க்கத்தின் பட்டாவாகிவிடும் சாபம் கவிழ்ந்த வரலாற்றை சேறும், சகதியுமாக முன் வைக்கிறார் நாவலாசிரியர் அண்டனூர் சுரா.

பள்ளம் என்பது மேட்டின் சதி. மேடு உயர்வதற்கு பள்ளம் அவசியம். முத்தன் பள்ளம் போன்ற பள்ளங்கள் அவசியம். மேட்டுக்குடி வரலாற்றின் பள்ளமாக முத்தன் பள்ளம் இருக்கிறது. வாழ்வில் பள்ளம் விழுந்த மக்கள் எதிர் நீச்சலிடுமிடமாக முத்தன் பள்ளத்தில் தேங்கியுள்ள நீர் இருக்கிறது. நீரும், துயரமும் சூழ்ந்த முத்தன் பள்ளத்தை நாவலாசிரியர் காட்சிப் படுத்தும்போது நவீன சமூகம் வெட்கப்பட வேண்டியுள்ளது. விண்வெளிக்கு கோள்களையும், எரிகனையும் அனுப்பும் முன்னேறிய சமூகத்தில், முத்தன் பள்ளத்தின் சமூக மதிப்புத்தான் என்ன? விழுமியம்தான் என்ன? எரிகனைகளும், கோள்களும் தேவைப்படும் அளவிற்கு முத்தன் பள்ளம் சக மனிதனுக்குத் தேவைப்படவில்லையா? ஆனால் தேவைப்படுகிறது. இந்த நாட்டில் காக்கைகள்

தேர்தலில் வாக்களிக்கலாம் என்று வந்துவிட்டால் எப்படி அதற்கென்றொரு மதிப்பு வருமோ அந்தள விற்குத் தேர்தல் காலத்தில் முத்தன் பள்ளம் திடீர் மேடாகி விடுகிறது. ராமன் காலடிபட்ட அகலிகையாகி விடுகிறது. அயோத்தியாகிவிடுகிறது.

முத்தன் பள்ளம் என்பது வரலாற்றுத் துயரம் மட்டுமல்ல. வரலாற்று சாபமும் கூட. சாதியும், மதமும் ஊடாக நிலப்பிரபுத்துவக் காலம், மக்களாட்சிக் காலம் என்று மன்னராட்சி நீள்வதைத்தான் முத்தன் பள்ளம் சாட்சியாக நின்று சொல்லிக் கொண்டுள்ளது. மனிதர்கள் வசிக்க வக்கற்ற, போகிமான் பூச்சி கூட மூச்சு விடச் சிரமப்படும் முத்தன் பள்ளம் வரலாற்றில், ஒரு மக்கள் சமூகத்தின் மீது திணிக்கப்பட்ட ஒரு கூட்டுத் தண்டனையாகவே இருக்கிறது.

சமணத்தின் மீது சைவத்தின் நவீன கழுமரமாக முத்தன் பள்ளம் இருக்கிறது. நவீன மன்னர்களின், அப்பூதியடிகளின் பதாகைகளை முத்தன் பள்ளத்தின் குடிகள் கூரைகளாகக் கொண்டிருக்கிறார்கள். அரை குறை ஆடையணிந்த நடிகையின் பதாகைப் பெண் களின் குளியலறை 'மறைப்பாக' இருக்கிறது. முத்தன் பள்ளத்தின் நிர்வாணத்தை மறைக்கும் இடையாடை யாகப் பதாகைகளே இருக்கின்றன. நவீன வரலாற்றின் பெருமிதம், ஆணவம், அலட்சியம், அரசியல், அசிங்கம் என பதாகையின் வண்ணங்கள் அவர்களது நிர்வாணத்தின் மீது நிரந்தரமாகப் பூசப்பட்டுள்ளது.

தூர்க்கப்பட்டக் கீழடி போன்ற வரலாற்றைத் தேடிப் பிடித்துத் தோண்டுவதைப் போல, விவாதிப்பதைப் போல, வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்படுவதைப் போலத் தூர்ந்தும், தூர்க்கப்படாத முத்தன் பள்ளத்தைப் பற்றி பேசுவது என்பதும் பின்னரான காலத்தின் கீழடியை உருவாக்காதிருக்கும். முத்தன் பள்ளம் நிகழ்காலத்தின் கீழடி மட்டுமல்ல. எதிர்காலத்தின் கீழடியும் கூட.

போகிமான் பூச்சியைத் தேடிப்போகும் வாசகன் கண்டடைவது முத்தன் பள்ளம் என்ற நரகத்தை மட்டு மல்ல. அது ஒளிந்திருக்கும் இடமும்தான். போகிமான் பூச்சி ஒளிந்திருப்பது இறுதியில், மனிதர்களின், அதிகாரத்தின், ஆணவத்தின், ஆணாதிக்கத்தின் குறி யீட்டின் மீது. ஆம் குறியின் மீது. வாழ்ந்தடங்கி விட்டக் குறியின் மீது. வரலாற்றுக் காலத்தின், நவீன காலத்தின் ஆண்டடங்கிய குறியின் மீது. சமூகத்தின் மீது, அறிவியலின் மீது, அறவியலின் மீது. போகிமான் பூச்சியா? அதிகாரத்தின் குறியா? என்ற குழப்பம் வாசகனுக்கு உண்டாகும் போது குழந்தைகள் சிரிக் கிறார்கள். ஆம், குழந்தைகளால் மட்டும்தான் அப்படி சிரிக்க முடியும். நாமும் சிரிக்க முடிந்தால்!

முத்தன் பள்ளம் - போகிமான் கண்டுபிடித்த வரலாற்றின் நவீன வடு! ●

## வாழ்த்துகள்




இந்திய அரசின் உயர்நிலை இலக்கிய அமைப்பான சாகித்திய அகாதெமியின் தமிழ்மொழி ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக முனைவர் பா.ஆனந்தகுமார் (பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ், இந்திய மொழிகள் மற்றும் கிராமியக்கலைகள் பள்ளி, காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்) அவர்கள் ஐந்தாண்டுக் காலகட்டத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். பேராசிரியர் பா.ஆனந்தகுமார் அவர்களுக்கு 'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்' வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

# நியூ செஞ்சுரியின் ரஷ்ய இலக்கிய நூல்கள்




## பல கோடி வருடங்களுக்கு முன்னர்

தொல்லுயிரியலைப் பற்றிய படப் புத்தகம்

**இரினா யாகோவ்லெவா, மொழிபெயர்ப்பாளர் நா.தர்மராஜன்**

சோவியத் அறிஞர் இரினா யாகோவ்லெவா எழுதியுள்ள இந்நூல் உலக உயிர் வரலாறு குறித்து ஆதாரப்பூர்வமாகவும் சுவையாகவும் எளியமுறையில் விளங்கும்படியும் எழுதப்பட்டுள்ளது.

## குழந்தைகளும் குட்டிகளும்

**ஓல்கா பெரோவ்ஸ்கயா,** தமிழில்: **ருக்மணி**

சோவியத் அறிஞர் இரினா யாகோவ்லெவா எழுதியுள்ள இந்நூல் உலக உயிர் வரலாறு குறித்து ஆதாரப்பூர்வமாகவும் சுவையாகவும் எளியமுறையில் விளங்கும்படியும் எழுதப்பட்டுள்ளது.







## மே தின வரலாறு


**அலெக்ஸாந்தர் டிராச்டென்பர்க்,** தமிழில்: **ரகுநாதன்**

மே தின வரலாறு என்பது மேலை உலகில் உழைக்கும் மக்களிடம் எவ்வாறு விழிப்புணர்வு கரு கொண்டது என்பதை விளக்கும் வரலாறு.

## அரசியல்

**அரிஸ்டாட்டில்,** தமிழில்: **சி.எஸ்.சுப்பிரமணியம்**

அரிஸ்டாட்டிலின் அரசியல் நூலுக்கு ஆங்கிலத்தில் அறுபது மொழியாக்கங்கள் வெளிவந்துள்ளன. அத்தனை ஆங்கில மொழியாக்கங்களையும் ஒப்புவைத்து, பத்தாண்டு கால உழைப்பில் செய்யப்பட்ட மொழியாக்கம் இது.







## நெஞ்சை ஈர்க்கும் வானவியல்

**வி.கொமரோவ்,** தமிழாக்கம்: **அ.நடராஜன்**

வானவியல் புதிர்கள் இன்னமும் முழுமையாகத் தீர்க்கப்பட்டுவிடாத நிலையில், வானவியல் அறிவுத்துறை நோக்கில் போதுமான அளவிற்கு மெய்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படும் உண்மைகளை விரிவாக விளக்கிச் செல்கிறது இந்நூல்.



# சாகித்ய அகடமியின் குழந்தை இலக்கியத் தொகுப்புகள் இரண்டு

சுகுமாரன்

**ஒ**ரு மொழியின் வளர்ச்சியில் இலக்கியத்தின் பங்கு அளப்பரியது. கவிதை, பாடல், நாவல், சிறுகதை, கட்டுரை, நாடகம், குழந்தை இலக்கியம் என்று இலக்கியம் பல பிரிவுகளைக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு பிரிவின் வளர்ச்சியையும் போக்குகளையும் அறிந்து கொள்வதற்கு தொகுப்பு நூல்களே பெரிதும் உதவுகிறது எனலாம்.

இளம் படைப்பாளிகளுக்கும் ஆய்வு செய்பவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் தொகுப்பு நூல்கள் வரப்பிரசாதமாகும்.

தமிழில் குழந்தைப் பாடல்களுக்கான தொகுப்பு நூல்கள் மிகக் குறைவாகவே வந்துள்ளன.


கே.என். சிவராஜ பிள்ளை, கவிமணி, பண்டித முத்துச்சாமி பிள்ளை ஆகியோர் இணைந்து 'சிறு பாமாலை' என்ற பெயரில் முதல் குழந்தைப் பாடல் தொகுதியினை வெளியிட்டனர்.

1935-ல் வெளிவந்த 'பிள்ளைப் பாட்டு' இரண்டாவது குழந்தைப் பாடல் தொகுதியாகும். இது வெளி வந்தது இலங்கையில்,

1970-ல் மூன்றாவது குழந்தைப் பாடல் தொகுதி வந்தது, நூலின் பெயர் 'முத்துக் குவியல்.' தொகுத்தவர் பூவண்ணன்.

சுமார் 42 ஆண்டுகளுக்குப் பிறகு 2012-ல் சாகித்ய அகடமி வெளியீடாக 'குழந்தைப் பாடல்கள்' தொகுப்பு வந்துள்ளது. பூவண்ணன் தான் இதையும் தொகுத்துள்ளார்.

பழைய மூன்று தொகுப்புகளும் இப்போது கிடைக்கிறதா என்பது தெரியவில்லை. ஆனால் அக்குறையைப் போக்கும் விதமாக, சாகித்ய அகடமியின் 'குழந்தைப் பாடல்கள்' தொகுப்பு பெரிய அளவில் 200 பக்கங்கள், 274 பாடல்கள் என்று வந்துள்ளது, நிச்சயம் தமிழ்க் குழந்தை இலக்கியத்திற்கு பலம் சேர்க்கும்.




இத்தொகுப்பு புதிய படைப்பாளிகளுக்கு ஒரு பாட நூலாகவே, வழிகாட்டி நூலாகவே அமையும் என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் குழந்தைகளுக்குப் பாட்டு எழுதுவது என்பது கடினமான கலை. இதனை கவிஞர் சௌந்தர கைலாசம் இவ்வாறு கூறுகிறார்,

'காட்டிலும் யானையினைக்
கையிலுறும் பானைக்குள்
ஓட்டுங் கலையும் ஒரு கலையா?
எழுத்துக் கூட்டுஞ் சிறிய குழந்தைக்குப்
பாட்டெழுதிக் காட்டும் கலையே கலை!'

சிறு குழந்தைகளுக்குப் பாட்டு எழுதுவது என்பது பானைக்குள் யானையை புகச் செய்வது போல் கடினமானதாகும். அக் கடினக் கலையை கற்றுத் தரும் வகையில் அமைந்துள்ளது 'குழந்தைப் பாடல்கள்' தொகுப்பு நூல்.

இத்தொகுதியில் கவிமணி முதல் இன்றைய கவிஞர்கள் வரை எழுதியுள்ள, பல்வேறு போக்குகளையும் பண்புகளையும் வெளிப்படுத்தும் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இக் கதம்ப மாலையில்தான் எத்தனை எத்தனை வகையான வண்ண மலர்கள்...

மகாகவி பாரதியின் 'பாப்பா பாட்டு', கவிமணியின் 'தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு', பாரதிதாசனின் 'பூனை வந்தது பூனை - இனிப் போனது தயிர்ப்பானை', அழ. வள்ளியப்பாவின் 'வட்டமான தட்டு, தட்டு நிறைய லட்டு' தமிழ் ஒளியின் 'பாடம் படியா ஒரு பையன்', மயிலை சிவ முத்துவின் 'மாமி சுட்ட பிட்டு', வாணிதாசனின் 'பாலுக்குள்ளே வெண்ணெய் உண்டாம் உண்மை', கா. நமச்சிவாய முதலியாரின் 'அ அதுவோர் அத்திப்பழம், ஆ என்பவன் ஆசைப்பட்டான்', தம்பி சீனிவாசனின் 'அன்றொரு நாள் ஆடுகையில் நான் இழந்த பந்து', பெ.நா. அப்புஸ்வாமியின் 'டம்மாரம் அடி டம்மாரம், டம் டம் அடி டமாரம்' செல்ல கணபதியின் 'கொட்டும் மழையின் சத்தம் கேட்டுக் கொர் கொர் என்று தவளையார்', பெரியசாமி தூரனின் 'தாடி நீண்ட தாத்தா, தடவி ஒரு நாள் பார்த்தார்', பூவண்ணனின் 'எத்தனை பட்டை வயிரத்திலே' ஆகிய பிரபலங்களின் பிரபல பாடல்கள் இத்தொகுப்பில் இடம் பெற்று உள்ளன.

இது தவிர, குழந்தை இலக்கியத்திற்கே உரிய பண்புகளான எளிமை, திரும்பக் கூறல், பேச்சு வழக்கு, வினா - விடைக் குறிப்பு, விடுகதைத் தன்மை, நாப்பயிற்சி, வேடிக்கை இனிமை, அறிவுரை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பாடல்கள் கவனமாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

எளிமைக்கு உதாரணமான குயிலனின் பாடல் இது:

"சின்னச் சின்னச் சிட்டு
சிங்காரச் சிட்டு
நெல்லைப் போலே மூக்கு
நேர்த்தியான நாக்கு
வட்ட வட்ட கண்கள்
பட்டு போலே மேனி
வானத்திலே பறக்கும்
வந்து சற்றே இருக்கும்
காட்டுக்கிரை தேடக்
காற்றைப் போலப் பறக்கும்
வீட்டுக் கூரை மேலே
கூட்டில் வந்து படுக்கும்
சிட்டைப் போலேப் பறந்து
சிறுவர் வாழ வேண்டும்
சற்றும் சோம்பலின்றித்
தாவித் திரிய வேண்டும்."

திரும்பக் கூறல் என்பது குழந்தைப் பாடலுக்கு ஒரு குணம், குற்றமன்று.

'பொய் சொல்ல மாட்டோம்!
பொய் சொல்ல மாட்டோம்!
..............................
..............................
ஆயிரம் வந்தாலும்
ஆயிரம் போனாலும்
பொய் சொல்ல மாட்டோம்!
பொய் சொல்ல மாட்டோம்!'

என்ற மயிலை சிவமுத்துவின் பாடல் நல்ல எடுத்துக்காட்டு.

வேடிக்கை, விநோதம் என்பவற்றை குழந்தைகள் பெரிதும் விரும்புகின்றனர். அது சொல்

விளையாட்டாக அமைவது மொழியைக் கற்கவும் உதவுகிறது. இரட்டைக் கிளவியைக் கொண்டு வே. இரா. சிவஞான வள்ளல் எழுதிய 'பள்ளிக்குப் போனாள்' என்ற பாடல் தொகுப்பில் உள்ளது.

பாடலைப் பார்ப்போம்:

'கர கர வென்று
கதிரவன் வரவே
தக தக வென்று
வானம் வெளுத்தது.
சர சர வென்று
சாரதா எழுந்தாள்.
தட தட வென்று
தண்ணீர் இறைத்தாள்.
மட மட வென்று
குளித்து முடிந்தாள்.
சிடு சிடுப்பின்றித்
தலையை வாரிக்
கம கம வென்று
கடி மலர் எடுத்துத்
தள தள வென்று
தலையில் முடித்தாள்.
கண கண வென்று
மணியொலி எழவே
குடு குடு வென்று
பள்ளிக்குப் போனாள்.

வினா - விடை வடிவில் குழந்தைப் பாடல் அமைவது ஒரு வகை. கவிஞர் மன்ற வாணனின் 'எங்கே போகிறாய்?' பாடலில் விடைகள் தான் குழந்தைக்குரியதாக இல்லை. பாடல் இதோ;

'அன்புத் தங்கை, அறிவுத் தங்கை
எங்கே போகிறாய்?
இன்பம் தழைக்கும் இனிய உலகைப்
படைக்கப் போகிறேன்.
இன்பம் தழைக்க இன்னல் விலக்க
என்ன செய்குவாய்?
துன்பச் சாதிச் சமயப் பூசல்
ஒழிக்கப் போகிறேன்.
சாதிச் சமயப் பூசல் ஒழிய
என்ன செய்குவாய்?
நீதியோடு நிதியும் பெருகச்
சட்டம் இயற்றுவேன்.
பேதம் ஒழியச் சட்டம் இயற்றி
என்ன செய்குவாய்?
நாதம் ஓங்கும் நல்ல தமிழைப்
படித்து மகிழ்வேன்!

குழந்தை இலக்கியம் என்றாலே அறிவுரை கூறுவது என்று தமிழில் புரிந்து கொள்ளப்பட்டு உள்ளது. குழந்தைப் பாடல்களில் இப்போக்கு தூக்கலாகவே இருக்கிறது.

இத் தொகுப்பில் முதல் பாடலாக அமைந் துள்ள 'எல்லாம் ஒன்றாய்த் தெரிகிறது' கவி மாமணி இளையவன் எழுதியது. சிந்து நடையில் பாடக் கூடிய சந்தத்தில் அமைந்த அருமையான பாடலின் அறிவுரை குழந்தைகளுக்குரியதல்ல. பாடல் இது!

'மாடியிலிருந்து பார்க்கின்றேன்
மாதா கோவில் தெரிகிறது!
கோடியில் என்ன தெரிகிறது?
கோவில் கோபுரம் தெரிகிறது!
இங்கே என்ன பார்க்கின்றேன்?
இஸ்லாம் பள்ளி தெரிகிறது!
எங்கள் வீட்டு மாடியிலே
எல்லாம் ஒன்றாய்த் தெரிகிறது!'

வாய்மொழித் தன்மைக்கு எடுத்துக்காட்டாக இத் தொகுப்பில் நாடோடிப் பாடல்களான 'ஆக்காட்டி, ஆக்காட்டி எங்கெங்கே முட்டை வைத்தாய்?' 'பச்சைக் கிளியே! வா, வா, பாலும் சோறும் உண்ண வா' என்பவை இடம் பெற்றுள்ளன.

தொகுப்பில் மழலைப் பாடல்கள் இடம் பெறாதது ஏனென்று தெரியவில்லை. மழலைப் பாடல்களுக்கென்று ஒரு தொகுப்பு தமிழில் இது வரை வரவில்லை. இக்குறை வருங்காலத்திலாவது போக்கப்பட வேண்டும்.

இத்தொகுப்பிலுள்ள ஒரு முக்கிய கவனக் குறைவை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அடுத்த பதிப்பில் திருத்திக் கொள்வதற்காகவே. நிறைய பாடல்கள் மீண்டும் மீண்டும் இடம் பெற்றுள்ளன. அழ. வள்ளியப்பாவின் 'லட்டு' பாடல், சிவஞான வள்ளலின் 'பள்ளிக்குப் போனாள்' ஆகியன மூன்று முறை வந்துள்ளன. இன்னும் 12 பாடல்கள் இரண்டு முறை அச்சிடப்பட்டுள்ளன.

'குழந்தைப் பாடல்கள்' தொகுப்பினைத் தொடர்ந்து 'சிறுவர் கதைக் களஞ்சியம்' என்ற பெயரில் ஒரு கதைத் தொகுப்பினை வெளியிட்டு தமிழ்க் குழந்தை இலக்கியத்திற்கு உரம் சேர்த் திருக்கிறது சாகித்ய அகடமி. தமிழ்க் குழந்தை இலக்கியத்தில் அனுபவமும் ஆர்வமும் கொண்ட பேராசிரியர்கள் இரா. காமராசுவும், கிருங்கை சேதுபதியும் தொகுத்தளித்துள்ளனர்.

இதற்கு முன் சிறுவர் இதழான கண்ணனில் வந்த கதைகள் தொகுப்புகளாக வந்துள்ளன. இது தவிர வேறு வரவு இருப்பதாகத் தெரியவில்லை. எனினும் சாகித்ய அகடமியின் கதைக் களஞ்சியம்




முக்கியத்துவம் வாய்ந்தது. மகாகவி பாரதி முதல் அண்மையில் எழுதிய மாணவர் மருதுவின் படைப்பு வரை தொகுக்கப்பட்டுள்ளதே அந்த முக்கியத்துவம்.

தமிழ்க் குழந்தை இலக்கியத்தில் கதை உலகம் ஒரு கடல். அதில் தொகுப்பாளர்கள் முத்துக் குளித்திருக்கிறார்கள். எதார்த்தம், கற்பனை, புனைவு, குழந்தை மனம், நகைச்சுவை உணர்வு, வேடிக்கை, குறிக்கோள்கள், அறிவுரைகள், புதிய உத்திகள், புராண, இதிகாச, நாட்டுப்புறப் பண்புகள் என்று சிறுவர் கதை உலகின் பல்வேறு போக்கு களை பிரதிநிதித்துவப்படுத்தும் படைப்புகளைத் தேடித் தேடித் தொகுத்திருக்கிறார்கள். அவர் களுக்குப் பாராட்டு உரித்தாகுக!

இத்தொகுப்பில் இடம் பெற்ற கதைகளைத் தேர்ந்தெடுப்பதற்கு தொகுப்பாளர்கள் கடைப் பிடித்த அளவுகோலையும் சொல்லியுள்ளார்கள். 'பெரிதும் அறிவுரை கூறுதலையே நோக்கமாகக் கொண்ட கதைகள் மலிந்திருக்கும் தமிழ்ச் சூழலில் முடிந்த மட்டிலும் அது கடந்து குழந்தை உலக உணர்வுகளைச் சித்தரிக்கும் கதைகளைத் தேடித் தொகுத்திருக்கிறோம்.' 50 கதைகள் கொண்ட இத்தொகுப்பில் பெரும்பாலான கதைகள் இவ் அளவுகோலின் படியே அமைந்துள்ளது என்பது உண்மை. இத்தொகுப்பின் வெற்றிக்கும் அதுவே காரணம்.

'நாட்டு எலியும் நகரத்து எலியும்' ஒரு நாட்டுப்புறக் கதை. எழுதியவர் மறைமலையடிகள். தூய தமிழில் இக் கதையை வாசிக்கும் நல்வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

பிரபல எழுத்தாளர் தி.ஜ.ர. எழுதியுள்ள 'மந்திர அடுப்பு' குழந்தைகளின் மனதை கொள்ளை கொள்ளும் கதை. ராஜா, ராணி, இளவரசன், அரக்கன் இவர்கள் தான் பாத்திரங்கள். ஆனால் இந்த ராஜா ராணி கதையில் ரேடியோ வருகிறது. ஏரோப்ளேன் வருகிறது. இந்த விநோதத்தைத் தான் குழந்தைகள் விரும்புகிறார்கள்.

டாக்டர் பூவண்ணனின் 'நந்துவின் பந்து' கதையில், நந்துவின் பாத்திரப் படைப்பு வலிமை யானது. தனது பெருந்தன்மையான செயலின் மூலம் தாத்தாவிடம் மனமாற்றத்தை அவன் ஏற்படுத்தி விடுவதை நயமாகச் சொல்லும் கதை.

ரேவதியின் உமுஜாசே. கதைத் தலைப்பே அபாரம். இதுவும் கதை சொல்லுவதற்கு ஒரு உத்தி தானே!

தேவபாரதியின் தேவதை தந்த வரம், சுயநலத்தை விட பொது நலனே சிறந்தது என்பதை அறிவுரை, பிரசங்கம் எதுவும் இல்லாமல் சொல்லி விடும் கதை.

வரலாற்று நாவலாசிரியரான கௌதம நீலாம்பரன் 'உழைத்த பணம்' என்கிற கதையில் ஒரு மன்னர் பாத்திரத்தை புனைந்து உழைப்பின் மேன்மையை சொல்லி விடுகிறார்.

நூல் தொகுப்பாளரில் ஒருவரான கிருங்கை சேதுபதியின் 'பரிசுத் திருநாள்' ஒரு நல்லாசிரியைப் பற்றிய கதை. நடை இன்னும் குழந்தைகளுக் குரியதாக இருக்க வேண்டும்.

இத்தொகுப்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரின் படைப்புகள் இடம் பெற்றுள்ளது. குறிஞ்சிச் செல்வர் கொ.மா. கோதண்டம், அவரின் துணைவியார் ராஜேஸ்வரி கோதண்டம், மைந்தன் கொமா.கோ. இளங்கோ. தமிழ்க் குழந்தை இலக்கியத் திற்கு ஒரு குடும்பமே தொண்டு செய்வதைப் பாராட்ட வேண்டும்.

அதே போல் கவிஞர் மலையமான், அவரின் துணைவியார் முனைவர் சரளா இராசகோபாலன் ஆகியோரின் கதைகளும் இடம் பெற்றுள்ளது.

இதில் இடம் பெற்ற கதைகளை விட, இடம் பெறாத கதைகள் நிறைய இருக்கின்றன. அனைத் தையும் தொகுத்து வெளியிட ஒரு தொகுப்பு போதாது என்று தன்னடக்கத்துடன் ஒப்புக் கொண்டுள்ள தொகுப்பாளர்களின் கருத்து கவனிக்கத்தக்கது. மேலும் பல தொகுப்புகளுக்குத் தேவை உள்ளது என்பதையே அவர்கள் கூறி யுள்ளார்கள்.

தமிழ்க் குழந்தை இலக்கியத்தில் சாகித்ய அகடமியின் இரண்டு தொகுப்புகளும் சிறந்த முயற்சிகளாகக் கருதப்படும் என்பதில் சந்தேக மில்லை.

●

# பாவேந்தர் படைப்புகளில் திராவிடத்தின் வெளிப்பாடு

முனைவர் ஜே. ஜெகத்ரட்சகன்



திராவிடத்தின் மீதான அடுக்கடுக்கான கருத்தாடல்கள், வாதம், எதிர்வாதம் போன்றவைகள் எங்கும் பரவலாக நம் காதுகளில் விழுகின்றன. அதனுடன் திராவிடம் சாதித்தது என்ன? என்ற வினாவும் அண்மைக் காலங்களில் தமிழகத்தில் ஒலிக்கின்றன. திராவிடத்தை மறுவாசிப்புக்குள்ளாக்கும் போக்கும் ஆங்காங்கே தென்படுகின்றன.

திராவிடம் சாதித்தது என்ன? என்ற வினாவை எழுப்புவோர் அதன் சாதனைகள் என்ன என்பதை நன்கறிந்தே முன்வைக்கின்றனர். திராவிடச் சாதனை என்பது மேம்போக்காக வெளியே தெரிகின்ற மாற்ற மன்று. அது மக்களின் மனங்களில் உள்ளார்ந்து ஊடுருவி அழுத்தமான விளைவை ஏற்படுத்தியவையாகும். சமூக நீதியில் பிற மாநிலங்களை விடவும் தமிழகம் ஒருபடி முன்னேறி நிற்பதும் திராவிடச் சாதனையே. இந்தியாவின் பிற மாநிலங்களில், குறிப்பாக, வட மாநிலங்களில் அடிக்கடி நிகழும் மதக் கலவரங்கள் தமிழ் மண்ணில் நிகழாததற்குத் திராவிட இயக்கச் சிந்தனைகளே காரணமாகும். ஆழ வேரூன்றிய இச்சிந்தனைகள் நாளடைவில் மக்களைப் பக்குவப்படுத்தி, அவை தமிழர்களின் வாழ்வியல் நெறிமுறையாக ஒன்றிவிட்டமையால், அதன் கெட்டித் தன்மையில் நெகிழ்ச்சி ஏற்படாமல் இருந்து வருகின்றது. இம் மாபெரும் வரலாற்றுச் சாதனையை நிகழ்த்திய பெருமைக்கு உரியவர்களாகச் சிலரும் அதற்கு உறுதுணை நின்றவர்களாக மிக நீண்ட பட்டியலும் தமிழக வரலாற்றில் இடம்பெற்றுள்ளது (திராவிட இயக்கத் தூண்கள், திராவிட இயக்க வேர்கள் என்னும் தலைப்புகளில் க. திருநாவுக்கரசு எழுதிய நூல்களைக் கண்டுகொள்க).


மிக நீண்ட அந்தப் பட்டியல் பெரும்பாலும் அரசியல் சார்ந்த தலைவர்களை உள்ளடக்கியதாகவே உள்ளது. அந்தத் தலைவர் தம்முடைய கொள்கைகளைத் தங்களின் பேச்சாற்றல் வழியேயும், தீவிரமான போராட்டங்களை முன்னெடுத்ததின் மூலமாகவும் மக்களிடையே கொண்டு சேர்த்தனர். எனினும் பெரியார், அண்ணா, கலைஞர் போன்றோர் கருத்தாலும் தம்முடைய எழுத்துகளாலும் திராவிட இயக்கச் சிந்தனைகளை மக்கள் மன்றத்தில் எடுத்து வைத்தனர். ஆனால் இயக்கத்தின்பால் பற்றுகொண்டு, அதனைத் தம்முடைய படைப்புகளின் வழியே முன்வைத்த படைப்பாளர் பாவேந்தர் பாரதிதாசன் ஆவார். பொதுவாக, பாவேந்தரின் பாடல்களில் தமிழ், இயற்கை, காதல், பெண் விடுதலை ஆகியவை மேலோங்கி நிற்பதைக் காணமுடியும். மேலும் பிற கூறுகளும் இவர் படைப்புகளில் உண்டு. ஆனால் முதுமுனைவர் ச.சு. இளங்கோ அவர்கள் பாவேந்தரின் படைப்புகளில் திராவிட இயக்கக் கூறுகள் எவ்வெவ் வகையிலெல்லாம் படிந்துள்ளன என்பதை உய்த் துணர்ந்து அளித்திருப்பதே திராவிட இயக்கமும் பாவேந்தர் பாரதிதாசனும் என்னும் அரியநூலாகும். இந்நூல் 3 இயல்களில் 37 தலைப்புகளில் அமைந் துள்ளது.

படைப்பாளன் தேங்கி விடும் சிந்தனைக்கு உரியவனன்று. காலவோட்டத்தில் தானும் ஓடி, எதிர்வரும் இன்னல்களை இனங்கண்டு, அவற்றுக்கான தீர்வுகளை முன்வைத்து நகர்பவன். அந்த வகையில் பாவேந்தரிடம் சிந்தனைத் தேக்கம் துளியுமில்லை. எழுத்தின் சுதந்திரத்தை முழுமையாக அனுபவித் துள்ளார். ஆகவேதான், எதார்த்தத்தில் நின்று அவரால் படைக்க முடிந்துள்ளது. அறிவூட்டலை தம் படைப்பின் வழியே மேற்கொண்டார். அதற்குத் திராவிடச் சிந்தனை அடித்தளமாக இருந்துள்ளது என்பதை நிறுவுகிறார் இந்நூலாசிரியர். பொதுவாக, பாவேந்தரின் படைப்பு களை, அதில் மிளிரும் கருத்துகளை வியந்து பேசுவது எளிதாக நடைபெறும் ஒரு நிகழ்வு. இலக்கிய மேடைகள் பாவேந்தரின் கவிதைகளைத் தொடக்க மாகக் கூறிப் பேச்சைத் தொடங்குவதும் இயல்பு. ஆனால், இந்நூல் பாவேந்தரின் படைப்புகளில் தென் படுகின்ற கருத்துகளின் ஊற்றுக்கண்ணை அடையாளங் காட்ட முனைகிறது. அது இந்நூலின் தனித்துவ அடையாளமெனலாம்.

'திராவிட இயக்கப் பின்னணியில் பாரதிதாசன்' என்னும் முதல் தலைப்பில், திராவிட இயக்கம் உருவாவதற்கு முன், தமிழ்ச் சூழலில் என்னென்ன இயக்கங்கள் இருந்தன என்ற சுருக்கமான அறிமுகம் அளிக்கப்பட்டுள்ளது. 'பிரம்ம சமாஜம், பிரார்த்தனை சமாஜம், ஆரிய சமாஜம், இராமகிருட்டிண அவை' போன்ற இயக்கங்கள் குறித்த வரலாற்றுத் தகவல்கள் குறிப்பிடப்பெற்று, அவை சமூகத்தில் விளைவித்த தாக்கங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

திராவிட இயக்கப் பின்னணி என்னும் தலைப்பிற்கு மேலே சொல்லப்பட்ட இயக்கங்களின் வரலாறு எதற்கு? என்ற வினா இயல்பாகவே எழுகிறது. இந்த இயக்கங்களின் வரலாறு, செயல்பாடுகளை அறிந்து விட்டு, பின் திராவிட இயக்கத்தை அறியும்போதுதான் அதன் வீரியம் நமக்கு விளங்குகிறது. அதனால் ச.சு. இளங்கோ மிகுந்த நுட்பமுடன் இந்த இயக்கப் பின்னணியை முதல் பகுதியில் வழங்குகின்றார்.

இந்நூல் வெறுமனே பாவேந்தர் என்கிற பாவலனுக்கும் திராவிட இயக்கத்திற்குமான தொடர்பு




**திராவிட இயக்கமும்**
**பாவேந்தர் பாரதிதாசனும்**
**ச.சு.இளங்கோ**

*வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,*
*41- பி, சிட்கோ இண்ட்ஸ்ட்ரியல் எஸ்டேட்*
*அம்பத்தூர், சென்னை - 600 098.*
*தொலைபேசி எண்: 044 - 26359906*
**₹ *315/-***

களை அவரின் படைப்புகளின் வழியே சுட்டிச் செல்லும் பணியை மட்டும் செய்யவில்லை. மாறாக, திராவிட இயக்கம் இந்த மண்ணில் ஆற்றிய அளப்பரிய பணிகளைப் பட்டியலிடுகிறது. அதன் பின்னணியில் மிகத் தீவிரத் தன்மையுடன் இயங்கிய தலைவர்களைப் பட்டியலிடுகிறது. சமூக அமைப்புகளில் புரையோடிக் கிடந்த கசடுகளைத் தெளிவாக்குகிறது. இவ்வாறான புரிதல்களை ஏற்படுத்தியதன் மூலம் பாவேந்தரின் திராவிட இயக்கப் பார்வையும், அவர் எவ்வித மன உணர்வினால் உந்தப்பட்டு பாடியிருப்பார் என்கிற ஆழமான புரிதல் படிப்போரால் தானாகவே அறிந்து கொள்வதற்கு வாய்ப்பேற்படுத்துகிறது.

திராவிடத்தைத் தம் படைப்புகளில் தொடர்ந்து முன்னெடுத்து, தம்மையும் ஓர் இயக்கமாகவே வார்த்துக் கொண்டவர் பாவேந்தர் என்கிற புரிதலை உருவாக்குகிறது இந்நூல். பொதுநிலையில் பாரதிதாசன் பரம்பரை என்ற சொற்றொடர் பாரதிதாசன் கவிதைகள் குறித்துப் பேசப்படுகின்ற இலக்கிய மேடைகள் தோறும் உச்சரிக்கப்படுவது இயல்பு. அந்தக் கவிஞர் யார் யார் என்கிற தெளிவை, எந்த மேடைகளும் தெளிவாக்கு வதில்லை. ஆனால் பாவேந்தரின் கருத்துகளால் கவரப் பட்டு, உருவாக்கமடைந்த கவிஞர்களின் பட்டியலை அளித்து, கூடுதல் கவனம் பெறுகிறது இந்நூல்.

பாரதிதாசன் தாம் உண்மை என்று உணர்ந்தவற்றை ஏற்றுக்கொண்டதோடு, தம்முடைய முந்தைய முரணான கருத்துப் போக்கையும் மாற்றிக் கொண்டார். அவற்றைக் களைவதில் அவர் வீண்பிடிவாதம் கொள்ள வில்லை (ப-375-376) என்ற கருத்து பாவேந்தரின் இயல்பை நன்கு உணருவதற்கு வழியமைக்கிறது; அவர்மீது மரியாதையைக் கூட்டுகிறது.

பெரியாரியப் போராட்டம், வெற்றி என்பது சமூக மேம்பாட்டை உள்ளடக்கியது. சமுதாயத்திற்காகச் சிந்திப்பது போராடுவது என்கிற உள்ளடக்கத்தை நன்கு உணர்ந்து படைப்புகளில் வார்த்துக் கொடுத்தவர் பாவேந்தர். பாவேந்தரின் படைப்பு முறைகளை, கருத்து களை மேம்போக்காகக் காட்டாமல், ஒவ்வொன்றி னுள்ளும் ஆழ்ந்து சென்று எடுத்துரைப்பதில் மிகத் தீவிரத் தன்மையுடன் செயல்பட்டுள்ளார் இந்நூலாசிரியர். சான்றாக, பெண்ணுரிமை என்னும் தலைப்பில் தமிழகப் பெண்களின் நிலை, பெண்ணின் பெருமை, பெண் கல்வி, சொத்துரிமை, குழந்தை மனம், பொருந்தா மணம், கைம்பெண் மறுமணம், மணக்கொடை எதிர்ப்பு, பாரதிதாசனின் பெண் பாத்திரங்கள், கற்பு பற்றிய கருதுகோள், மணவிலக்கு (ப - 202 - 228) என்று பாவேந்தரின் படைப்புகளை முழுதுற ஆய்ந்து தம் கருத்துகளை ஆழமாக வைக்கிறார் நூலாசிரியர்.

பாவேந்தரின் படிநிலை வளர்ச்சியை ஆத்திக நிலை, தேசிய நிலை, சமுதாயச் சீர்திருத்த - இறை மறுப்பு நிலை, தனித்தமிழ் நிலை என்கிற நிலைகளில் வரிசைப்படுத்துகிறார் நூலாசிரியர். 'ஓர் அமாவாசை, ஆடிக் கிருத்திகை எவற்றையும் விடமாட்டார். ஈரத் துணியுடன் நோன்பு இருப்பார். தான் மட்டும் நோன்பு மேற்கொள்ளும் முறைகளில் கட்டுப்பாட்டோடு இருப்பதல்லாமல் தன் குடும்பத்தாரையும் இருக்கச் செய்வார். பிள்ளையார் பண்டிகைக்கு மண் எடுத்து வந்து தானே பிள்ளையார் செய்வார்' என்று பாவேந்தரின் இறை நம்பிக்கை நிலையை அவருடைய புதல்வர் மன்னர் மன்னனின் அனுபவ மொழியைக் கொண்டு சான்று களாகப் பதிவு செய்துள்ளார். ச.சு. இளங்கோ (ப-327) இந்நூலின் சிறப்புகளில் ஒன்றாக, அதன் தரவுகளைக் குறிப்பிடலாம். பாவேந்தரின் படைப்புகளின் வழியேயும், வரலாற்றுத் தரவுகளின் வழியேயும் தம்முடைய கருத்தை ஆணித்தரமாக நிறுவிக் கொண்டே செல்கிறார் ச.சு. இளங்கோ.

பாவேந்தருக்குத் திராவிட இயக்கத்தின்பால் நாட்டமும் அதன் கொள்கைகளில் ஈர்ப்பும் ஏற்படு வதற்கு முன்பு, தீவிர இறை நம்பிக்கையாளராக இருந்த மையை, அவருடைய படைப்புகளின் வழியே விளக்கி உள்ளார் ச.சு. இளங்கோ. பாவேந்தரின் பாத்துறை மாற்றத்திற்கு கவிஞர் பாரதியே காரணம் என்ற வழமையான, சான்றுகளற்ற கருத்துகளுக்குச் சரியான எதிர்வினையை அளிக்கிறது இந்நூல். பாவேந்தரின் பாத்துறை மாற்றம் எவ்வகையிலும் கவிஞர் பாரதி காரணமில்லை என்பதை சுப்பிரமணியர் துதியமுது என்ற படைப்பின் வழி நிரூபித்துக் காட்டுகிறார் ச.சு.இளங்கோ.


கடவுள் ஈடுபாட்டினால் பிறமொழிச் சொற்கள் கலந்துவிட்டன என்பதுடன், அக்காலத்தே அவர்க்கு மொழித் தூய்மையைப் பேண வேண்டும் என்ற எண்ணமும் இல்லாதிருந்தது என்று, பாவேந்தரின் மொழி ஆளுகையை விமரிசனப் போக்குடன் அணுகுகிறார் நூலாசிரியர் (ப-332). பாவேந்தர் மீது தனக்குப் பற்று இருக்கிறது என்பதற்காக வானளாவ அவரைப் புகழாமல் நடுநிலைமையோடு ஆய்ந்து, அவரின் எதிரெதிர் நிலை களையும் சீரோடு அளித்து, தன்னுடைய ஆய்வுக்கு நேர்மையானவராக விளங்குகிறார் ச.சு. இளங்கோ.

பாவேந்தரின் சிந்தனைகளை எளிதாகப் புலப் படுத்துவதில் இந்நூல் சிறந்து விளங்குகிறது. மேலும், பாவேந்தரின் படைப்புகளில் படிந்துள்ள முரண்களை சான்றுடன் விளக்கி, தாம் கொண்ட கொள்கைக்குப் பாவேந்தர் உண்மையுடன் நடந்துகொண்டதைப் போன்று, இந்நூலாசிரியர் தம்முடைய ஆய்வுக்கு உண்மையுடன் நடந்துள்ளார் என்பதற்கு, இந்நூலின் ஒவ்வொரு எழுத்துகளும் சாட்சிகளாகின்றன. ●

தமிழ் மக்களின் தனி நாகரிகத்தையும், நல்வாழ்வு நெறியையும், பழம் பெருமையையும், தமிழ் மொழியின் தனிச் சிறப்பையும், ஆற்றலையும், ஏற்றத்தையும் உலக மெங்கும் பரப்பிய ஒப்புயர்வற்ற சிறப்பு தனிநாயகம் அடிகளுக்கே உரியது! தமிழ் இலக்கியத்தின் தொன்மை யினையும் தன்னிகரற்ற தன்மையினையும் வெளிப் படுத்தியதோடு அதை உலகளாவிய நிலையில் பரப்ப முற்பட்டவர் தனிநாயகம் அடிகள்! 'தமிழியல்' எனும் ஆராய்ச்சித் துறையை உருவாக்கி வளர்த்து, அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளை நடத்தி, தமிழாராய்ச்சி யினை உலகளாவியதாக்கியவர்!

# தமிழ்த் தூதுவர் தனிநாயகம் அடிகள்

## பி. தயாளன்



யாழ்ப்பாணம் நெடுந்தீவைச் சார்ந்த ஊர்காவற் துறையைச் சேர்ந்த கரம்பன் என்னும் ஊரில் ஹென்றி ஸ்தானிஸ்லாஸ் கணபதிப்பிள்ளை-செசில் இராசம்மா பஸ்தியாம்பிள்ளை இணையரின் மூத்த மகனாக 02.08.1913 அன்று பிறந்தார். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சேவியர்.

ஊர்காவற்துறை புனித அந்தோணியர் கல்லூரியில் ஆரம்பக் கல்வி பயின்றார். பள்ளியிறுதி வகுப்பில் பயிலும் போது, லியோ டால்ஸ்டாய் எழுதிய 'புத்துயிர்ப்பு' (Resurrection) என்னும் நூலை அவர் படித்தார். “அந்நூலைப் படித்ததால்தான், என் வாழ்க்கையானது சமயச் சேவையாலும் கல்விச் சேவையாலும் உருவாகியது” எனக் குறிப்பிட்டுள்ளார்.

“நான் இவ்வுலகில் ஒருமுறைதான் வாழ முடியும். எனவே, நான் இறக்கும் முன் என்னால் இயன்ற அளவு அனைத்து நற்செயல்களையும் செய்தல் வேண்டும். ஏனெனில் மீண்டும் ஒரு முறை நான் வாழப் போவதில்லை” என்ற ட்ரம்மண்ட் (Drummond) என்னும் அறிஞரின் எழுத்துகள் அவரது வாழ்க்கையை மாற்றி யமைத்தது.

யாழ்ப்பாணத்திலுள்ள புனித பத்திரிசியார் கல்லூரியில் 1923 முதல் 1930 வரை பயின்றார். பின்னர், கொழும்பு நகரிலுள்ள புனித பெர்நாட் குருத்துவக் கல்லூரியில் (St.Bernard Seminary) சேர்ந்து 'மெய்யியல்' பிரிவைப் பாடமாக எடுத்துப் படித்து முதலாவதாகத் தேர்ச்சி பெற்றார்.

ரோம் நாட்டிற்குச் சென்று உர்பன் குருமடத்தில் மாணவராகி, உர்பன் பல்கலைக்கழகத்தில் 'சமயவியல்' படித்தார். ஆங்கிலத்திலும், இலத்தீனிலும் புலமை பெற்றிருந்த சேவியர், ரோமில் இத்தாலிய மொழி யினைத் திறம்படப் பயின்றதோடு, ஆங்கிலம், தமிழ், ஸ்பானிஷ், போர்த்துக்கீசியம், பிரெஞ்சு, ஜெர்மன், கிரேக்கம், எபிரேயம் ஆகிய மொழிகளையும் பயின்றார். ஹீப்ரு, சமஸ்கிருதம், ரஷ்யன், மலாய், சிங்களம், இலத்தீன் உட்பட 14 மொழிகளில் புலமை பெற்றவராக விளங்கினார்.

ரோமில் பயிலும் போது, "என் தமிழ்ப்பற்று மிகுந்ததே அன்றி குறைந்துவிடவில்லை. 'வீரமாமுனிவர் கழகம்' என்னும் அமைப்பை ரோம் நகரில் நிறுவி தமிழைப் பயின்று வந்தோம். வத்திக்கான் வானொலி நிலையத்திலிருந்து தமிழில் ஒலிபரப்பும் வாய்ப்பும் பெற்றோம். அங்ஙனம் ஒலிபரப்பும் தோறும் 'தேமதுரத் தமிழோசை உலகம் எல்லாம் பரவும் வகையில் செய்தோம்' எனக் கருதி களிப்புற்றோம்" எனத் தமது தமிழார்வம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

ரோமில் கத்தோலிக்க சமயக் குருவாக 1938 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் பணியில் சேர்ந்தார்.

தனிநாயகம் அடிகள் 'தொன்மையியல்' துறையில் மிகுந்த ஆர்வம் கொண்டார். அதனால், மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓர் ஆப்பிரிக்க ஆயரான புனித சைபீரியன் (St.Cyprian) என்பவரின் காலத்தைப் பற்றி ஆய்வு செய்து 'கார்த்தஜினியன் குருமார்' (The Carthaginian) என்ற தலைப்பில் ஆய்வேட்டைச் சமர்ப்பித்து வரலாற்றுத்துறையில் முனைவர் பட்டம் பெற்றார்.

ரோமில் முனைவர் பட்டம் பெற்ற தனிநாயகம் அடிகள் 1939 ஆம் ஆண்டு திருவனந்தபுரம் வந்தடைந்தார். பின்னர், தூத்துக்குடி மறை மாவட்டத்தில் 1940 ஆம் ஆண்டில் பணியில் சேர்ந்தார். நெல்லை மாவட்டத்திலுள்ள வடக்கன்குளம் என்னும் ஊரில் அமைந்துள்ள புனித தெரசாள் உயர்நிலைப் பள்ளியில் துணைத் தலைமை ஆசிரியராக ஐந்து ஆண்டுகள் பணிபுரிந்தார். அங்கு தமிழ், ஆங்கிலம், வரலாறு முதலிய பாடங்களைக் கற்பித்தார். வடக்கன்குளத்தில், பண்டிதர் குருசாமி சுப்பிரமணியம் ஐயரிடம் நான்கு ஆண்டுகள் தமிழ் பயின்றார். தமது பெயரைத் தமிழ்ப் பெயராகச் சூட்டிக் கொள்ள வேண்டும் என்னும் மிகுந்த ஆர்வத்தினால் 'சேவியர் ஸ்தனிஸ்லாஸ் தனிநாயகம்' என்று மாற்றிக் கொண்டார்.

தமிழ் மொழியின் இலக்கியச் சிறப்பும் கருத்து வளமும் அடிகளை ஈர்த்துக் கொண்டன. தொடர்ந்து தமிழ் பயின்று முதுகலைப் பட்டம் பெற, 1945 ஆம் ஆண்டு தமிழகம் வந்து சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுகலை மாணவராகச் சேர்ந்தார். அங்கு, பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார், பேராசிரியர். அருணாசலம்பிள்ளை, பூவராகன்பிள்ளை, பேராசிரியர். வ.சுப.மாணிக்கம், பேராசிரியர் அ. சிதம்பரநாதனார் முதலிய தமிழறிஞர்களிடம் தமிழ் இலக்கியம் பயின்றார்.

தேவாரம், திருவாசகம் முதலிய சைவசமய இலக்கியங்களையும், சங்க இலக்கியங்களையும் ஆர்வமுடன் கற்றறிந்தார். தமிழில் முதுகலைப்பட்டம் பெற்றபின், அடிகள் தொடர்ந்து கற்று தமிழ் இலக்கியத்தில் 1949ஆம் ஆண்டு இலக்கிய முதுகலைப் பட்டமும் (எம்.லிட்) பெற்றார். மேலும், பேராசிரியர் அ.சிதம்பரநாதனாரை வழிகாட்டியாகக் கொண்டு 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' என்னும் பொருள் பற்றி ஆய்வும் மேற்கொண்டார். அவரது ஆய்வோடு, 'நேச்சர் இன் ஏன்சியன்ட் தமிழ் பொயட்ரி' (Nature in Ancient Tamil Poetry) என்னும் நூலாக 1952 ஆம் ஆண்டு தமிழ் இலக்கியக் கழகத்தால் வெளியிடப் பட்டது. இந்நூலைத் திறனாய்வு செய்த பேராசிரியர் கமில் சுவலபில், "பழந்தமிழ் இலக்கியங்களைப் பற்றி இதுவரை எழுதப்பட்டவை அனைத்தையும் விட இந்நூல் பலவகையிலும் விஞ்சி நிற்கின்றது" என்று புகழ்ந்துரைத்துள்ளார்.

தூத்துக்குடியில் 1948 ஆம் ஆண்டு 'தமிழ் இலக்கியக் கழகம்' என்னும் அமைப்பினை அடிகள் நிறுவினார். அந்த அமைப்பின் மூலம் பல நூல்களை வெளியிட்டார்.

அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஜப்பான், பிரேசில், பெரு, மெக்சிகோ, ஈகுவடார், போர்ச்சுக்கல், இந்தோனேசியா, கம்போடியா, தாய்லாந்து, வியட்நாம், கனடா, ஜெர்மனி, இத்தாலி, பிரான்சு, ஸ்காண்டிநேவியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, மலேசியா போன்ற நாடு களுக்கு 1950 ஆம் ஆண்டு சுற்றுப் பயணம் மேற் கொண்டு தமிழ் மொழியின் வளம், தமிழ் இலக்கியங் களின் சிறப்புகள் குறித்துச் சொற்பொழிவுகளாற்றினார். பின்னர் 1952 ஆம் ஆண்டு இலங்கை திரும்பிய அடிகள், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறையில் விரிவுரையாளராகப் பணியில் சேர்ந்தார்.

கொழும்பில் 'தமிழ்ப் பண்பாட்டுக்கழகம்' என்னும் அமைப்பை நிறுவினார். இலங்கையில் 'தமிழ்ப்

பண்பாடு' அன்றும், இன்றும், இனியும்' என்ற பொருளில் ஆங்கிலத்தில் சொற்பொழிவு நிகழ்த்தினார். இந்தச் சொற்பொழிவு நூல் வடிவம் பெற்று மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

இலங்கையில், தமிழ் அரியாசனத்திலிருந்து தூக்கி வீசப்படுவது நடந்தேறிக் கொண்டிருந்தது. உலக வாழ்வைத் துறந்த தனிநாயகம் அடிகள், தமிழைத் துறக்க முடியாதவராகக் கலக்கமடைந்தார்.

**1956** ஆம் ஆண்டு, இலங்கைப் பிரதமராக இருந்த எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பணடாரநாயக்காவை, தூதுக் குழுவினருடன் சென்று சந்தித்துத் தமிழ் மொழியின் உரிமைக்காக வாதாடினார். மேலும், தனிச்சிங்கள மொழிச் சட்டம் தமிழ் மக்களைப் பாதிக்கும் கொடுங்கோன்மைச் சட்டம் என்று அறிவு பூர்வமாக எடுத்துரைத்தார்.

சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளால் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியும் என்று தகுந்த ஆதாரங்களுடன் பெல்ஜியம், கனடா, சுவிட்சர்லாந்து முதலான நாடுகளின் முன்னுதாரணங் களுடன் எடுத்துரைத்தார். ஆனால், பிரதமர் பண்டார நாயக்கா அவற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் "வாள் முனையில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண் பதையே நான் விரும்புகின்றேன்" (Father, I will rather decide it on the point of sword) என்று பிரதமர் பண்டார நாயக்கா ஆணித்தரமாக அறிவித்தார். அவரது பதில் தனிநாயகம் அடிகளாருக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

மொழிப் பிரச்சினை என்பது அரசியல் எல்லைகளை விட விரிந்து பரந்தது. அது தத்துவப் பிரச்சினை; குடியாட்சியமைப்புமுறைக் கோட்பாட்டுப் பிரச்சினை; அக்கோட்பாட்டை நடைமுறைப்படுத்தும் பிரச்சினை; அது ஒழுக்கம் சார்ந்த பிரச்சினை; சமூகவியல் - மனித இயக்கவியல் பிரச்சினை என்று தனிநாயகம் அடிகள் மொழிப்பிரச்சினையின் பல பரிமாணங்களை விளக்கினார். எனவே, மொழிப்பிரச்சினையைப் பற்றிச் சிந்திப்பது அரசியல்வாதிகளுக்கு மட்டும் உரியதல்ல. அரசியல் சிந்தனையாளர்கள், தத்துவவாதிகள், சட்ட வல்லுநர்கள், சமூகவியல் அறிஞர்கள் ஆகியோருக்கும் அது உரியது என்றார் அடிகள்.

இலங்கைப் பாராளுமன்றத்தில் **05.06.1956** அன்று கொண்டுவரப்பட்ட 'தனிச் சிங்கள சட்ட மசோதா'வை எதிர்த்து, தமிழர் தலைவர் தந்தை செல்வா தலை மையில், கோப்பாய் கோமான் வன்னிய சிங்கம், இரும்பு மனிதன் நாகநாதன் முதலியோர் உட்படத் தமிழ் மக்கள் கொழும்பில் உள்ள பாராளுமன்றத்துக்கு முன்னால் சத்தியாகிரகம் மேற்கொண்டனர். சிங்களக் காடையர்களின் வெறியாட்டம் தாண்டவமாடியது. தமிழின மக்கள் சிங்களக் காடையர்களால் படுகொலை செய்யப்பட்டனர். சிங்களக் காடையர்கள் மத்தியில் வீரத்துறவியான தனிநாயகம் அடிகள் சத்தியாகிரகத்தில் கலந்து கொண்டு இலங்கை அரசுக்கு தமது எதிர்ப்பைக் காட்டினார்!

"மொழி உரிமையைப் பறிப்பது நாட்டின் அமைதிக்கும் ஒற்றுமைக்கும் ஊறு விளைவிக்கும் என்பதால் மொழிகளின் உரிமைகளையும் பன்னாட்டுச் சட்டங்களையும் பற்றிக் கவலைப்படாமல் அவசரப் பட்டுச் சட்டம் எதுவும் இலங்கை அரசு கொண்டு வருவது முறையும் நீதியும் ஆகாது. பெரும்பான்மை மக்களின் மொழியே ஆட்சி மொழி என்பது சிங்கள மேலாண்மைக்கும் சிங்கள ஆட்சிக்கும் வழிவகுக்கும். ஒரு தேசம் ஒரு மொழி என்று பலமொழி பல தேசியம் உள்ள நாட்டில் பேசுவது ஒற்றுமையையும் அமைதியையும் குலைப்பது ஆகும். மொழிச் சிக்கல் என்பது வெறும் மொழிச் சிக்கல் மட்டும் அல்ல. அது மெய்ம்மை, சட்டம், அறிவியல், சமூகவியல், மனித வாழ்வியல் தொடர்பானது. அரசியல் ஒருமைப்பாடும் பண்பாட்டுச் சுதந்திரமும் வேண்டும். ஸ்விட்சர்லாந்தில் ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலியன், உரோமன்சு ஆகியன சம மதிப்புள்ள ஆட்சி மொழிகளாக உள்ளன. எனவே இலங்கையில் சிங்களமும் தமிழும் சம மதிப்புடன் தேசிய மொழிகளாகவும் ஆட்சி மொழிகளாகவும் அறிவிக்கப் பட வேண்டும்" என்று வாதாடினார் அடிகள்.

"மக்களின் அடிப்படை உரிமைகளாகிய மத உரிமை, மொழி உரிமை, பண்பாட்டுரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை முதலிய துறைகளில் சிறுபான்மையோரைத் தாக்கும் விதத்தில் பெரும்பான்மையோருக்குச் சட்டம் வகுக்க உரிமை இல்லை. சிங்கள மக்கள் தமக்கு அரசியல் மொழியாகச் சிங்கள மொழியை அமைக்க முழு உரிமை உண்டு. ஆனால், தமிழ் மக்களின் அரசியல் மொழி யாது என்பதைப் பற்றி முடிவு செய்யத் தமிழ் மக்களுக்கே உரிமை உண்டு" என அடிகள் தமது 'நம் மொழி உரிமைகள்' என்னும் நூலில் எடுத்துரைத் துள்ளார்.

இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் சிங்கள மொழி ஆதிக்கத்தைத் தீவிரப்படுத்த **1961** ஆம் ஆண்டு, இலங்கை அரசு தீவிரம் காட்டியது. அதை எதிர்த்து, தமிழர் தலைவர் தந்தை செல்வா தலைமையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சத்தியாகிரகப் போராட்டம் தீவிரமாக நடைபெற்றது. தனிநாயகம் அடிகள், சத்தியாகிரகப் போராட்டத்திற்கு ஆதரவு தேடும் வகையில், தமிழ் மொழிக்குள்ள உரிமைகளையும், சிங்கள மக்கள் நல்வாழ்வுக்குத் தமிழர்கள் ஆற்றிய பணிகளையும் விளக்கி ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டார். சத்தியாகிரகப் போராட்டத்திற்கு நிதி வசூல் செய்து உதவினார்.

தமிழா! "தமிழை இழந்து நம் ஒப்பற்ற இலக்கியங் களையும் பண்பாட்டினையும் இழப்பதா! தமிழை இழந்து நம் செல்வச் சமய நூல்களையும், வழிபாட்டுப் பாடல்களையும் இழப்பதா! தமிழை இழந்து நம் கவின்கலைகளை இழப்பதா! தமிழை இழந்து பண்பாடின்றி புறக்கணிக்கப்பட்ட கீழ் வகுப்பினராக நம் சொந்த நாட்டில் வாழ்வதா! தன்னலம் கருதித் தமிழ் இனத்தைக் காட்டிக் கொடுப்பதா? பெரும்பான்மை யோரின் அடிமைகளாக வாழ்வதா - அல்லது சாவதா - இன்றேல் சம உரிமைகளுடன் தனி இனமாக மானத் துடனும் புகழுடனும் சேர்ந்து இயங்குவதா? அம் மான நிலையை அடைய விடாது முயல்க!" எனத் தமிழர் களுக்கு வேண்டுகோள் விடுத்தார் தனிநாயகம் அடிகள்.

மலேயா பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைமைப் பேராசிரியராக 1961ஆம் ஆண்டு பணி ஏற்றார். 1969 ஆம் ஆண்டு வரை இங்குப் பணி புரிந்தார். 1970-71 ஆம் ஆண்டுகளில் பாரீசு பல்கலைக் கழகத்தில் வருகை தரு பேராசிரியராகவும், 1971-72 ஆம் ஆண்டுகளில் நேப்பிள்ஸ் பல்கலைக்கழகத்தில் வருகை தரு பேராசிரியராகவும் அடிகள் பணியாற்றினார்.

புதுடெல்லியில் 26 ஆவது கீழைத்தேயவியல் மாநாடு 1964 ஆம் ஆண்டு நடைபெற்றது. மலேசியப் பல்கலைக்கழகத்தின் சார்பில் தனிநாயகம் அடிகள் கலந்து கொண்டார். இம்மாநாட்டில் கலந்து கொண்ட தமிழறிஞர் பேராசிரியர் வி.அய். சுப்பிரமணியனும் இணைந்து, மாநாட்டில் கலந்து கொண்ட தமிழியல் அறிஞர்களுக்கான ஒரு சிறப்புக் கூட்டத்தைப் புது டெல்லியில் 07.01.1964 அன்று கூட்டினார். இக் கூட்டத்திற்கு 15 நாடுகளைச் சேர்ந்த 60 தமிழியல் அறிஞர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் தான் 'அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம்' என்னும் அமைப்பு தொடங்கப்பட்டது. அதன் இணைச் செயலாளர்களாகப் பேராசிரியர் கமில் சுவலபில், தனிநாயகம் அடிகள் முதலியோர் தேர்வு செய்யப் பட்டனர். பேராசிரியர் ஜேன் ஃபிலியோசா தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் தாமஸ் பரோ, அமெரிக்க நாட்டு பேராசிரியர் எமனோ, பன்மொழிப்புலவர் தெ.பொ. மீனாட்சிசுந்தரம், தமிழறிஞர் மு. வரதராசன் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

தனிநாயகம் அடிகள் மலேசியாவில் 1966 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் முதல் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார். இம்மாநாட்டில் 22 நாடுகளைச் சேர்ந்த 132 பிரதிநிதிகளும், 40 பார்வை யாளர்களும் கலந்து கொண்டு 150 ஆராய்ச்சிக் கட்டுரைகளை அளித்தனர்.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு 1968 ஆம் ஆண்டு சென்னையில் சிறப்பாக நடைபெற்றது. நிரந்தரமான தமிழாராய்ச்சி நிறுவனம் ஒன்று அமைத்து உலகத் தமிழாராய்ச்சி மையம் அமைக்கப்பட வேண்டும் என்ற அடிகளின் கனவு அம்மாநாட்டில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது.

'நம் மொழியுரிமைகள்' என்னும் பிரசுரத்தில் தனிநாயகம் அடிகள், "சைவம், வைணவம், இசுலாம், கத்தோலிக்கம், புராட்டஸ்தந்து என்று பிரிந்து தொண்டாற்றும் மனப்பான்மையும், கொழும்புத் தமிழர், மலைநாட்டுத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர், யாழ்ப்பாணத் தமிழர் என்று வேற்றுமை பாராட்டுவதும் நம் இனத்திற்கு நன்மை பயக்காத முறைகள் ஆகும். தமிழ் இனத்திற்கு ஒற்றுமையும், உறுதியும் ஏற்படுவதற்கு நம் எழுத்தறிஞர்களும், மேடைக் கலைஞர்களும் ஒத்துழைத்தல் வேண்டும். நமக்குப் பதிய பாடல்கள் வேண்டும். சின்னங்கள் வேண்டும். சிலைகள் வேண்டும். நமக்கென கலைக்கழகங்கள் வேண்டும். பல்கலைக் கழகங்கள் வேண்டும்" எனத் தமிழர், தமிழ் மொழி வளர்ச்சிக்கான வழியைச் சுட்டிக் காட்டுகிறார் தனிநாயகம் அடிகள்.

"பல வெளிநாட்டு அறிஞர்களும் தமிழ் பற்றி ஆராயவும், ஆய்வுக் கட்டுரைகள் எழுதவும் அடிகளாரின் ஆங்கில இதழான 'Tamil Culture' தூண்டுதலாகவும், கட்டுரைகளை வெளியிடக் கருவியாகவும் இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை" என்று அமுதன் அடிகள் குறிப்பிட்டுள்ளார்.

"உலக மக்கள் அனைவரும் தமிழ்ப்பண்பாட்டின் மேம்பாட்டையும் சிறப்பையும் தமிழ் இலக்கியத்தின் இனிமையையும் அறிய வேண்டும் என்பதற்காக அடிகள் தமிழ்ப்பண்பாடு (Tamil Culture) என்னும் ஆங்கில முத்திங்கள் இதழை உருவாக்கி, அதன் நிறுவன ஆசிரியராகப் பணியாற்றினார். உலகில் உள்ள பல பல்கலைக் கழகங்களுக்கு இந்த இதழை அனுப்பித் தமிழின் புகழ் மணக்கப்பாடுபட்டார்" எனப் போற்றிப் புகழ்ந்துள்ளார் பேராசிரியர் சு.வித்தியானந்தன்.

"தமிழ்ப் பண்பாடு, மொழி, வரலாறு, இலக்கியம் ஆகியவை இந்த ஆய்விதழில் பொருளாக வரும். உண்மையை நிலைநிறுத்த இவற்றைப் பற்றிய விளக்கங் களை உலகில் உள்ள பலரையும் சென்றடையச் செய்வது கடமை. மறைந்து கிடக்கும் இவ்வுயர்வுகளை மற்றவர் களுடன் பகிர்ந்து கொள்ளாமல் இருப்பது மன்னிக்க முடியாத தன்மையாகும். எனவே, வெகுகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இத்தொண்டைச் செய்வதற்காக இவ்விதழ் வருகிறது" என Tamil Culture இதழ் வெளியீடு குறித்து அறிவித்தார் அடிகள்.

"உலக நாகரிகத்துக்குத் தமிழ்ப்பண்பாடு தந்துள்ள கொடையைப் பண்பாட்டாளர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டியது தமிழர்களுக்கும் தமிழின்பால் ஈடுபாடு கொண்டுள்ள பண்பாட்டு ஆராய்ச்சியாளர்களுக்கும் மிகப்பெரும் கடமையாகும்" என்றார் அடிகள்.

"தமிழ்ச் சமூகவியல் உலகச் சமூகவியலுக்கும், தமிழ் வரலாறு உலக வரலாற்றுக்கும், தமிழ் இலக்கியம் உலக இலக்கியத்துக்கும், தமிழ் இசை உலக இசைக்கும், தமிழ் மனித நேயம் உலக மனிதநேயத்துக்கும், வளம் சேர்த்து உலகப் பல்கலைக்கழகங்களில் தனக்குரிய இடத்தைப் பெறவேண்டுமாயின் அதற்குரிய ஆய்வுகள் தமிழ் மண்ணில் இடம் பெற்றாக வேண்டும். தமிழ் மண்ணில் மலரும் தமிழ் ஆர்வமே உலக அளவில் தமிழ் ஆர்வத்தை வளர்க்கும். வெளிநாட்டு அறிஞர்களின் ஆய்வுக்குத் தேவையான ஆதாரங்களைத் தமிழ்நாட்டு அறிஞர்களே தேடிக்குவிக்க வேண்டும்" என அடிகள் வலியுறுத்தியுள்ளார்.

"இவற்றைப் புதுமைக் காலச் சிந்தனைகளை வெளிப்படுத்தக்கூடிய மொழியாகவும், மக்களாட்சியில் குடிமக்கள் தகுதியோடிருக்க உதவும் சரியான கருவியாகவும் தமிழ் விளங்க வேண்டும் என்றால் நம் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்றுவிப்பதிலும் தமிழாசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பதிலும் தனிக்கவனம் செலுத்த வேண்டும்."

"தாய் மொழி கற்பித்தலில் மறுபயிற்சி அளித்தாக வேண்டும். இளம் உள்ளங்களில் நுண்பொருள் தொடர்பான வரையறைகளையும் (Definition), இலக்கணச் சொற்றொடர்களையும் மனனம் செய்ய மாணவர்களை வற்புறுத்துவதால் அவர்கள் உள்ளத்தில் மொழித் தொடர்பான பாடங்கள் என்றாலே அவர்களுக்கு வெறுப்பு உண்டாகும் என்பது திண்ணம். சாதாரண உரைநடையே படிக்கத் தெரியாத இளம் சிறார்களுக்கு இப்படிச் செய்வதன் மூலம் விரக்தி மனப்பாங்கை நாம் உண்டு பண்ணுகிறோம். மொழியின் மேல் ஆர்வத்தையும். விருப்பத்தையும் அவர்கள் இதயத்தில் தோற்றுவிக்க எளிமையான சுவையுள்ள நூல்களை வெளியிட வேண்டும். விளக்கவுரைகள் தெளிவாகவும், எழுத்துப் பிழைகள் இல்லாமலும் நூல்கள் வெளியிடப்பட வேண்டும். தமிழ் மொழியைக் கற்பிக்கின்றவர்கள் பண்புள்ளவர்களாக, அதிக நூல்களைப் படித்தவர்களாக. பக்குவம் அடைந்தவர்களாக விளங்க வேண்டும்" எனத் தாய்மொழி வழிக்கல்வியை வலியுறுத்தியுள்ளார் அடிகள்.

'தமிழ்த்தூது' 'ஒன்றே உலகம்' 'திருவள்ளுவர்' 'நம் மொழி உரிமைகள்' 'தமிழர் பண்பாடு நேற்றும் இன்றும் நாளையும்' 'உலக ஒழுக்கவியலில் திருக்குறள்' முதலிய தமிழ் நூல்களையும், 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' (Nature in Ancient Tamil Poetry), 'பழந்தமிழ் இலக்கியத்தில் கல்விச் சிந்தனைகள்' (Ancient Tamil Education) Aspects of Tamil Humanism, Indian Thoughts in ancient Tamil Literature ஆகிய ஆங்கில நூல்களையும், 'தமிழியல் நூல்கள் ஆய்வடங்கல்' (A reference Guide to Tamil Studies) 'வெளிநாடுகளில் தமிழ்க் கல்வி' (Tamil Studies Abroad) 'தமிழ்ப்பண்பாடும் நாகரிகமும்' (Tamil Culture and civilization) ஆகிய மூன்று நூல்களையும் தொகுத்து அளித்து உள்ளார்.

தனிநாயகம் அடிகளார் பல உலக நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார். அப்பயணங்களின் போது ஹார்வர்ட் பல்கலைக்கழகம், பாரிஸ் நூலகம், வத்திக்கான் நூலகம் ஆகிய இடங்களுக்குச் சென்று தமிழில் அச்சேறிய முதல் நூல்களைக் கண்டுபிடித்தார். இந்திய மொழிகளுள் முதல் அச்சுவாகனம் ஏறிய மொழி தமிழே! என உலகுக்கு அறிவித்தார். 'தம்பிரான் வணக்கம்' (1578), 'கார்த்தில்லா' (CARTILHA) என்ற சிறிய தமிழ்நூல் லிஸ்பன் நகரில் 1554 ஆம் ஆண்டு பிப்ரவரி 11 ஆம் நாள் அச்சேறியது.

'கிறீத்தியானி வணக்கம்' என்ற தமிழ் நூல் கொச்சியில் நவம்பர் 14ஆம் நாள் 1579 ஆம் ஆண்டில் அச்சேற்றப்பட்டது. 'அடியார் வரலாறு' (FLOS SANCTORUM) என்ற தமிழ் நூல் தூத்துக்குடியில் 1586 ஆம் ஆண்டு அச்சேறியது. தமிழ்மொழியில் அச்சேறிய முதல் தமிழ் நூல்களைக் கண்டுபிடித்து தமிழ்மொழியின் பெருமையைப் பறைசாற்றிய பெருமை அடிகளையே சாரும்.

1981 ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் தனிநாயகம் அடிகளாரின் சிலை, அன்றைய தமிழக அரசின் கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகத்தால் திறந்து வைக்கப்பட்டது. இவரது மறைவுக்குப்பின் 1981 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அடிகளின் தமிழ்ச் சேவையைப் பாராட்டி கலாநிதிப் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. இலங்கை யாழ்ப்பாணம் அருகில் நெடுந்தீவு மக்கள் தனிநாயகம் அடிகளாருக்கு ஆளுயர சிலை அமைத்துள்ளனர்.

'தமிழியல்' ஆய்வை உலக அளவில் அறிவுத் துறையாக உயர்த்திடவும், உலகத்தின் பல நாடுகளில் உள்ள தமிழர்களின் மத்தியில் ஒற்றுமையுணர்வை ஏற்படுத்திடவும், அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் அமைக்கப்படவும், பிறநாட்டுத் தமிழர்களுக்குத் தமிழ்க் கல்வி கிடைக்கப் பெறவும், பிறநாட்டு நூலகங்களில் தமிழ் நூல்கள் பேணப்படவும், அரிய தமிழ் நூல்களைத் தேடி எடுத்து மீண்டும் தமிழ் உலகுக்கு அறிமுகப் படுத்திடவும் அயராது பாடுபட்ட தனிநாயகம் அடிகள் தமது 67ஆவது வயதில் 01.09.1980 ஆம் நாள் இயற்கை எய்தினார்.

●